

# திருமதி இராஜேஸ்வரி நீக்கிலஸ்

அவர்களின் முதலாவது நினைவு தினம்

04.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை,

## 274 தேவாரத் திருக்கோவில்கள் போற்றி

## தலப்புராணங்களில் பைரவர் பனுவல்கள்

## அருள்மிகு ஆபதுத்தாரணர் மாலை (பைரவர் மாலை)

## அபிராமி அந்தாதி

## கந்த ஷஷ்டி கவசம் மற்றும்

# பலன்தரும் திருப்பதிகங்கள் [தேவாரம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமாவழி

| சவிரிமுத்து அந்தோனியாப்பிள்ளை<br>இராசம்மா<br><br>நீக்கிலஸ் | நாகராசா<br>அமிர்தாம்பாள்<br><br>இராஜேஸ்வரி<br>சிவானந்தசோதி |
|---|---|

நீக்கிலஸ்
இராஜேஸ்வரி

| மங்களேஸ்வரன்<br>நளாயினி<br><br>ராகவி<br>ராகவன் | மனோறஞ்சன்<br>உதயா<br><br>செந்தூரன்<br>மதுசன் | மகேந்திரன்<br>வாசுகி<br><br>கார்த்தீபன்<br>ராகேஸ் | வத்சலா<br>ஜெயக்குமார்<br><br>சிவகணேஸ்<br>ஜெயவத்சன் | கிருபாநிதி<br>மாலினி<br><br>அபிராமி<br>திருமுருகன்<br>திருகுமரன்<br>திருஅழகன்<br>சிவகாமி | ஜெயநிதி<br>றேச்சல்<br><br>இமோஜன்பிரியா<br>அமேலியாஜனனி<br>ஈஸ்வரன் |
|---|---|---|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி இராஜேஸ்வரி நீக்கிலஸ்

## காணிக்கை...

இந்த உலகில், ஒவ்வொருவரும் யாராவது ஒருவரை, தமக்கு எல்லாமுமாய்க் கருதிக் கொள்வர். அப்படி எனக்கு எல்லாமுமாய் இருந்த என் அக்கா இராஜேஸ்வரி கடந்த வருடம் 13.02.2014 அன்று தனது 78வது அகவையில் மறைந்த போது, தாயை இழந்த பிள்ளையைப் போல் ஆனேன். ஒரே ஒரு உடன்பிறந்தாளும் இந்த மண்ணை விட்டு விடைபெற்ற கொடிய துயரம் என் நெஞ்சில் பாரமாய் வந்து அமர்ந்து கொண்டது.


ஒரு கிறித்தவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாலும், இறுதிவரை சைவப் பெண்மணியாகவே வாழ்ந்து மறைந்தார். எந்த நிலையிலும், தன்னுடைய சுயத்தை இழக்காமல், அதே நேரத்தில் காதல் கணவனின் கைப்பிடித்துக் கொண்டு, பல்கலைக் கழகமாய்த் தன் குடும்பத்தை வளர்த்தெடுத்தார். என் அத்தானும், அக்காவின் உள்ளம் அறிந்து, 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பதற்கிணங்க நிறைவாக வாழ்ந்தவர்.

நானும், அக்காவும் எங்கள் மண்ணில் விளையாடி வளர்ந்த அந்த இனிமையான நாள்களின் நினைவுகள்கூட, எனக்கு துன்பத்தையே தருகின்றன. என் நினைவு தெரிந்த நாளில் இருந்து, எனக்கு எல்லாமுமாய் - அம்மாவுமாய் இருந்தவரின் நினைவுகள் மட்டுமே இனி எனக்குச் சொந்தம் என்பதை அறிவு உணர்ந்தாலும், உள்ளம் ஏற்க மறுக்கிறது.

அவரின் நல்ல உள்ளம், சிவனின் அடிகளில் அமைதி பெற வேண்டுகிறேன்.

தாய்க்கு நிகரான தமக்கையின் நினைவலைகளுக்கு இந்த மலர் காணிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்க்கை துணையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து

ஐந்து கரத்தானை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி யென்றிடக் கருமமாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# திருமறைத் தோத்திரப் பாடல்கள்

திருமுறையே சைவ நெறிக்கருவூலம் செந்தமிழின் தேன்பாகாகும்
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ்வேதம்
திருமுறையே சிவபெருமான் கரம்வருந்த எழுதிய அருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

## முதலாம் திருமுறை

வண்டார்குழ லரிவையோடு பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை தவளம்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே

செல்வ நெடுமாடஞ் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே

## இரண்டாம் திருமுறை

எண்ணானை பெண்ணமர்சீர் இமையோர் கட்குக்
கண்ணானைக் கண்ணொருமூன் றுடை யானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேர்ப்
பெண்ணானைப் பேசநின் றார்பெரி யோர்களே.

செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
அந்தமுத லாகிநடு வாயபெரு மானைப்
பந்தனுரை செந்தமிழ்கள் பத்துமிசை கூர
வந்தவண மேத்துமவர் வானமுடையாரே

## மூன்றாம் திருமுறை

தருமண லோதஞ்சேர் தண்கடல் நித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயும் நல்லூர்ப்
பெருமணத் தான் பெண்ணோர் பாகங்கொண் டானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே

## நான்காம் திருமுறை

பெருந்திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனி தன்பா லங்கொரு பாக மாகத்
திருந்திட வைத்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார் ஐயன்ஐ யாறனாரே.

## ஐந்தாம் திருமுறை

துன்ப மின்றித் துயரின்றி யென்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்கு
அன்ப னாயிடும் ஆனைக்கா அண்ணலே!

ஓத மார்கட லின்விடம் உண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதோர் பாகன் வலஞ்சுழி ஈசனைப்
பாதம் ஏத்தப் பறையும் நம் பாவமே!

## ஆறாம் திருமுறை

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமர்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்
நற்சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

## ஏழாம் திருமுறை

குரும்பைமுலை மலர்குழலி கொண்டதவம் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடு மணிபொழில்சூழ் வயலின்
குரும்பருகே கருங்குவளைக் கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே.

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமுந்திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந்தவிரப் பணிப்பானை
இன்னதன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

## எட்டாம் திருமுறை – திருவாசகம்

மலையரையன் பொற்பாவை வாணுதலான் பெண்திருவை
உலகறியத் தீவோட்டான் என்னமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிகுங்காண் சாழலோ!

பால்நினைந்து ஊட்டுந் தாயினுஞ்
சாலைப் பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே யானுனைத்
தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்த தருளுவதினியே.

## எட்டாம் திருமுறை – திருக்கோவையார்

சொற்பால் அமதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நான் இவளாம் பகுதிப்
பொற்பார் அறிவார், புலியூர்ப் புனிதன் பொதியில் வெற்பில்
கற்பா வியவரை வாய்க் கடிதோட்ட களவகத்தே.

## ஒன்பதாம் திருமுறை – திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகு திருவாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப் பிறந்த
பழஅடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்து
ஆண்டுகொண்டு ஆருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## ஒன்பதாம் திருமுறை – திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ?
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம் அள் ளூறும்
தொண்டர்க்கு எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மாளி கையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுவதுமாம் கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாந்திருமுறை – திருமந்திரம்

அந்த நடுவிரல் ஆதி சிறுவிரல்
இந்த வழிமுறை மாறியுரை செய்யும்
செந்த மிழாதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நலமுரைத் தானே

காலினில் ஊறும் கரும்பினில் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போல்உளன் எம்இறை
காவலன் எங்கும் கலந்துநின் றானே

## பதினோராந்திருமுறை – கோயில் நான்மணிமாலை

உரையில் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையும் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லை மன்றினும் நடம்.
ஆடும்அம்பல வாண! நீடு
குன்றக் கோமான் தன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெரும ! நின்
தாதவிழ் கொன்றைத்தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்
தழங்கும் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை ஆறும் பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும், பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியுமென்(று)
ஒருபதி னாயிரம் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர் முன்புகுந் தறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பிற் காணொணா அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்
கானில்வால் நுளம்பும் கருடனா தலினே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராந்திருமுறை – திருமுகப்பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குட சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

## பனிரெண்டாம் திருமுறை – பெரிய புராணம்

பொங்கு விடந் தீர்ந்தெழுந்து நின்றான் சூழ்ந்த
பொருவில்திருத் தொண்டர்குழாம் பொலிய ஆர்ப்ப
அங்கையினை உச்சியின்மேல் குவித்துக் கொண்டாங்கு
அருட்காழிப் பிள்ளையார் அடியில் வீழ்ந்த
நங்கையவள் தனை நயந்த நம்பியொடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல்தவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார் தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பாம்.

★★★★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசாமிகள் அருளிய

# மனுமுறை கண்ட வாசகம்

*நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!*
*வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!*
*தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!*
*கலந்த சினேகரைக் கலகஞ் செய்தேனோ!*
*மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்தேனோ!*

*குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!*
*ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!*
*தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!*
*மண்ணோரம் பேசி வாழ்வழித் தேனோ!*
*உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!*

*களவு செய்வோருக்கு உளவு சொன்னேனோ!*
*பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!*
*ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ!*
*வரவுபோக் கொழிய வழியடைத் தேனோ!*
*வேலை யிட்டுக் கூலிகுறைத் தேனோ!*

*பசித்தோர் முகத்தைப் பாராதிருந் தேனோ!*
*இரப்பார்க்குப் பிச்சை இல்லையென் றேனோ!*
*கோள் சொல்லிக் குடும்பம் குலைத் தேனோ!*
*நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ!*
*கலங்கி யொளிந்தோரைக் காட்டி கொடுத்தேனோ!*

*கற்பழிந் தவளைக் கலந்திருந் தேனோ!*
*காவல் கொண்டிருந்த கன்னிகை அழித் தேனோ!*
*கணவன்வழி நிற்போரைக் கற்பழித் தேனோ!*
*கருப்ப மழித்துக் களித்திருந் தேனோ!*
*குருவை வணங்கக் கூசி நின்றேனோ!*

*குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!*
*கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ!*
*பெரியோர் பாட்டில் பிழைசொன் னேனோ!*
*பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத் தேனோ!*
*கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத் தேனோ!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்சுவை யுண்டு உடல் வளர்த் தேனோ!
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ!
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளந் தூர்த்தேனோ!
வெய்யிலுக் கொதுங்கும் விருட்ச மழித்தேனோ!

பகைகொண்டு அயலோர் பயிரழித்தேனோ!
பொதுமண்டபத்தைப் போயிடித் தேனோ!
ஆலயக் கதவை அடைத்து வை(த்?)தேனோ!
சிவனடி யாரைச் சீறி வைதேனோ!
தவஞ் செய் வோரைத் தாழ்வு சொன்னேனோ!

சுத்த ஞானிகளைத் தூடண்ஞ் செய்தேனோ!
தந்தையார் மொழியைத் தள்ளி நடந்தேனோ!
தெய்வ மிகழந்து செருக்கடைந் தேனோ!
என்ன பாவம் செய்தேனோ! இன்னதென் றறியேனே!

ஔவையார் இயற்றிய

## ஆத்திச்சூடி

கடவுள் வணக்கம்

ஆத்திச் சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகம் சுருக்கேல்.

உயிர்மெய் வருக்கம்

14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப் போல் வளை.
16. சனி நீராடு.
17. ஞயம்பட உரை.
18. இடம்பட வீடு எடேல்.
19. இணக்கம் அறிந்து இணங்கு.
20. தந்தை தாய்ப் பேண்.
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர் செய்.
23. மண் பறித்து உண்ணேல்-.
24. இயல்பு அலாதன செய்யேல்.
25. அரவம் ஆட்டேல்.
26. இலவம் பஞ்சில் துயில.
27. வஞ்சகம் பேசேல்.
28. அழகு அலாதன செய்யேல்.
29. இளமையில் கல்.
30. அரனை மறவேல்.
31. அனந்தல் ஆடேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ககர வருக்கம்

32. கடிவது மற.
33. காப்பது விரதம்.
34. கிழமைப்பட வாழ்.
35. கீழ்மை அகற்று.
36. குணமது கைவிடேல்.
37. கூடிப் பிரியேல்.
38. கெடுப்பது ஒழி.
39. கேள்வி முயல்.
40. கைவினை கரவேல்.
41. கொள்ளை விரும்பேல்.
42. கோதாட்டு ஒழி.
43. கௌவை அகற்று.

சகர வருக்கம்

44. சக்கர நெறி நில்.
45. சான்றோர் இனத்து இரு.
46. சித்திரம் பேசேல்.
47. சீர்மை மறவேல்.
48. சுளிக்கச் சொல்லேல்.
49. சூது விரும்பேல்.
50. செய்வன திருந்தச் செய்.
51. சேரிடம் அறிந்து சேர்.
52. சையெனத் திரியேல்.
53. சொற் சோர்வு படேல்.
54. சோம்பித் திரியேல்.

தகர வருக்கம்

55. தக்கோன் எனத் திரி.
56. தானமது விரும்பு.
57. திருமாலுக்கு அடிமை செய்.
58. தீவினை அகற்று.
59. துன்பத்திற்கு இடம் கொடேல்.
60. தூக்கி வினை செய்.
61. தெய்வம் இகழேல்.
62. தேசத்தோடு ஒத்து வாழ்.
63. தையல் சொல் கேளேல்.
64. தொன்மை மறவேல்.
65. தோற்பன தொடரேல்.

நகர வருக்கம்

66. நன்மை கடைப்பிடி.
67. நாடு ஒப்பன செய்.
68. நிலையில் பிரியேல்.
69. நீர் விளையாடேல்.
70. நுண்மை நுகரேல்.
71. நூல் பல கல்.
72. நெற்பயிர் விளைவு செய்.
73. நேர்பட ஒழுகு.
74. நைவினை நணுகேல்.
75. நொய்யா உரையேல்.
76. நோய்க்கு இடம் கொடேல்

பகர வருக்கம்

77. பழிப்பன பகரேல்.
78. பாம்பொடு பழகேல்.
79. பிழைபடச் சொல்லேல்.
80. பீடு பெற நில்.
81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.
82. பூமி திருத்தி உண்.
83. பெரியாரைத் துணைக் கொள்.
84. பேதைமை அகற்று.
85. பையலோடு இணங்கேல்.
86. பொருள்தனைப் போற்றி வாழ்.
87. போர்த் தொழில் புரியேல்.

மகர வருக்கம்

88. மனம் தடுமாறேல்.
89. மாற்றானுக்கு இடம் கொடேல்.
90. மிகைபடச் சொல்லேல்.
91. மீதூண் விரும்பேல்.
92. முனைமுகத்து நில்லேல்.
93. மூர்க்கரோடு இணங்கேல்.
94. மெல்லியல் நல்லாள் தோள்சேர்.
95. மேன்மக்கள் சொல் கேள்.
96. மை விழியார் மனை அகல்.
97. மொழிவது அற மொழி.
98. மோகத்தை முனி.

வகர வருக்கம்

99. வல்லமை பேசேல்.
100. வாது முற்கூறேல்.
101. வித்தை விரும்பு.
102. வீடு பெற நில்.
103. உத்தமனாய் இரு.
104. ஊருடன் கூடி வாழ்.
105. வெட்டெனப் பேசேல்.
106. வேண்டி வினை செயேல்.
107. வைகறைத் துயில் எழு.
108. ஒன்னாரைத் தேறேல்.
109. ஓரம் சொல்லேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் இயற்றிய

# கொன்றை வேந்தன்

கடவுள் வணக்கம்

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்று மேத்தித் தொழுவோம் யாமே

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லற மல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினுஞ் செய்வன செய்
ஒருவனைப் பற்றி ஓரகத் திரு

ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
காவல் தானே பாவையர்க் கழகு

கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழ வுரை
குற்றம் பார்க்கின் சுற்ற மில்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்

கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு
சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற்கு கழகு சூழ விருத்தல்

சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவம் மறந்தாற் கைதவ மாளும்
சேமம் புகினும் யாமத் துறங்கு
சையொத் திருந்தால் ஐய மிட்டுண்
சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வம் சீறிற் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு

தொழுதூண் சுவையின் உழுதூ ணினிது
தோழ லோடும் ஏழைமை பேசேல்
நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை

நீரகம் பொருந்திய ஊரகத்திரு
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொழித்தொரு வஞ்சக மில்லை
நேரா நோன்பு சீரா காது

நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்
நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்
நோன்பென் பதுவே கொன்று தின்னாமை
பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்
பாலோ டாயினுங் காலம் அறிந்துண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறன்மனை புகாமை அறமெனத் தகும்
பீரம் பேணிற் பாரந் தாங்கும்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்

பேதமை என்பது மாதர்க் கணிகலன்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங்கு என்பவை யெல்லாந் தவிர்
போனக மென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்

மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாம னில்லா மரக்கல மோடாது
முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்

மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வங் கோழை படாது
மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
மோன மென்பது ஞான வரம்பு

வளவ னாயினும் அளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கின் தானஞ் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோ ரென்கை யிரவா திருத்தல்

ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை
வைகல் தோறும் தெய்வந் தொழு
ஒத்த விடத்து நித்தி ரை கொள்

ஓதாதார்க் கில்லை உணர்வோடு ஒழுக்கம்

★★★★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் இயற்றிய

# மூதுரை

## கடவுள் வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் - மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

## நன்மை செய்தால் நன்மை வரும்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

## நல்லோர்க்கு செய்த உதவி நிலையாக நிற்கும்

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

## இளமையில் வறுமை

இன்னா இளமை வறுமைவற் றெய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இல்லாத
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

## மேன்மக்கள் இயல்பு

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

## காலமறிந்து செய்தல்

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

## உயிரினும் மானம் பெரிது

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ - கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவு செல்வம் குணம் அமைதல்

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்சுற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்.

## நல்லார் தொடர்பால் வரும் நன்மை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

## தீயவர் தொடர்பால் வரும் தீமை

தீயாரைக் காண்பதும் தீதே திருவற்ற
தீயோர்சொற் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.

## நல்லோரால் எல்லார்க்கும் நன்மை

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யு மழை.

## துணை வலிமை வேண்டும்

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

## உருவமும் குணமும்

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

## கல்லாதவன் காட்டுமரமாவான்

சுவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

## போலி அறிவின் இழிவு

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயோர்க்கு உதவின் தீங்கே வரும்

வேங்கை வரிபுலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட காலம்.

## அடக்கத்தை இகழாதே

அடக்க முடையார் அறிவிலிரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

## உண்மையான உறவினர்

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

## கெட்டாலும் மேன்மக்கள் குணம் மாறார்

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் - சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

## ஆசையாற் பயனில்லை

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியன் பயனே பயன்.

## உடன்பிறப்பும் அயலாரும்

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

## மனையாளும் மனையும்

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

## ஊழின்படியே நடக்கும்

எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சினத்தில் மூவகை நிலை

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

### குணமும் தொடர்பும்

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

### வஞ்சனையுடையார் ஒளிந்து இருப்பர்

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

### கற்றோர் சிறப்பு

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோம் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

### நூல்வகை எமன்கள்

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

### கேட்டிலும் பண்பு கெடாமை

சந்தன மென் குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால் தந்தம்
தனஞ்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

### நிலையில்லாத வாழ்வு

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகும் அவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

### துன்பம் செய்வார்க்கும் இன்பம் செய்தல்

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் இயற்றிய

# நல்வழி

### கடவுள் வணக்கம்

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

### நன்மையே செய்க

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்.

### உயர்குலம் இழிகுலம்

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

### ஈகை பயன் வீடு பேறு

இடும்பைக்கு இடும்பை இயலுடம்பி தென்று
இடும்பொய்யை மெய்யென்றிராதே - இடுங்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

### காலம் அறிந்து செய்க

எண்ணி ஒருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்தும் போதல்லாற் - கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆங்கால மானுனு மவர்க்கு.

### கவலையடைதல் கூடாது

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா - இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாம்நினைத்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

### பேராசை கூடாது

உள்ள தொழிய ஒருவர்க் கொருசுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளைக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழும் உயிர்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானிகள் பற்றற்று இருப்பர்

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்கமல நீர்போல்
பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு.

## ஒழுக்கம் பொருளினும் சிறந்தது

ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த வாயினும் ஊழ்
கூட்டும் படியின்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்.

## குடிப்பிறந்தார் வறுமையிலும் உதவுவார்

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

## கொடுத்து உண்டு வாழ்க

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

## வயிற்றின் கொடுமை

ஒருநாள் உணவையொழி யென்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய் - ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

## உழவின் உயர்வு

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

## நம்மால் விலக்க இயலாதன

ஆவாரை யாரே அழிப்பர் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் - ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மானமே ஊரினும் சிறந்தது

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை - சீச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர்விடுகை சால உறும்.

### சிவாய நம

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்(கு)
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

### வியத்தகு மேன்மை

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி.

### தீவினை வறுமைக்கு வித்து

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம் - வையத்து
அறும்பாவம் என்னவறிந்(து) அன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

### அடிப்பவர்கே கொடுப்பர்

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம்.

### உயர்நோக்கம் இன்மை

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் - போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

### விலைமகள் தொடர்பு

அம்மி துணையாக ஆறிழிந்த வாறொக்கும்
கொம்மை முலைபகர்வார்க் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கும் நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வஞ்சனையில்லார்க்கு வாழ்வு சிறக்கும்

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

### புதைத்த பணத்தால் யாருக்குப் பலன்

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பர்
பாவிகாள் அந்தப் பணம்.

### வழக்கில் ஓரம் சொன்னவர் மனைபாழ்

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

### வாழ்க்கை மாண்பு ஐந்து

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ் - மாறில்
உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

### வரவுக் கேற்ற செலவு

ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

### பசிவந்திடப் பத்தும் போகும்

மானங் குலங்கல்வி வண்மை அறிவுடமை
தானந் தவம் அயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

### எல்லாம் இறைவன் செயல்

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனவமைதி வேண்டும்

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்.

## கொடையாளருக்கு எல்லோரும் உறவினர்

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை - சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத்தவர்.

## விதியின் தன்மை

தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பர்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாரை யென் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி.

## இதனினும் இது நன்று

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தின் நன்று தனி.

## பொருள் இருக்கும்போதே அறம் செய்க

ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

## வன்சொல்லும் இன்சொல்லும்

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாய் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

## பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற்(று) ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயில் சொல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிவுடையோரும் பேதையும்

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே - தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்(கு)
உரைத்தாலும் தோன்றா துணர்வு.

### பிறன்மனை விரும்பாமை

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல் - ஒண்டொடீ!
போதங் தனங்கல்வி பொன்றவருங் காலமயல்
மாதர்மேல் வைப்பார் மனம்.

### வீடு அடைதல்

வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ(து) அல்லாற் கவலைபடேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி.

### உண்மை நிலை

நன்றென்றும் தீதென்றும் நானென்றும் தானென்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே - நின்றநிலை
தானதாந் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.

### முப்பதில் முதல்வனை அறி

முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்(று) ஒரு பொருளைத்
தப்பாமல் தன்னுட் பெறானாயின் - செப்புங்
கலையளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே ஆகுமாம் மூப்பு.

### சிறந்த நூல்கள்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிவீரராம பாண்டியர் இயற்றிய

## வெற்றிவேற்கை (நறுந்தொகை)

கடவுள் வாழ்த்து
பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதுமலர் தலைக்கணி வோமே

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்
கல்விக் கழகு கசடற மொழிதல்
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்
வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்
மன்னவர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்
உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்
மந்திரிக் கழகுபொருள் உரைத்தல்
தந்திரக் கழகு தறுக ணாண்மை
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்
பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்
குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்
விலைமகட் கழகு தன் மேனி மினுக்குதல்
அறிஞர்க் கழகு கற்றுணர்த் தடங்கல்
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையிலும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே

பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்
பெற்றோ ரெல்லாம் பிள்ளைகள் அல்லர்
உற்றோர் ரெல்லாம் பெண்டிரு மல்லர்
அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினுங் தண்கடல் சேறா காது
அடினும்பால் பெய்துகைப் பறாதுபேய்ச் சுரைக்காய்
ஊட்டினும் பலவிரை உள்ளி கமழாது
பெருமையும் சிறுமையும் தான்தர வருமே

சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே

நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே
ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே
நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே
எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்
அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்
அச்சம் உள்ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே

யானைக் கில்லை தானமும் தருமமும்
பூனைக் கில்லை தவமும் தயையும்
ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்
முதலைக் கில்லை நீத்தும் நிலையும்
உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா
குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்
சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்
குன்றத்தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்
எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்
பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருங் கூடி
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்
மணவணி யணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி அணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பனும் விரிப்பர்
இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே
இரந்தோர்க் கீவதும் உடையார் கடனே
நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை இல்லில் லோர்க்கே

தறுகண் யானை தன்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே
குன்றுடை நெடுங்காட் டூடே வாழினும்
புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே
ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரைபாம் பிற்கு மிகவஞ் சும்மே

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின்
கடும்புலி வாழுங் காடு நன்றே
சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே
காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே

குடியலைத் திரந்துவெங் கோலோடு நின்ற
முடியுடை யிறைவனாம் மூர்க்கனும் பதரே
முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ்செய்து
அதன்பய னுண்ணா வணிகரும் பதரே
வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மனை யாளைத் தாய்மனைத் ககற்றிப்
பின்பவள் பாராப் பேதையும் பதரே
தன்மன யாளைத் தனிமனை யிருத்திப்
பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே

தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே
வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றி கேண்மின்
பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே

மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே

இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிஈர்வ தோர் வாளா கும்மே

பழியா வருவது மொழியா தொழிவது
சுழியா வருபுனல் இழியா தொழிவது

துணையோ டல்லது நெடுவழி போகேல்
புணைமீ தல்லது நெடும்புனல் ஏகேல்
எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலா தனகொடு முயல் வாகாதே

வழியே ஏகுக வழியே மீளுக
இவைகாண் உலகிற் கியலாம் ஆறே.

*****


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவாரத் திருக்கோயில்களும் போற்றியும்

## (தேவாரத் திருத்தல வணக்கம்)

| | |
|---|---|
| தென்தில்லை மன்றியனுள் ஆடி போற்றி | (தில்லை) சிதம்பரம் |
| வேட்கள நன்நகர் மேயாய் போற்றி | திருவேட்களம் (அண்ணாமலைநகர்) |
| நெல்வா யில்வளர் நிதியே போற்றி | (திருநெல்வேலி) சிவபுரி |
| கழிப்பாலை உறை கரும்பே போற்றி | கழிப்பாலை |
| நல்லூர்ப் பெருமண நம்பா போற்றி | ஆச்சாள்புரம் |
| மயேந்திரப் பள்ளி மன்னா போற்றி | திருமயேந்திரப்பள்ளி |
| தென்திரு முல்லை வாயிலாய் போற்றி | தென்திருமுல்லைவாயில் |
| கலிக்கா மூர்வளர் கண்ணே போற்றி | கலிக்காமூர் |
| சாய்க்காடு இனிதுறை சதுரா போற்றி | திருச்சாய்காடு (அண்ணப்பன்பேட்டை) |
| பல்லவ னீச்சரப் பரனே போற்றி | காவிரிப்பூம்பட்டினம் |
| வெண்காடு உகந்த விகிர்தா போற்றி | திருவெண்காடு |
| கீழ்த்திருக் காட்டுப் பள்ளியாய் போற்றி | கீழ்த்திருக்காட்டுப்பள்ளி |
| குருகா வூருறை குணமே போற்றி | திருக்கடாவூர் |
| காழியுள் மேய கடலே போற்றி | (பிரமபுரம்) சீர்காழி |
| கோலக் காவிற் கோவே போற்றி | திருக்கோலக்கா |
| வேளூர் மேவிய வித்தகா போற்றி | வைத்தீசுவரன் கோயில் |
| கண்ணார் கோயில்வாழ் கனியே போற்றி | குறுமாணக்குடி |
| கடைமுடிப் பரமநின் கழல்கள் போற்றி | கீழையூர் |
| நின்றவூர் வளரும் நிதியே போற்றி | திருநின்றவூர் |
| திருப்புன் கூரமர் திருவே போற்றி | திருப்புன்கூர் |
| நீடூர் நிருத்தநின் நீளடி போற்றி | நீடூர் |
| அன்னி யூர்வளர் அரனே போற்றி | பொன்னூர் |
| வேள்விக் கடிவளர் வேதா போற்றி | வேள்விக்குடி |
| எதிர்கொள் பாடிஎம் இறைவா போற்றி | எதிர்கொள்பாடி |
| மணஞ்சேரி வார்சடை மணாளா போற்றி | திருமணஞ்சேரி |
| குறுக்கைவீ ரட்டக் குழகா போற்றி | குறுக்கை வீரட்டம் |
| கருப்பறி யல்நகர் காப்பாய் போற்றி | தலைஞாயிறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| குரக்குக் காவியற் குருவே போற்றி | குரக்குக்கா (திருக்குரக்காவல்) |
| வாள்கொளிப் புத்தூர் வாழ்வே போற்றி | திருவாளப்புத்தூர் |
| மண்ணியப் படிக்கரை மணியே போற்றி | பழமண்ணிப்படிக்கரை |
| ஓமாம் புலியூர் ஒருவனே போற்றி | ஓமாம்புலியூர் |
| கானாட்டு முள்ளூர்க் கடவுளே போற்றி | கானாட்டுமுள்ளூர் |
| நாரையூர் நன்நகர் நலமே போற்றி | திருநாரையூர் |
| கடம்பூர் மேவிய விடங்கா போற்றி | திருக்கடம்பூர் |
| பந்தணை நல்லூரப் பசுபதீ போற்றி | பந்தனை நல்லூர் |
| கஞ்சனூர் ஆண்டகற் பகமே போற்றி | கஞ்சனூர் |
| கோடிக் காவுடை கோவே போற்றி | கோடிக்கா (திருக்கோடிக்காவல்) |
| திருமங் கலக்குடி தேனே போற்றி | மங்கலக்குடி |
| பனந்தாள் தாடகேச் சரணே போற்றி | திருபனந்தாள் |
| ஆப்பா டிப்பதி அமலா போற்றி | திருஆப்பாடி |
| சேய்ஞலூர் உறையுஞ் செல்வா போற்றி | சேய்ஞலூர் |
| திருந்து தேவன்குடித் தேவா போற்றி | திருந்துதேவன்குடி |
| வியலூர் இருந்தருள் விமலா போற்றி | திருவியலூர் (திருவிசநல்லூர்) |
| கொட்டையூ நிற்கோ டீச்சரா போற்றி | கொட்டையூர் |
| இன்னம்பர் ஈசநின் இணையடி போற்றி | இன்னம்பர் |
| புறம்பயப் பதிவாழ் புண்ணியா போற்றி | திருப்புறம்பயம் |
| விசய மங்கை வேதியா போற்றி | விசயமங்கை |
| திருவை காஉறை சிவனே போற்றி | வைகாவூர் |
| வடகுரங்காடு துறையாய் போற்றி | வடகுரங்காடுதுறை |
| பாங்கார் பழனத் தழகா போற்றி | திருப்பழனம் |
| சீரார் திருவை யாறா போற்றி | திருஐயாறு |
| நெய்த்தா னத்துநெய் ஆடியே போற்றி | திருநெய்த்தானம் |
| பெரும்புலி யூர்ப்பபெரு மானே போற்றி | பெரும்புலியூர் |
| மழபாடி வயிரத் தூணே போற்றி | திருமழபாடி |
| கானூர் மேயசெங் கரும்பே போற்றி | திருக்கானூர் |
| அன்பிலா லந்துறை அரசே போற்றி | அன்பிலாலந்துறை (அன்பில்) |
| வடகரை மாந்துறை வள்ளாய் போற்றி | மாந்துறை |
| திருப்பாற் றுறையுறை தேவே போற்றி | பாற்றுறை |
| ஆனைக் காவுறை ஆதீ போற்றி | திருஆனைக்கா |
| பைஞ்சீலி அண்ணல் நின் பாதம் போற்றி | திருப்பைஞ்சீலி |
| பாச்சிலாச் சிராமப் பரனே போற்றி | திரூவாசி |
| ஈங்கோய் மலை எம் எந்தாய் போற்றி | ஈங்கோய்மலை |
| வாட்போக்கி மலையுறை வாழ்வே போற்றி | திருவாட்போக்கி |
| கடம்பந் துறைவளர் கடலே போற்றி | குளித்தலை |
| பாராய்த்துறை மேவிய பரனே போற்றி | திருப்பராய்த்துறை |
| கற்குடி மாமலைக் கண்ணுதல் போற்றி | கற்குடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முக்கீச் சரத்து முதல்வா போற்றி | உறையூர் |
| சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி | திருச்சிராப்பள்ளி |
| எறும்பியூர் இருந்த எம்மான் போற்றி | திருஎறும்பியூர் |
| நெடுங்களம் இனிதமர் நிமலா போற்றி | நெடுங்களம் |
| மேலை காட்டுப் பள்ளியாய் போற்றி | திருக்காட்டுப்பள்ளி |
| ஆலம் பொழிலுறை அரனே போற்றி | ஆலம்பொழில் |
| திருப்பூந் துருத்தித் தேசிக போற்றி | திருப்பூந்துருத்தி |
| கண்டி வீரட்டக் கரும்பே போற்றி | கண்டியூர் |
| சோற்றுத் துறைவளர் தொல்லோய் போற்றி | திருவேதிக்குடி |
| தென்குடித் திட்டை தேவே போற்றி | தென்குடித்திட்டை |
| திருப்புள்ள மங்கைத் திருவே போற்றி | புள்ளமங்கை (பசுபதிகோயில்) |
| சக்கரப் பள்ளிஎம் சங்கரா போற்றி | இராசகிரி ஐயம்பேட்டை |
| கருகா வூருறை கடம்பா போற்றி | திருக்கருக்காவூர் |
| திருப்பா லைத்துறைச் செல்வா போற்றி | பாலைத்துறை |
| நல்லூர்ப் பெருமநின் நற்பதம் போற்றி | திருநல்லூர் |
| ஆவூர்ப் பசுபதீச் சரனே போற்றி | ஆவூர்ப்பசுபதிச்சரம் |
| சத்தி முத்தச் சதுரா போற்றி | திருச்சத்திமுற்றம் (சத்திமுத்தம்) |
| பட்டீச்சரம் உறை பரமா போற்றி | பட்டீச்சரம் |
| பழையா றைவட தளியாய் போற்றி | பழையாறைவடதளி |
| வலஞ்சுழி மேவிய வரதா போற்றி | திருவலஞ்சுழி |
| குடமூக்கமர் கும்பேசா போற்றி | கும்பகோணம் |
| கீழ்க்கோட்ட த்தெங் கூத்தா போற்றி | குடந்தைக்கீழ்க்கோட்டம் |
| குடந்தைக் காரோ ணத்தாய் போற்றி | குடந்தைக்காரோணம் |
| நாகேச் சரம்வாழ் நாதா போற்றி | திருநாகேச்சரம் |
| இடைமரு துறையும் எந்தாய் போற்றி | திருவிடைமருதூர் |
| தென்குரங் காடு துறையாய் போற்றி | ஆடுதுறை |
| நீலக் குடியுறை நிருத்தா போற்றி | தென்தில்லைக்குடி (திருநீலக்குடி) |
| வைகல் மாடக் கோயிலாய் போற்றி | வைகல்மாடக்கோயில் |
| நல்லம் நடம்பயில் நாதா போற்றி | கோனேரிராஜபுரம் |
| கோழம் பத்துறை கோவே போற்றி | கோழம்பம் |
| ஆவடு தண்துறை அமரா போற்றி | திருஆவடுதுறை |
| துருத்தி ஈசநின் துணையடி போற்றி | குத்தாலம் |
| அழுந்தூர் ஆளும் அரசே போற்றி | தேரழுந்தூர் |
| மயிலா டுந்துறை மணியே போற்றி | மயிலாடுதுறை |
| திருவிள நகர்உறை திருவே போற்றி | விளநகர் |
| பறியல்வீ ரட்டப் பரமா போற்றி | பராலூர் |
| செம்பொன் பள்ளிச் செல்வா போற்றி | திருச்செம்பொன்பள்ளி |
| நனிபள்ளி வளரும் நம்பா போற்றி | திருநனிப்பள்ளி |
| வலம்புரம் மன்னிய வாழ்வே போற்றி | வலம்புரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைச்சங் காடமர் தத்துவ போற்றி | தலைச்சங்காடு |
| ஆக்கூர் அமர்ந்த அம்மான் போற்றி | ஆக்கூர் |
| கடவூர்க் காலவீ ரட்டா போற்றி | திருக்கடவூர் |
| கடவூர் மாயனக் கடவுளே போற்றி | கடவூர் மயானம் |
| வேட்டக் குடியின் மேயோய் போற்றி | திருவேட்டக்குடி |
| திருச்தெளிச் சேரிச் சிவனே போற்றி | கோயில்பத்து |
| தரும புரம்வளர் தாயே போற்றி | தருமபுரம் |
| நள்ளா றுடைய நாதா போற்றி | திருநள்ளாறு |
| கோட்டா ரமருங் குழகா போற்றி | திருக்கொட்டாரம் |
| அம்பர் பெருந்திருக் கோயிலாய் போற்றி | அம்பர் |
| அம்பர்மா காளத் தரனே போற்றி | அம்பர்மாகாளம் |
| மீயச் சூருறை கோயிலாய் போற்றி | மீயச்சூர் |
| மீயச் சூரிளங் கோயிலாய் போற்றி | மீயச்சூர் இளங்கோயில் |
| திலதைப் பதிவாழ் திலகமே போற்றி | செதலப்பத்தி |
| பரம்புர நன்நகர்ப் பரமனே போற்றி | பாம்புரம் |
| சிறுகுடிப் பிறைமுடிச் செல்வா போற்றி | சிறுகுடி |
| விண்ணிழி வீழி மிழலையாய் போற்றி | திருவீழிமிழலை |
| வன்னியூர் மேவிய மைந்தா போற்றி | வன்னியூர் |
| கருவிலி அமருங் கண்ணே போற்றி | கருவேலி |
| பேணு பெருந்துறைப் பெம்மான் போற்றி | திருப்பந்துறை |
| நறையூர் சித்தீச் சரணே போற்றி | நறையூர்ச்சித்தீச்சரம் |
| அரிசிற் கரைப்புதுத் தூரா போற்றி | அழகார்புத்தூர் |
| செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி | சிவபுரம் |
| கலைய நல்லூர்க் கடவுளே போற்றி | சாக்கோட்டை |
| கருக்குடி அண்ணல்நின் கழல்கள் போற்றி | மருதாந்தநல்லூர் |
| திருவாஞ் சியம்வளர் தேவே போற்றி | சிறு வாஞ்சியம் |
| நன்நிலத் துப்பெருங் கோயிலாய் போற்றி | நன்னிலம் |
| கொண்டீச் சரத்துக் கோவே போற்றி | கொண்டீச்சுரம் |
| திருப்பனை யூர்வளர் தேவே போற்றி | பனையூர் |
| விற்குடி வீரட்டம் மேயாய் போற்றி | திருவிற்குடி |
| புகலூர் வர்த்தமா னீச்சரா போற்றி | திருப்புகலூர் |
| இராமனத் தீச்சரத் திறைவா போற்றி | இராமனத்தீடீச்சரம் |
| பயற்றூ ருறையும் பண்பா போற்றி | திருப்பயற்றங்குடி |
| செங்காட் டங்குடிச் சேவகா போற்றி | திருச்செங்காட்டங்குடி |
| மருகல் பெருமநின் மலரடி போற்றி | திருமருகல் |
| சாத்த மங்கைச் சம்புவே போற்றி | செய்யாத்தமங்கை |
| நாகைக்கா ரோணம் நயந்தாய் போற்றி | நாகப்பட்டிணம் |
| சிக்கல் நகர்வளர் செல்வா போற்றி | சிக்கல் |
| கீழ்வே ளூரான் கேடிலீ போற்றி | கீழ்வேளூர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தேவூர் ஆதிநல் தேனே போற்றி | தேவூர் |
| பள்ளிமுக் கூடற் பரனே போற்றி | பள்ளியின் முக்கூடல் |
| ஆரூர் அறநெறி அப்பா போற்றி | ஆரூர்அறநெறி |
| பரவையுண் மண்தளிப் பரனே போற்றி | திருஆரூர் |
| விளமர் உகந்த வித்தகா போற்றி | விளமல் |
| கரவீ ரச்சங் கரனே போற்றி | கரையபுரம் |
| பெருவே ளூருறை பெரும போற்றி | பெருவேளூர் |
| தலையா மன்னிய குருவே போற்றி | தலையாலங்காடு |
| குடவாயில் மன்னிய குருவே போற்றி | குடவாயில் |
| சேறைச் செந்நெறிச் செல்வா போற்றி | உடையார் கோவில் |
| நாலூர் மயான நாடகா போற்றி | நாலூர் மயானம் |
| கடுவாய்க் கரைப்புத் தூரா போற்றி | ஆண்டாங்கோயில் |
| திருஇரும் பூளைத் தேவே போற்றி | ஆலங்குடி |
| அரதைப் பெரும்பதி அமர்ந்தாய் போற்றி | அரித்துவாரமங்கலம் |
| அவள்இவன் நல்லூர் அரசே போற்றி | அவளிவணல்லூர் |
| பரிதி நியமப் பரனே போற்றி | பரிதியப்பர்கோயில் |
| வெண்ணிவாழ் விமலநின் மெல்லடி போற்றி | கோயில்வெண்ணி |
| பூவனூர்ப் பனித நின்பொன்னடி போற்றி | திருப்பூவனூர் |
| பாதா ளீச்சரப் பரமா போற்றி | பாம்பணி |
| திருக்களர் மேவிய தேவே போற்றி | திருக்களர் |
| ஓங்குசிற் றேத்து ஒருவா போற்றி | சிற்றாம்பூர் |
| உசாத்தா னத்தமர் உறவே போற்றி | திருஉசாத்தானம் |
| இடும்ப வனத்துறும் இறைவா போற்றி | திருஇடும்பாவனம் |
| கடிக்குளத் துறைகடல் அமுதே போற்றி | கற்பகனார் கோயில் |
| தண்டலை நீணெறித் தாயே போற்றி | தண்டலைச்சேரி |
| கோட்டூர் மேவிய கொழுந்தே போற்றி | திருக்கோட்டூர் |
| வெண்டுறை மேவிய கொழுந்தே போற்றி | திருவெண்டுறை |
| கொள்ளம் பூதூர்க் கோவே போற்றி | கொள்ளம்பூதூர் |
| பேரெயில் பெருமநின் பெய்கழல் போற்றி | ஓகைப்பேரையூர் |
| கொள்ளிக் காடமர் கொற்றவ போற்றி | திருத்தெங்கூர் |
| நெல்லிக் காடுறை நித்தியா போற்றி | திருநெல்லிக்கா |
| நாட்டியத் தான்குடி நம்பீ போற்றி | நாட்டியத்தான்குடி |
| திருக்கா றாயில் தியாகா போற்றி | திருக்காரவாசல் |
| கன்றாப் பூர்நாடு தறியே போற்றி | கன்றாப்பூர் |
| வலிவலம் வந்தருள் வரதா போற்றி | வலிவலம் |
| கைச்சின மேவிய கண்ணுதல் போற்றி | கைச்சினம் |
| கோளிலி உறையுங் கோவே போற்றி | திருக்குவளை |
| வாய்மூரடிகள் இன் மலர்ப்பதம் போற்றி | திருவாய்மூர் |
| மறைக்கா டுறையும் மணாளா போற்றி | வேதாரண்யம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அகத்தியான் பள்ளி ஐயா போற்றி | அகத்தியன்பள்ளி |
| கோடிக் கோயிற் குழகா போற்றி | குழகர்கோயில் (கோடியக்கரை) |
| திருவிடை வாய்வளர் தேவா போற்றி | திருவிடைவாசல் |
| கோணா மலைகுடி கொண்டாய் போற்றி | திரிகோணமலை (இலங்கை) |
| ஆடக மதுரை அரசே போற்றி | திருக்கேத்தீச்சரம் (இலங்கை) |
| ஆடக மதுரை அரசே போற்றி | மதுரை |
| ஆப்ப னூர்வளர் ஐயா போற்றி | ஆப்பனூர் |
| திருப்பரங் குன்றற் செல்வா போற்றி | திருப்பரங்குன்றம் |
| ஏடகத் தெந்தைநின் இணையடி போற்றி | திருஏடகம் |
| கொடுங்குன் றமருங் கோவே போற்றி | பிரான்மலை |
| திருப்புத் தூர்த்திருத் தளியாய் போற்றி | திருப்புத்தூர் |
| திருப்புன வாயிலெம் செல்வா போற்றி | திருப்புனவாசல் |
| மாய்செய்ரா மேச்சுவாழ்வே போற்றி | இராமேசுவரம் |
| ஆடா னையுறை ஆதீ போற்றி | திருஆடானை |
| கானப் பேருறை காளாய் போற்றி | காளையார் கோயில் |
| பொருப்பமர் பூவணத் தரனே போற்றி | திருப்பூவணம் |
| சுழியல் வளருந் துணைவா போற்றி | திருச்சுழியல் |
| குற்றா லத்தெங் கூத்தா போற்றி | குற்றாலம் |
| நெல்வே லியுறை செல்வா போற்றி | திருநெல்வேலி |
| அஞ்சைக் களத்துறை அப்பா போற்றி | அவிநாசி |
| முருகன் பூண்டி முதல்வா போற்றி | திருமுருகன்பூண்டி |
| திருநணா வளரும் திருவே போற்றி | பவானி (கூடுதுறை) |
| கொடிமா மச்செங்குன்றாய் போற்றி | திருச்செங்கோடு |
| வெஞ்சமாக் கூடல் விகிர்தா போற்றி | வெஞ்சமாக்கூடல் |
| பாண்டிக் கொடுமுடிப் பழையோய் போற்றி | கொடுமுடி |
| கருவூர் அனிலைக் கண்மணீ போற்றி | கரூர் |
| நெல்வா யில்அரத் துறையாய் போற்றி | திருவரத்துறை (திருவட்டத்துறை) |
| பெண்ணா கடத்துப் பெரும போற்றி | பெண்ணாகடம் |
| கூடலை யாற்றூர்க் கோவே போற்றி | கூடலையாற்றூர் |
| எருக்கத்தம் புலியூர் எந்தாய் போற்றி | இராசேந்திரப்பட்டிணம் |
| திருத்தினை நகரச் சிவனே போற்றி | தீர்த்தனகிரி |
| சோபுர மேவிய சொக்கா போற்றி | தியாகவல்லி |
| அதிகைவீ ரட்டத் தழகா போற்றி | திருவதிகை |
| நாவலூர் மேவிய நம்பா போற்றி | திருநாவலூர் |
| முதுகுன் றமர்ந்த முனிவா போற்றி | விருத்தாச்சலம் |
| நெல்வெண்ணை மேவிய நிருத்தா போற்றி | நெய்வெணை |
| கோவல்வீ ரட்டக் கோமான் போற்றி | திருக்கோயிலூர் |
| அறையணி நல்லூர் அரசே போற்றி | அறை(அர)கண்டநல்லூர் |
| இடையா றிடையமர் ஈசா போற்றி | திருஇடையாறு (ஜி - எடையார்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வெண்ணெய்நல் லூருறை மேலோய் போற்றி | திருவெண்ணைநல்லூர் |
| துறையூர் அமர்ந்த தூயோய் போற்றி | திருத்துறையூர் (திருத்தளூர்) |
| வடுகூர் அடிகள் மாணடி போற்றி | ஆண்டார்கோயில் |
| திருமாணிக் குழிவளர் தேவே போற்றி | திருமாணி குழி |
| பாதிரிப் புலியூர்ப் பரம போற்றி | திருப்பாதிரிப்புலியூர் |
| முண்டீச் சரத்து முதல்வா போற்றி | திருக்கிராமம் |
| புறவார் பனங்காட் டூரா போற்றி | பனையபுரம் |
| திருஆ மாத்தூர்த் தேவே போற்றி | திருவாமத்தூர் |
| அண்ணா மலை எம்அண்ணா போற்றி | திருவண்ணாமலை |
| ஏகம் பத்துறை எந்தாய் போற்றி | பெரிய காஞ்சீபுரம் |
| கச்சிமேற் றளியுறை கடலே போற்றி | காஞ்சீபுரம் (பிள்ளையார் பாளையம்) |
| ஓண காந்தன் தளியாய் போற்றி | காஞ்சீபுரம் (பஞ்சப்பேட்டை) |
| கச்சி அ நேகதங் காவதா போற்றி | காஞ்சீபுரம் (புத்தேரி தெரு) |
| கச்சிநெறிக் காரைக் காடா போற்றி | காஞ்சீபுரம் (திருக்காலிமேடு) |
| குரங்கணில் முட்டங் குலவினாய் போற்றி | குரங்கணில்முட்டம் |
| மாகறல் வாழும் மருந்தே போற்றி | செய்யாறு |
| வன்பார்த்தான் பனங்காட் டூரா போற்றி | பனங்காட்டூர் |
| திருவல்லம் மேவிய தீவணா போற்றி | திருவல்லம் |
| மாற்பே றாய்உமை மணாளா போற்றி | திருமாற்பேறு |
| திருவூர் தக்கோலவளர் தேவே போற்றி | தக்கோலம் |
| இலம்பையங் கோட்டூர் ஈசா போற்றி | இலம்பையங்கோட்டூர் |
| விற்கோ லத்துறை வீரா போற்றி | கூவம் |
| ஆலங் காட்டெம் அடிகள் போற்றி | திருவாலங்காடு |
| பாசூர் அமர்ந்த பசுபதீ போற்றி | திருப்பாச்சூர் |
| வெண்பாக் கத்துறை விமலா போற்றி | திருவெண்பாக்கம் |
| கள்ளில் மேய கனியே போற்றி | திருக்கள்ளில் (திருக்கண்டலம்) |
| காளத்தி நாதநின் கழலிணை போற்றி | ஸ்ரீ காளத்தி (ஆந்திரம்) |
| ஒற்றி யூரூறை ஒருவா போற்றி | திருவொற்றியூர் |
| வலிதா யம்உறை வள்ளால் போற்றி | திரு வலிதாயம் (சென்னை பாடி) |
| வடதிரு முல்லை வாயிலாய் போற்றி | வடதிருமுல்லைவாயில் (சென்னை) |
| வேற்காட்டு வேத வித்தகா போற்றி | திருவேற்காடு (சென்னை) |
| மயிலைக் கபாலீச் சரத்தாய் போற்றி | மயிலாப்பூர் |
| வான்மியூ ரமர்ந்த வாழ்வே போற்றி | திருவான்மியூர் |
| கச்சூ ராலக் கோயிலாய் போற்றி | ஆலக்கோயில் |
| இடைச்சரம் அருந்த எழில்வன போற்றி | திருவடிஆலம் (திருஇடைச்சுரம்) |
| திருக்கழுக் குன்றின் செல்வா போற்றி | திருவக்கரை |
| அரசிலி நாதா ஐயா போற்றி | ஒழிந்தியாப்பட்டு |
| இரும்பைமா காளத் திறைவா போற்றி | இரும்பைகாளம் |
| கோலக் கோகர்ணக் கொழுந்தே போற்றி | கோகர்ணம் (துளுவநாடு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருப்பருப் பதத்துத் தேவே போற்றி | ஸ்ரீ சைலம் (ஆந்திரா) |
| இந்திர நீல மலையாய் போற்றி | இந்திரநீலப்பர்பதம் (நீலகண்டபர்வதம்) |
| அநேகதங் காவதம் அமர்ந்தாய் போற்றி | அநேகதங்காவதம்(வடநாடு) |
| கேதா ரங்கிரிக் கிழவோய் போற்றி | கேதாரம் (கேதார்நாத் - வடநாடு) |
| கயிலை மலையானே போற்றி போற்றி | திருக்கயிலாயம் (வடநாடு) |

## பன்னிரண்டு சோதிர் லிங்கங்கள்

| இறைவன் | மாநிலம் | திருவூர் |
|---|---|---|
| 1. சோமநாதர் | குசராத் | பிரபாசபட்டிண் |
| 2. மல்லிகா அர்ச்சுனர் | ஆந்திரா | ஸ்ரீசைலம் |
| 3. மகாகாளர் | மத்தியப்பிரதேசம் | உச்சயினி |
| 4. ஓங்காரரேசுவரர் | மத்தியப்பிரதேசம் | ஓங்காரம் |
| 5. வைத்தியநாதர் | பீகார் | வைத்தியநாதம் |
| 6. பீமசங்கர் | மும்பை (மராட்டா) | பீமசங்கரம் |
| 7. இராமலிங்கம் | தமிழ்நாடு | இராமேசுவரம் |
| 8. நாகேசுவரர் | மும்பை | தாருகாவனம் |
| 9. விசுவநாதர் | உத்திரப்பிரதேசம் | காசி |
| 10. திரிகம்பேசுவர் | மும்பை | திரியம்பகம் (நாசிக்) |
| 11 கேதாரேசுவரர் | உத்திரப்பிரதேசம் | கேதாரம் |
| 12. குசுனேசுவரர் | மும்பை | குசுருனேசுவரம் |

## அட்ட வீரட்டேசுவரர் தலங்கள்

1. திருக்கோயிலூர் (கோவல் வீரட்டம்)
2. திருவதிகை (அதிகை வீரட்டம்)
3. திருக்குறுக்கை (குறுக்கை வீரட்டம்)
4. திருவழுவூர் (வழுவூர் வீரட்டம்)
5. திருப்பறியலூர் (பரசலூர்) (பறியல் வீரட்டம்)
6. திருக்கடையூர் (கடவூர் வீரட்டம்
7. திருவிற்குடி (விற்குடி வீரட்டம்)
8. திருக்கண்டியூர் (கண்டி வீரட்டம்)

## பஞ்சபூதத் தலங்கள்

| | | |
|---|---|---|
| மண் | - காஞ்சி, ஏகாம்பரம், திருவாரூர் | - (பிருத்விதலம்) |
| நீர் | - திருஆனைக்கா | - (அப்புத்தலம்) |
| காற்று | - திருக்காளத்தி | - (வாயுத்தலம்) |
| தீ | - திருவண்ணாமலை | - (தேயுத்தலம்) |
| வான் | - சிதம்பரம் | - (ஆகாயத்தலம்) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்தவிடங்கத் தலங்கள்

| திருவூர் | | இறைவன் |
|---|---|---|
| திருவாரூர் | - | வீதி விடங்கர் |
| திருநாக்காரோணம் | - | சுந்தர விடங்கர் |
| திருமறைக்காடு | - | புவனி விடங்கர் |
| திருவாய்மூர் | - | நீல விடங்கர் |
| திருநள்ளாறு *(நாகப்பட்டினம்)* | - | நக விடங்கர் |
| திருக்காறாயில் *(திருக்காரவாசல்)* | - | ஆதி விடங்கர் |
| திருக்கோளிலி *(திருக்குவளை)* | - | அவனி விடங்கர் |

## திருத்தொண்டத் தொகை

திருசிற்றம்பலம்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திரு ஆருர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆருரன் ஆருரில் அம்மானுக்கு ஆளே *(7-109-10)*

திருசிற்றம்பலம்

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலப்புராணங்களில்
# பைரவர் பனுவல்கள்

## சீர்காழிப் புராணம்

*துங்கமாமணித் தூனில்வந் திரணிய்*
*தோள் வலிதனை வாங்குஞ்*
*சிங்கவேற்றுரி யரைக்கசைத்து லகெலாந்*
*தேர்ந்தளந்த வன்மேனி*
*யங்கம் யாவுமோர்கதையதாக் கொண்டத*
*ளங்கியாப் புனிதாழிச்*
*சங்கவார்குழைச் சட்டை நாயகன்றுணைத்*
*தாமரைச் சரண் போற்றி*

- அருணாச்சலக் கவிராயர்

## மாயூரப் புராணம்

*ஓங்குநாற் படைமுன் னஞ்சு மொள்ளுகிர் படையந்தேசு*
*வீங்குசக் கரமுன்னான வெம்படை யஞ்சு மஞ்சுந்*
*காதங்குஞ் படையுங் கொண்டோர் தலைக்கல் நெதிதோரேற்ற*
*பாங்குசேர் வடுகப்புத்தேன் பதமலர்க் கன்பு செய்வோம்*

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## காசி ரகசியம்

*தளம்பொழி மலரோனாதி வானவர் தாழ்ந்து போற்ற*
*வுளம் பொலி காசிமேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்*
*களம் பொலியாது தண்டம் கண்டற வெழுந்து முக்தி*
*வளம் பொலிவகை செய்கால வயிரவற்கன்பு செய்வோம்*

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## மண்ணிப்பழக்கரைப் புராணம்

*மறைகமழ் பரிகல மலர்க்கை யேந்துபு*
*கறை கமழ் பிச்சைதேர் கடவு பாட்டுணை*
*நிறை கமழ் கமலமெந் நாளும் பூத்திடு*
*முறை கமழ் தராதவென் மனத்து முற்றியே*

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய காஞ்சிப் புராணம்

கொச்சையறி வற்பவமாங் கொள்ளையினா
லரிபிரமர் கூடிவீணின்
மெய்ச் சமரம் புரிந்திகலி யொருவரொரு
வரைமிகவும் வெறுக்குநாளி
லச்சுறவற் றவரகந்தை விடுமாறு நெருக்கி
யினிதருளே செய்யுங்
கச்சிவடு கக்கடவுண் முச்சிசைவேற்
படையினையே கருதி வாழ்வோம்

- கச்சிகச்சபேசுவார தேசிகர் என்ற கச்சிக்கச் சாலையார்

## காஞ்சிப்புராணம்

எளியரை வலியார் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனு முரைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் செற்றோற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சி காவல் வயிரவக் கன்பு செய்வோம்

- சிறீ மாதவச் சிவஞான சுவாமிகள்

## புலியூர்ப் புராணம்

விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா
புரத்தினது மேவினோர்கண்
மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற்
சூலத்தின் மருவைத்தே
யுதிப் பாலன்னையர் முலைகண் மீட்டருந்தாவகை
முத்தி யுதவுந்தில்லைப்
பதிபால வயிரவன்றன் பாதசரோருகங்களென்
றும்பரவி வாழ்வோம்.

## கடம்பவனப் புராணம்

கருதரிய லளிதைபர னெற்றியிற்றோன் றிச்சூல கபால மேந்தி
வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனாயண்டதத்து வங்கண்மாற்றி
யரிசரும கஞ்சு கியாய் வேதவெகினூர்ந்து முன்போல வுண்டாக்கி
யருமைபெறக் காத்தருளுங் கேத்திரபாலன் றிருத்தாளேத்தல் செய்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்

தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்
கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி
யருணநீர் பலிக்கிமை யோர் நடுங்கவலம்
வந்து மாற்காவி நல்கி
மருணனிசெய் மூவிலைவேல் மணிநாக
முடுக்கையிலை வயங்கவேந்திக்
கருணைமறம் பூண்டெழில் செறிகடைஞாழல்
வயிரவரைக் கருதி வாழ்(மீ)வாம்.

## திருச்செந்தூர்ப் புராணம்

இஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா
னஞ்சு கம்மிலொன் றற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்
கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவோம்.

## பவானி கூடற் புராணம்

பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென் றுள்ளங்
கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழலத் தேரு
வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மாலுதிரம் வாங்கும்
விரிதலை சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வோம்

## கந்தபுராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

- சிறீ கச்சியப்ப சிவாசாரியார்

## திருவானைக்காப் புராணம்

உலக மளித்தல் சுதந்திர மன்றுமண
முயர்த்தோற் கெனவ வன்சே
யிலகு முருவம் பொடித்த அன்பா
லெழுந்த படைப்புஞ் சுதந்தரமன்
றலர்மெல் லணையாற் கெனவவனை
யறங்கத் திசைமா முகனாக்கிப்
பலரும் வெருவப் பொழிநெய்த்தோர்ப் பயிக்கம்
புகுந்தோன் பதம் பணிவோம்

- சிறீ கச்சியப்ப முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பூவணப் புராணம்

அரிபிரம ரகந்தை கெட வண்டங்க
ளூடைத் தெரியுமங்கிப் கோட்பட்
டுரியபலவுகை மெலா மொழிந்த திடுநா
ளவர் கடமதுடன் மேல் கொண்டு
குருதிவாய் கொப்பளிக்குங் கூரயின்மூ
விலைச்சூலங் கொண்ட திண்டோட்
கருவரைநேர் தருவடுகக் கடவுளெமைக்
காப்பக் கைகூப்பு வாமே

- கந்தசாமிப் புலவர்

## திருக்குடந்தைப் புராணம்

எழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொன் றேனு
நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளி செய்தாங்கு
முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்
வழுவறக் கபாலத் தேற்ற வடுகனை வணங்கி வாழ்வோம்

- மகாவித்துவான் சிறீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## கோயிலூர்ப் புராணம்

தொட்பெரு நனை வாவித் தீவிர தரத்தற் றோர்க்கு
மருட்பெரு மாயை நூறி வல்வினைப் படலங்கீறிச்
சுருட் பெருங் கொடியதுக்க நிவர்த்தியுஞ் சுகத்தின் பேறு
மருட் பெருஞ் செயலா னல்கும் வடுகனை யடைந்து வாழ்வோம்.

- மகாவித்துவான் சிறீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## மருதூர்ப் புராணம்

கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று
வாய்மூடுவதற் குதிரை யானைப்
பாணியிற்கங் கணம் புனைந்த வுரகமணி
வெயில் விரிக்கும் பண்பினானை
வேணியரன் றிருக் கோயில் காப்பானை
நிருவாண வேடத்தானை
வாணிலவு முத்தலைவேல் வடுகனைச்
செந்தமிழ் பாடி வணக்கஞ் செய்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாகைக் காரோணப் புராணம்

பெருகுதன் புகழுளேனோர் பிரதாப மடக்கி யாங்கு
முருகுதங் கலரின் மேலான் முண்டவெண் கபாலத் தூடு
கருகுபைங் கொண்டன்மேனி கவிழத்திடு செந்தீ ரேற்ற
திருகுதீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம்.

- மகாவித்துவான் சிறீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## திருவம்பர்ப் புராணம்

சுவைமுனந் தெரிந்து பின்புதற் குதவுந்
தூத்தவ வேட்டுவர் பொருவச்
சைவமலரக் கிழவன் றலைச்சுவை முன்னந்
தெரிந்து பின்கைக் குத வுகிரு
நவைகொண்மா னெய்த் தோர்ச் சுவைமுனந் தெரிந்து
நயந்துபி னத்தலைக் குதுவுங்
சுவைபடு திறற்கு லமுங்காரங் கொண்ட
கடவுடன் சேவடி போற்றி.

## தனியூர்ப் புராணம்

மறைபுகழ் தானேயோம்ப வயங்கு கேத்திரத்தி னெல்லை
பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினுக் கேற்றதண்டங்
குறையற வியற்று தண்டதரன் குறுகாது தானே
முறையுற வுஞற்றிப் போக்கு முதல்வனை வணக்கஞ்செய்வாம்.

## திருவாளொளிப்புத்தூர்ப் புராணம்

மறைபுகழ் கபாலத்தோடு மாயவன்மேனி நெய்தோர்
துறைகமழ் கொடிய வெந்நீச் சூலமுங் கரத்திற்றாங்கி
முறைகம ழுலகில் யார்க்குமுடிய பெரூக்கு மாய்க்கு
மிறைகமழ் வடுகப் புத்தேளிணையடிக் கன்பு செய்வாம்.

## திருநெல்வேலிப் புராணம்

பகருமறைப் பணைவனத்திற் பண்டிருந்த தாபதர்கள்
நிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்விப்
புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோந் நெல்வேலி
நகரினது புரந்த சட்டை நாதனிரு பதம் பணிவோம்.

- நெல்லையப்ப பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதவனப் புராணம்

மேலையோர் கற்பத் திறுதியிற் கதிர்கண்
மேவுடுக் கணங்கள் கீழுறத்தீம்
பாலையொத் திடுசங் கீன்றமுத தினங்கள்
பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந் தோணி
விளங்கிடு வடுகனாங் கடவுள்
காலைமென் போதை யுச்சியிற் கொள்வாய்
கடுந்துயர் மாலைதீர்ந் திடவே

- கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்

## விளத்தொட்டிப் புராணம்

இருட்பெரு நிரய மேவற் கேதுவாஞ் செருக்கு மேவில்
வெருட்பெருந் தண்டமேவு மிகவுமென்றுணர்த்தி யாங்கு
இருட்பெருஞ் செயலி னீங்கா மாலுடம் புரித்துப் போர்த்த
அருட்பெரு வடுகன் செம்பொனம்புயப் பாதம் போற்றி

## கடம்பர் கோயிற்புராணம்

கயிரவ நாண்மலர்க் கவின்கணார்மயற்
செயிரவ நாடொறு மியற்றி யேதிரி
யுயிரவ நானென வொறாது காத்தருள்
வயிரவ நாதனை வணங் வாழ்த்துவோம்.

## திருவோத்தூர்ப் புராணம்

வேரிமலர்ப் பண்ணவன்றன் சிரமொன்று
நகநுதியால் வீட்டி யுற்ற
சோரிமலர் தலைநிலத்தற் பாயாதச்
சிரத்தேற்றுத் தொடர்ந்தது போந்து
வாரிமலர்க் கண்வளர்மா னெற்றி யெற்றிக்
குருதி கொடு மமதை நீக்குங்
காரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்
கூப்பி நிதம் கருதி வாழ்வாம்

- கருணாகரக் கவிராயர்

## காஞ்சிப்புராணம்

அலர்ந்தசெங் கமல நிகர்இணை விழியும் அதுமுகிழ்த் தனையதோர் விழியும்
மலர்ந்த பொன் நிறத்த கேசமும் முகரோ மங்களும் வடிவமுங் காட்டி
நலந்திகழ் இரவி மண்டிலத் துறையும் நாயகன் அனையது கண்டான்
சலந்தவிர் தருள்வான் உருகெழத் தொன்றித் தமனியக் கிரியென் நின்றான்.

- சிறீ மாதவச் சிவஞான முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதித்தகிரிப் புராணம்

பரநாத வரைமணிகின் கிணியொலிப்பப்
படமெடுத்துப் பார்க்குந் துத்தி
வரநாக கங்கணத்தான் மாலகந்தை
யிருளகற்ற வந்த சோதி
யிரனாரும் வித்துருமச் செஞ்சடையா
னருளத்தி யுயாராதித்த
பரமேவு மணிவரை வாழ் சட்டைநா
யகன் மலர்த்தாள் போற்றி வாழ்வோம்.

## திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்
பணிவிடைகள் பொருந்தி நாளுந்
செயற்காக வெங்கள் குலந்தனை
யடிமை கொண்டு வளர்தேவ தேவ
னயற்காதி யமலனருள் செய்தபுர
மெனவுலக மனைத்துங் கூறும்
வயற் காழி நகர்ச் சட்டை நாதனிரு
பதமலரை வணங்கி வாழ்வோம்.

## திருக்குறுக்கைப் புராணம்

ஆக்கும் வினைமலர வனதன் றென்றற
கவனுத் தமாங்க நான்குங்
காக்கும் வினைமாய வனதன் றென்றற்
கவன் மேனி கழிநெய் தோரும்
தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்கக்
கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு
போக்கும் வினைச்சூற் படையுபாங்க முங்கொள்
வடுகனடி போற்றி வாழ்வாம்.

## உறையூர்ப் புராணம்

உலகமூன் றினுக்குந் தானேயொருமுத லெனத்தெரிந்தாங்
கலகிறீப் பொறிக டும்பி யலங்குமுத் தலைவே றாங்கி
வலனுடை மாயனாதி வானவர் செருக்கு மாறப்
பலருமுள்ள மஞ்ச நெய்தோர்ப் பலிகொண்டோன் சரணம் சார்வாம்

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவிநாசிப் புராணம்

அஞ்சுகனை யாதிலகு மாடரவக்
கங்கணனை யகலும் வானுள்
விஞ்சுகளை மாரிநிகர் மேனியனை
வாசியென விரைந்து தாவும்
பைஞ்சுகனை யேயெரித்த புககொலியா
ரெயில் காவல் பரிக்கும் வீரக்
கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்
பரசுகனைக் கழறல் செய்வாம்.

## திருவேட்டக்குடி புராணம்

நெஞ்சுக மலர்த்தாள் வைத்தாள நீர்மைய வாணி கேள்வன்
அஞ்சுக தனிலொன் றங்கை யகம்பவைத்தோன் குறளாய் வந்து
மஞ்சுக மேன்மே லோங்கும் வாமன னந்தாள் தந்த
கஞ்சுகந் தரித்த மெய்யன் கழலிணை அகத்துள் வைப்பாம்.

- சிதம்பரநாத பிள்ளை

## திருமலைத் தலப்புராணம்

பயிரவ மோங்கு நல்ல பத்திமெய்ஞ் ஞான மில்லாக்
கயிரவ மகற்றி யாளுங் காவலனாக வெல்லா
வுயிரவ மின்றி வாழ வுதித்தருட் கீர்த்தி மேவும்
வயரவ நாத னான வள்ளலை வணங்கு வாமே.

- சிவராமலிங்கம் பிள்ளை

## திருப்பைஞ்சீலிப் புராணம்

லீலையோடு திரிசூல மலரயன்சென் னியுங்கரத் திலேந்தினானை
வேலையனைத் திறனுக்குமக்கினிச் சுவாலையனை யெனது துன்ப விடர்தீர்த்தானை
பாலையனை யநிலாவை நிகர்த்த வெண்ணீற் றானையணி பணி கபால
மாலையனை ப்ரளயகற்ப காலவயி ரவனையன்பின் வணங்கு வோமே.

## சிதம்பர சபாநாத புராணம்

இருந்துழியிருந் தேயிருநில முழுதுமிறை மகனாணை செய்ம்முறையின்
விருந்திடு மீசனிறைந்த சந்நிதியின் விதயுளியைந்த தொழின டாத்த
வரந்தைசெய் தண்டத் தலைவர்களங் கங்கடைந்தரசாணை செய்ம்முறையிற்
பரந்த பேருலகந்தொறு மடைந்தீசன் பணிபுரி படுகனைப் பணிவோம்.

- திருவாடுதுறை ஆதின வித்துவான் சபாபதி நாவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்துருத்திப் புராணம்

ஆக்குத னினக்குச் சுதந்திர
மன்றென் றலரவற் கறிவிக்கு முகிருங்
காக்குத னினக்குச் சுதந்திர
மன்றுகருதினென் றுடம்புறு நெய்த்தோர்
நீக்குதல் புரிந்தங் கரிக்கறி விக்கு
நெடியமுத் தலைக்கொடும் படையும்
போக்குதல் புரியாதொருகரத் தமைத்த
பொருதிறல் வடுகனைத் தொழுவாம்.

- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

## துறைசைப் புராணம்

காலன் மார்பிறக் கான்மலர் நீட்டிய
சீலன் கோயிற் றிறமிகழ்ந் தோர்களைச்
சூல மேற்ற கழல்விழிக் கேத்திர
பாலன் பொற்பாதம் பற்றிப் பணிகுவாம்.

- சாத்திரம் சாமிநாத முனிவர்.

## கடம்பவனப் புராணம்

கருதரிய லளிதபர னெற்றியிற்றோன்
றிச்சூலகபால மேந்தி
வருபிரளை யஞ்சுற்றிப் பயிரவனா
யண்டதத்துவங்கண் மாற்றி
யரிசரும கஞ்சுகியாய் தேவவேகினூர்ந்து
முன்போ லவையுண்டாக்கி
யிருமைபெறக் காத்தருளுங் கேத்திரபா
லன்றிருத்தா ளேத்தல்செய்வோம்.

- வீமநாத பண்டிதர்.

## திருநாகைக்காரோணப் புராணம்

கழுமுளொண் டுடிவா ளங்கு சம்மப யங் கபால
முழுவலி நாகம் வட்ட முரண்மிகு பாசந் தண்டந்
தழுவிய கரங்கள் பத்துங் கிண்கிணித் தார்சார் மார்பும்
வழுவில் பொற் கழல்சேர் தாளும் வயங்குற வடுகர் நின்றார்.

- மகாவித்துவான் சிறீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செங்காட்டங்குடிப் புராணம்

கடிகமலஞ் சூழ்புவியில் மறையவராம்
வாதாவிக் கடிந்து மன்னாற்
படிக்கமல மறவடியார்க் கனம்படைத்தோர்
சீராளற் பயந்த நங்கை
பிடிக்கமலங் காதரிந்து சமைத்தகறி
வயரவராம் பெருமாற்கீந்தே
அடிக்கமலங் குடி பெறுநற் பரஞ்சோதி
சிறுத்தொண்டர்க் கன்பு செய்வோம்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஆபதுத்தாரணர் மாலை

**(பைரவர் மாலை)**

தருமையாதீனம், 10-ஆவது குருமூர்த்திகள்
சீர்வளர்சீர் திருப்பெருந்தவத்திரு சிவஞான தேசிக சுவாமிகள் அருளியது

## காப்பு

விண்ணார் மலர்ப் பொழில் சூழ்காழிமாமலை மேலமர்ந்த
தண்ணார் மதிபுனை வேணியன் ஆபதுத் தாரணன் மேல்
பண்ணாப் பாடிய மாலைக்கு மாமுகன் பாதமும் நீள்
கண் ணாளிரண்டுள கந்தன்பொற் பாதமும் காத்திடுமே.

## நூல்

சீர்கொண்ட செம்பொன் திருமேனியுஞ்செம் முகமலரும்
கார்கொண்ட சட்டையும் தண்டாயுதமும் கணங்கள் எட்டும்
கூர்கொண்ட மூவிலைச் சூலமும் கொண்டருள் கூர்ந்த கொன்றைத்
தார் கொண்ட வேணியனே காழியாபதுத் தாரணனே 1

தெள்ளும் புனுகும் பனிநீரும் குங்குமச்சேறும் செந்தேன்
விள்ளும் மலரும் நின் பாதத்தில் சாத்தி விடாமலின்பங்
கொள்ளும் படியன்பு தந்தெனை யாண்டருள் கூற்றுவனைத்
தள்ளும் பதாம்புயனே காழி யாபதுத் தாரணனே 2

சாயாத சூலதண்டாயுத னேபச்சைச் சட்டையனே
வேயார் விண்ணோர் தொழ மேனியனேயென் மிடிதவிர்ப்பாய்
வாயார வுன்னைத் துதிப்போர்க்கு வேண்டும் வரமளிப்பாய்
தாயாகிய அப்பனே காழி யாபதுத் தாரணனே 3

வட்டையொப் பாகும் இனியசொல் மாதர் மயக்கத்திலே
பட்டையப் பாமிகயானிளைத் தேன் பண்டிருவர்க் கெட்டா
நெட்டையப் பாமறை காணாத சேவடி நீயருள்வாய்
சட்டையப்பா வடுகா காழி யாபதுத் தாரணனே 4

மட்டுப் படாத யமதூதர் வந்து வளைத்துடலைச்
சுட்டுப் பலபொடியாக்கு முன் காத்தருள் தோடணிந்த
பட்டுப் புயத்தினும் தண்டா யுதத்தினும் பாதத்தினும்
தட்டுப் புனுகணி யுங்காழி காழி யாபதுத் தாரணனே 5

நெறியும் பொறியுந் தவமும் மெய்ஞ் ஞானமும் நீடறிவும்
பொறியும் புகழும் கொடுத்தருள் வாய்புரம் காய்ந்தவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியும் குணமும் கடந்தவ னேகுழக் கன்றுகட்டுந்
தறியின்கண் வந்தவனே காழி யாபதுத் தாரணனே 6

அடியார் மனத்தில் நினைத்த கருமம் அனைத்துமங்கே
முடியாத தேது முடித்தருள் வாய்முரு கார லங்கல்
கடியார்மலர்க கொன்றைமாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந்திய கையனே காழி யாபதுத் தாரணனே 7

முட்டற வாழும் பெருஞ்செல்வ மும்முத் தமிழ்க்கல்வியும்
எட்டுணை யேனுங் கொடுத்துண்டிருக்க எனக்கருள்வாய்
வட்டமதிச் சடையானே சிகர மலைக்கமர்ந்த
சட்டம் உடையவனே காழி யாபதுத் தாரணனே 8

பொய்யா கியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தழுந்தி
மெய்யாம் இதுஎன நம்பிவிட் டேன்வினையேனைக் கண்பார்
மையாடு கண்ணியர் பின்செலத் தாரு வனத்திற் சென்ற
சைவா கமப்பொருளே காழி யாபதுத் தாரணனே 9

நீலக் கயல்விழி மானார் கலவியின் நேசம் வைத்தே
ஆலைக் கரும்பது போலாய் விடாதுன் னருள்புரிவாய்
வாலைக் கலைமதி வேணியனே வடுகா அடியார்
சாலத் தொழும் ஐயனேகாழி யாபதுத் தாரணனே 10

செந்தமி ழோர்தொழும் தண்டாயுதமும் திருவழகும்
சுந்தரமும் பச்சைக் கஞ்சுகம் தானும் கருதரிய
இந்தணி வட்டச் சடையும் கண்குன்றும் இருதபமும்
சந்தமும் மறவேன் காழி யாபதுத் தாரணனே 11

படிக்குந் தண்டாயுதமென் பார்க்கு நோய்வினைபற்றறுப்பப்
பிடிக்கும் தண்டாயுதம் எண்ணருங் கோடிப்ர மாண்டமெல்லாம்
முடிக்கும் தண்டாயுத மூதண்ட தாண்டு முகுந்தன்சென்னி
தடிக்கும் தண்டாயுதனே காழி யாபதுத் தாரணனே 12

அரம்பிடிக் கும்கண்ணி னாராசை மேற்கொண்டலைவ தெல்லாம்
வரம்படிக் கும்கருத் துண்மை கண்டார்க்கில்லை வந்தருள்கூர்
உரம்பிடிக் கும்துட்டவேதான பூதத்தை யொட்டி வெட்டித்
தரம்பிடிக் கும்வடுகா காழி யாபதுத் தாரணனே 13

பெருகாரணியத்தில் யான்சென்ற போதும் பெரும் பொருளால்
வருகாதல் கொண்டிரவில் துயில் போதும் இம்மண்டலத்தில்
துருவா தியர்கள் சபையில் செல்போதும் துணையெனக்கு
வருவா யுனைநம்பி னேன்காழி யாபதுத் தாரணனே 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மலை மீதினில் சாமள கஞ்சுகம் சேர்வடிவம்
அம்மலை போலும் நற்றண்டா யுதமும் கொண்டன்புடனே
எம்மலை வேதம் தவிர்த்தருள்வாய் கடுவேந்தி விண்ணோர்
தம்மலை வோட்டும் தமிழ்க்காழி யாபதுத் தாரணனே 15

மாடும்தண் தாமம் அணிந்திடும் மைந்தரும் மாதர்களும்
வீடும்தண் தாமம்என மகிழாமல் உன்மென்மலர்த்தாள்
பாடும் தண்டாத்தமிழ் ஈந்தருள் பூத பிசாசுகளைச்
சாடும் தண்டாயுதனே காழி யாபதுத் தாரணனே 16

வெடிக்கும் பரவை முரசதிர் காமனை வீறழியப்
பொடிக்கு கனல் விழிப்புண்ணிய னேபுவி யோர்கள் நெஞ்சம்
துடிக்கும் பொல்லாத பிசாசுகள் தம்மைத் துரத்திவெட்டி
அடிக்கும் தண்டாயுதனே காழி யாபதுத் தாரணனே 17

இலையென்று ஒருவர்க்கிதம் சொல்லியென்றும் இரங்கிநில்லா
நிலையன்று நீ அளித்தாண்டருள் வாய் நித்தனேபுகலி
மலையொன் றியவடு கேச கங்காள வயிரவனே
தலையொன் றியகைய னேகாழி யாபதுத் தாரணனே 18

பாடிக்கொண் டாடிப்பணிந்திடும் அன்பர் தம் பாதமலர்
சூடிக்கொண் டாடித் திரிந்திட வேயெனைத் தொண்டு கொள்வாய்
தேடிக்கொண்டாடி வருவோர்கள் வல்வினைச் சிக்கை யெல்லாம்
சாடிக் கொண்டாடிய வாகாழி யாபதுத் தாரணனே 19

தெவ்விடத் தாய திசைபிழைத்தாலும் சின அரவம்
கவ்விடத்தான் வெய்யகான் நடந்தாலும் கருதரிய
எவ்விடத்தேனும் இருந்தாலும் என்றன் இடரையெல்லாம்
தவ்விட நீவரு வாய்காழி யாபதுத் தாரணனே 20

நீடும் தண்டாயுதம் நித்தம்தண்டாயுதம் நித்தம் அன்பர்
தேடும் தண்டாயுதம் ஈரேழுலகமும் சேவித்துக் கொண்
டாடும் தண்டாயுதம் அண்டாது பேய்கள் அலறிவிழச்
சாடும் தண்டாயுதனே காழி யாபதுத் தாரணனே 21

வங்கம் கலிங்கம் குலுங்கம் தெலுங்கம் மராடம் முதல்
எங்கெங்கும் போக இடர்வரும் போது இனிமையுடன்
அங்கங்கு நீதுணை யாய்வரு வாய் அந்தி வான்மதியம்
தங்கும் சடாடவி யாய்காழி யாபதுத் தாரணனே 22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனம் தரும் இதெண்ணாமலே யிடும்பான் மெலிந்திங்கு
ஊனம் தரும் இந்தச் செல்வருக் கிச்சையுரை உரைத்தேன்
வானம் தரும் உம் பருக்காய் அவுணரை மாட்டி நல்ல
தானம் தரும் அண்ண லேகாழி யாபதுத் தாரணனே 23

அடிக்குள் பணியும் நின் அன்பரைக்காயும் அவர் உடலை
வெடித்துப் பொடி படநீ விழிப்பாய் எட்டு வெற்பும் செற்றே
இடித்துப் பொடிபட வல்லாயுதம் பதினெட்டும் உன்கைத்
தடிக்குப் பெரியதுண் டோகாழி யாபதுத் தாரணனே 24

உளப்பரி வில்லவர்தம் இல்லில் சென்றங்குரை உரைத்துச்
கௌப்பரி வான மொழிபல கூறிக் குறைகள் சொல்வீர்
இளைப்பறக் காப்பவன் யாவன் என்றால் அரவிந்தம் எல்லாம்
தளப்பருஞ் செல்வி வளர்காழி யாபதுத் தாரணனே 25

கலையாரும் முத்தமிழ்க் கல்வியும் யோகமு காசினியில்
நிலையா கியபெருஞ் செல்*(ல?)*வமும் நீதியும் நீயருள்வாய்
மலையாசன வடுகேச கங்காள வயிரவனே
தலைமாலை சூழ்புய னேகாழி யாபதுத் தாரணனே 26

வாட்கொண்ட கண்ணியர்மா யையில் வீழ்ந்து மருண்டுபல
நாட்கொண்ட தீயேனை யாட்கொண்டு காத்தருள் நல்குவையோ
கோட்கொண்ட காலனுக்கஞ்சிய பாலனைக் கூர்ந்தளித்துத்
தாட்கொண்டு காத்தவனே காழியாபதுத் தாரணனே 27

நிட்டைக்குள் வாழ்வும் நின்னடிபோற்றவும் நேர்ந்தறியா
வொட்டைச் சடலத்தையான் எடுத்தேன் ஒளி ஓங்குசெம்
பொற்பட்டைப் புனைந்த புயமீது மாயன் படிவம் தந்த
சட்டைக்கு இடம் தந்தருள் காழி யாபதுத் தாரணனே 28

சொல்லாகிய பொருள் எல்லாம் உணர்ந்து உனைத்தோத் தரிக்க
வல்லார் தமைக்தொழ வல்லான் என என்னை வைப்பதுண்டோ
கல்லால் சிலைதொட்ட நல்லார் எல்லார்க்கும் கதியளிக்கும்
சல்லாபம் ஆனவ னேகாழி யாபதுத் தாரணனே 29

இந்திரன் வாழ்க்கையும் நான் முகன் வாழ்க்கையும் ஈர்ந்துளவோன்
நந்தமில் வாழ்க்கையும் பெற்றாலும் நின்னடியார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை ஒவ்வாது காண் ஒளி பூண்ட இளஞ்
சந்திர சேகரனேகாழி யாபதுத் தாரணனே 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிற்றம்பலம்

### பதிகம் 1

### எடுக்கின்ற வேலைகள் இனியே முடிய பாராயண் செய்ய வேண்டிய திருப்பதிகம்

பண்-பழம்பஞ்சரம்-திருஞானசம்பந்தர்
தலம்: திருவாலவாய் (மதுரை)

*வேத வேள்வியை நிந்தனை செய்துழல்*
*ஆதமில் அமணொடு தேரரை*
*வாதில்வென்றழிக் கத்திருவுள்ளமே*
*பாதி மாதுடனாய பரமனே*
*ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்*
*ஆலவாயில் உறையும் எம் ஆதியே* 1

*வைதிகத்தின் வழியொழு காதவக்*
*கைத வம்முடைக் காரமண் தேரரை*
*எய்தி வாதுசெ யத்திருவுள்ளமே*
*மைதி கழ்திரு மாமணி கண்டனே*
*ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்*
*ஆலவாயில் உறையும் எம் ஆதியே* 2

*மறைவ ழக்கமி லாதமா பாவிகள்*
*பறித லைக்கையர் பாயுடுப் பார்களை*
*முறிய வாதுசெய த்திருவுள்ளமே*
*மறியு லாங்கையில் மாமழு வாளனே*
*ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்*
*ஆலவாயில் உறையும் எம் ஆதியே* 3

*அறந்த அங்கம் ஆறு ஆயின நீரமையைக்*
*கறுத்த வாழ் அமண் கையர்கல் தம்மொடும்*
*செறுத்து வாதுசெயத்திரு வுள்ளமே*
*முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே*
*ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்*
*ஆலவாயில் உறையும் எம் ஆதியே* 4

*அந்தணாளர் புரியும் அருமறை*
*சிந்தை செய்யா அருகர் திறங்களைச்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்த வாது செயத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே 5

வேட்டு வேள்வி செயும் பொரு ளைவிரி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஒட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டிலானை உரித்த எங்கள்வனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே 6

அழலது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாது செயத்திரு வுள்ளமே
தழலி லங்க திருவுருச் சைவனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே 7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே 8

நீலமேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெயத் திருவுள்ளமே
மாலும் நான்முகனுங் காண்பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே 9

அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
அன்று வாது செயத் திருவுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடல் ஆலவாயக் கோனை விடை கொண்டு
வாடல்மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

## பதிகம் 2

**இப்பதிகத்தை 48 நாட்கள் ஓதினால் நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, வாதம் முதலான நோய்கள் குணமாகும் திருப்பதிகம்.**

பண்- தக்கராகம், திருஞானசம்பந்தர், தலம்: திருப்பாச்சிலாச்சிரமம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே 1

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல் சுடரால் இவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணிமார்பர்
தம்அடிகள் இவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்தழகாய
புனிதர் கொலாம் இவர் என்ன
வனமலி வண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையைவாட
மயல் செய்வதோ இவர்மாண்பே 4

மாந்தர் தம்பால் நறுநெய் மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ, தையலை வாடச்
சதுர் செய்வதோ இவர் சார்வோ
நீறுமெய்பூசி, நிறைசடை தாழ
நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி 5

ஆறதுசூடி ஆடரவாட்டி
ஐவிரற் கோவண ஆடை
பாறரு மேனியர் பூதத்தார் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே 6

பொங்கிள நாகம் ஓர் ஏகவடத்தோடு ஆமை
வெண்ணூல் புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர் கொலாம் இவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சங்கொலி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வதோ இவர் சார்வே 7

ஏவலத்தால் விசயற்கருள் செய்து
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய
மூர்த்தியை யன்றி மொழியாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்களும் பரவும் எழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே 8

மேலது நான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்ததில்லை
யென இவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய் பொழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பலசெய்வதோ இவர் பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனும்
நகுவரவர் இருபோதும்
ஊனொடு கூடியவுட்கு நகையாலுரை
களவை கொள வேண்டா
ஆணொடு பெண் வடிவாயினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பூண் நெடு மார்பரோ பூங்கொடிவாடப்
புனை செய்வதோ இவர் பொற்பே 10

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத் துறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய
புனிதர் கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு
காழிநற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்த
சாரகிலா வினை தானே.

## பதிகம் 3

## சனிக்கிரகத்தினால் வரும் துன்பத்தை போக்கி நலம் தரும் திருப்பதிகம்

பண் - பழந்தக்கராகம் திருஞானசம்பந்தர் தலம்: திருநள்ளாறு

யோகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே 2

ஆன்முறையா லாற்ற வெண்ணீறாடி அணியிழையோர்
பான் முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றியகை
நான் மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே 3

புல்கவல்ல வார்சடை மேற்பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றை மாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர் தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே 4

ஏறுதாங்கி யூர்திபேணியேர்கொள் இளமதியம்
ஆறுதாங்கும் சென்னிமேலோர் ஆடவரஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே 5

திங்களுச்சி மேல்விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குத் தன்னடியார் கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே 6

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண் கொண்முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித்திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைந்த நம்பெருமான் மேயது நள்ளாறே 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டித் சுண்ணவெண்ணீறாடுவதன்றியும் போய்ப்
பட்ட மார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே 8

உண்ணலாகா நஞ்சுகண்டத்துண்டுடனேயொடுக்கி
அண்ணலாகா வண்ணல் நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகாவுள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசு மெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன் மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிலும் உடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன்நல்ல
பண்பு நள்ளாறேத்து பாடல்பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகிலுறைவாரே 11

## பதிகம் 4

## துன்பங்களை நீக்கி இன்பம் தந்தருளும் பதிகம்

பண்: பழந்தாரகம் திருஞானசம்பந்தர் தலம்: நெடுங்குளம்

மறையுடையாய்தோலுடையாய் வார்சடை மேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனே என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய்கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 1

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ்சு
தனைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியவே நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 2

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்லேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடுநீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 3

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர் பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர்சடையாரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்தாள்நிழல் கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 4

பாங்கின்நல்லார் படிமஞ் செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலொடு தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினொடுந் தலைவநின் தாள்நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருந்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்று எம் பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 7

குன்றின் உச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தியிராப்பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 8

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான்முகனும்
சூழவெங்கும் நேட ஆங்கோர் சோதியுளாகி நின்றயாய்
கேழல் வெண்கொம் பணிந்த பெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 9

வெஞ்சொல் தஞ்சொல் ஆக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லாவாய் மொழியால் தோத்திர நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 10

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர் வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன்நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே 11

## பதிகம் 5

## குளிர் காய்ச்சல், வினையால் வரும் துன்பங்கள் நீங்க பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

சம்பந்தர் தேவாரம் தலம்: திருச்செங்கோடு

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டாப் பெறா திருநீலகண்டம் 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம் 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 3

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 4

மற்றிணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மை கொல்லோ
சொற்றயை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம்ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொதுவந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 6-7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்து உம் கழலடிக்கே
உருகிமலர் கொடு வந்து உமை யேத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தரே
திருகிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 8

நாற்றமலர்மிசை நான் முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றும் தொழுது வணங்குதும்நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 9

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ்கொன்றைப்புரிசடையீர் அடிபோற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 6

## வழக்குகளில் வெற்றி பெறவும், தொழில், விவசாயம், வியாபாரம் இவற்றில் வருவாய் பெருகவும் படிக்க வேண்டிய திருப்பதிகம்

சம்பந்தர் தேவாரம் தலம்: திருவீழிமிழலை

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே 1

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே 2

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே 3

நீறுபூசினீர் ஏறதேறினீர்
கூறுமிழலையீர் பேறும் அருளுமே 4

காமன்வேவ ஓர் தூமக்கண்ணினீர்
நாம மிழலையீர் சேம நல்குமே 5

பிணிகொள் சடையினீர் மணிகொள்மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே 6

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே 7

அரக்கன் நெரிதர இரைக்கக் எய்தினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே 8

அயனு மாலுமாய் முயலு முடியினீர்
இயலு மிழலையீர் பயனும் அருளுமே 9

பறிகொள் தலையினார் அறிவதறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவதரியதே 10

காழிமாநகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 7

## மகப்பேறு (பிரசவம்) இனிதே நடைபெற உதவும் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தேவாரம்    தலம்: திருச்சி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற என்னுள்ளங்குளிரும்மே 1

கைம்மகவேந்திகடுவனொடு ஊடிக்கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத்து ஈருரி போர்த்த விகிர்தாநீ
பைம்முக நாகம்மதியுடன் வைத்தல் பழியன்றே 2

மந்த முழவம் ததும்ப வரைநீழல்
செந்தண் புனமுஞ் சுனையுஞ் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரம்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே 3

துறை மல்கு சாரற் சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறை மல்குவண்டுந்தும்பியும் பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்கு கண்டன் கனலெரியாடுங் கடவுள்ளம்
பிறை மல்க சென்னி யுடையவன் எங்கள் பெருமானே 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந்த தலைவரல்லாமையுரைப் பீர்கான்
நீலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே 5

வெய்யதண் சாரல் விரிநிற வேங்கைத்தண்போது
செய்ய பொன் சேருஞ் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையலோர் பாகமகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வர் ஆரிவர் செய்கை அறிவாரே 6

வேயுயர் சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர் கோயிற் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேயுயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலுஞ் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே 8

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்பள்ளி நாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர் உம்மை யேதிலர் கண்டால் இகழாரே 9

நாணாது உடை நீத்தோர்களுங் கஞ்சிநாட்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவார்கள் உரைக்குஞ்சொல்
பேணாது உறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே 10

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரோடு மன்னி வாழ்வாரே 11

## பதிகம் 8

## வெப்பத்தினால் உண்டாகும் நோய்களான ஜுரம், அம்மை முதலியன நீக்கும் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: திருஆலவாய் (மதுரை)

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தருவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு பேசவினியது நீறு
பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தமாவது நீறுபுண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே 6

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்தாலவாயான் திருநீறே 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே 8

மாலொடு அயன்அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பது தருவது நீறு
ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் எத்தும்தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னவன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 9

## தடைப்பட்ட திருமணம் (பெண், ஆண் அனைவருக்கும்) இனிதே விரைவில் நடைபெற ஓத வேண்டிய திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்   தலம்: திருமருகல்

*சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்*
*விடையாய் எனுமால் வெருவா விழுமால்*
*மடையார் குவளை மலரும் மருகல்*
*உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே* 1

*சிந்தா எனுமால் சிவனே எனுமால்*
*முந்தா எனுமால் முதல்வா எனுமால்*
*கொந்தார் குவளை குலவும் மருகல்*
*எந்தாய் தகுமோ இவள் ஏசறவே* 2

*அறையார் கழலும் அழல் வாயரவும்*
*பிறையார் சடையும் உடையாய் பெரிய*
*மறையார் மருகல் மகிழ்வாயிவளை*
*இறையார் வளைகொண்டெழில் வவ்வினையே* 3

*ஒலிநீர் சடையில் கரந்தாயுலகம்*
*பலிநீ திரிவாய் பழியில் புகழாய்*
*மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை*
*மெலிநீர் மையல் ஆக்கவும் வேண்டினையே* 4

*துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன*
*மணிநீலகண்டம் உடையாய் மருகல்*
*கணிநீலவண்டார் குழலாள் இவள்தன்*
*அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே* 5

*பலரும் பரவப்படுவாய் சடைமேல்*
*மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்*
*புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து*
*அலரும் படுமோ அடியாள் இவளே* 6

*வழுவாள் பெருமான் கழல் வாழ்க எனா*
*எழுவாள் நினைவாள் இரவும் பகலும்*
*மழுவாள் உடையாய் மருகல் பெருமான்*
*தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே* 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாததோர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே 9

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே. 11

## பதிகம் 10

## குழந்தை செல்வம் பெற பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: திருவெண்காடு

கண்காட்டும் நுதலானும், கனல் காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும், பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும், பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடை காட்டிடும் கொடியானே 1

பேய் அடையா பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே 2

மண்ணோடு நீர், அனல், காலோடு ஆகாயம் மதி இரவி
எண்ணில் வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடு ஆண், பெருமையோடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர் கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினனே 3

விடமுண் மிடற்று அண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை மார்நிழலைக் குருகு என்று
தடமண்டு துறைக் கொண்ட தாமரையின்பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்த நகை காட்டும் காட்சியதே 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைமலி தண்கானல் வெண் காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடு நன் மறைவன்தன்
மேல் அடர், வெங்காலன், உயிர், விண்டபினை நமன் தூதல்
ஆலமிடற்றான் அடியார் என்று அடர அஞ்சுவரே 5

தண் மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண் மதியநூல் உமை ஓர் கூறு உகந்தான் உறைகோயில்
பண் மொழியால் அவன் நாமம் பல ஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே 6

சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்த அயிராவதம் பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண் உடை இறைவனே 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து அன்று அருள் செய்தான் உறைகோவில்
கண் மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண் மொய்த்த பொழில் வரிவண்டு இசை முரலும் வெண்காடே 8

கள்ளார் செங்கலத்தான் கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கு ஓடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர் வரியான்
வெள்ளானை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான் என்று
உள்ளாடி உருகாதார் உணர்வுடமை உணரோமே 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு மொழிபொருள் என்றும்
பேதையர்கள் அவர், பிரிமின் அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பிய சீர் வியன் திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர் என்று உணருமினே 10

தண்பொழில் சூழ் சண்பையர் கோன் தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச் சென்னி விகர்தன் உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்து இவை வல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 11

## இரத்த அழுத்த நோய் தீரவும், சிவபுண்ணியம் பெறவும், தீவினைகள் நீங்கவும், பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்     தலம்: சீர்காழி

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்துநினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்ந்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே 1

மந்திர நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்(து)
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே 3

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே 4

கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்குள பூதம் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவிந் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே 6

வீடு பிறப்பை அறுத்துமெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்த்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே 8

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர்வணச் சேவடி செவ்விநாள் தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவண அஞ்செழுத்துமே 9

புத்தர் சமண் கழுக்கையர் பொய் கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே 10

## பதிகம் 12

## நவக்கிரகங்களால் ஏற்படும் எல்லாவித துன்பங்களையும் நீக்கும் பொருட்டு பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: திருமறைக்காடு

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 1

என்பொடு கொம்போ டாமை இவைமார்பிலங்க
எருதேறி யேழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூழி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதோடு ஒன்றோடு ஏழுபதினெட்டொடாறும்
உடனாயநாள்கள் அவை தாம்
அன்போடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள்முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 3

மதிநுதன் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 5

வாள்வரி அதளது ஆடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடு நாகமொடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 6

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர் சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் தன்னோடும்
இடரான் வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 8

பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 9

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளை நெந்நெல்
துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்துத
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 13

## பொருள் பெறுவதற்கு பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: ஆவடுமுறை

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 1

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 2

நனவினும் கனவிலும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்வரி நறுங் கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைம்மல்குவரிசிலைக்கணையொன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 4

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்துயர் தோன்றியோர் வெருவறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்த வெண் பொடியணி சங்கரனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல் எழ விழித்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 7

பேரிடர் பெருகி ஓர் பிணிவரினும்
சீருடைக் கழல் அலால் சிந்தைசெய்யேல்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நாக
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தா உன் அடி அலால் அரற்றாது என்நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே 10

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழது மாலைவல்லார்

வினையாயின நீங்கிப் போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 14

### எலும்பு முறிவு குணமடையவும் முற்பிறப்பு வினைகள் நீங்கவும் உதவும் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தேவாரம் தலம்: திருமாகறல்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடுநீள்கொடி கள் மாடமலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்குவிரி கொன்றையோடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல்களின் எய்தி அழகார்
மலையின் நிகர் மாடம் உயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறல் உளான்
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்த எரிபுன் சடையினுள்
அலைகொள்புனல் ஏந்து பெருமான் அடியை
ஏத்த வினை அகலுமிகவே 2

காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ் முழவு காமருவு சீர்
மாலைவழி பாடு செய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்

தோலையுடை பேணியதன் மேலோர் சுடர்
நாகமசையா அழகிதாய்
பாலையன நீறுபுனை வானடியை
ஏத்தவினை பறையும் உடனே 3

இங்குகதிர் முத்தினோடு பொன்மணிகள்
உந்திஎழில்மெய் உள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனலாடி
மகிழ்மாகறல் உளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக வேத்திவழி
பாடு நுகரா எழுமினே 4

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள் நட
மாடமலி மாகறல் உளான்
வஞ்சமத யானைபுரி போர்த்துமகிழ்
வானோர் மழுவாளன் வளரும்
நஞ்சமிருள் சண்டமுடை நாதனடி
யாரை நலியா வினைகளே 5

மன்னுமறை யோர்களோடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகையால் இனி திறைஞ்சி
இமையோரில் எழு மாகறல் உளான்
மின்னனை விரி புன்சடையின் மேல் மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்க உயர்
வானுலகம் ஏறல் எளிதே 6

வெய்யவினை நெறிகள் செ வந்தணையு
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரிகானல்மது வார்கழனி
மாகறல் உளான் எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சி அடையா
வினைகள் அகலுமிகவே 7

தூசுதுகில் நீளகொடிகள் மேகமொடு
தோய்வன பொன்மாடமிசையே
மாசுபடு செய்கை மிக மாதவர்கள்
ஓதி மலி மாகறல் உளான்
பாசுபத விக்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடியீசன் என ஏத்தவினை
நிற்றல் இல போகும் உடனே 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய விரி தாமரைகள் நெய்தல்
கழுவீர் குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசை பயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மைகெட நின்ற பெருமான்
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள்வினை
யாயினவும் அகல்வதெளிதே 9

காலின்நல் பைங்கழல்கள் நீள் முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலும் மலரானும் அறியாமை எரியாகி
உயர் மாதறல் உளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும் விடை யூர்திடை அடிகள்
அடியாரை அடையாவினைகளே 10

கடைகொள் நெடுமாடமிக ஓங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யால் பரவி அரனையடி
கூடுசம் பந்தனுரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணரர் வாரவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

## பதிகம் 15

**நல்ல ஒலி அலைகள் பரவி மங்களம் பெருகவும், திருமணம், மணிவிழா போன்ற சுபநிகழ்ச்சிகளி வாழ்த்தவும் பயன்படுத்த வேண்டிய "-மங்களப் பதிகம்"**

திருஞானசம்பந்தர் தலம்: சீர்காழி

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர்
குறைவிலைக் கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப் பெண்ணில்
நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே 2

தொண்டனை செய்தொழில் துயர் அறுத்து
உய்யலாம் வண்டனை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடி
கண் துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண் துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே 3

அயர்வுளோம் என்றுநீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே 4

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடை அமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடை உயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே 5

மற்றொரு பற்றிலை நெஞ்சமோ மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப்பேரல் குல்திருந்திழை யவளோடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே 6

குறைவளை அதுமொழி குறைவுஒழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறி
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள் செய்தான் கழுமலவளநகர்ப்
பெருக்க நீர் அவளொடும் பெருந்தகை இருந்ததே 8

நெடியவன் பிரமனும் நினைப்பரிதாய் அவர்
அடியொடு முடியறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாருறு தட்டுடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆருறு சொற்களைந்து அடியினை அடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே 10

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுல காள்வரே. 11

பதிகம் 16

## மனக்கவலைகள் ஒழியவும் பிறவா நிலை எய்தவும் பாராயணம் செய்ய வேண்டிய திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: திருநல்லூர்ப் பெருமணம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண் மலர்வார் மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வார் ஏனும் குணம் பல நன்மைகள்
இல்லார் ஏனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரா்
நல்லார் நாமம் நமச்சிவாயவே. 5

மந்தரம் அன்ன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய்வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுத்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால் விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண் பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9

கஞ்சி மண்டையர் கையில் உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சிவாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே. 11

## பதிகம் 17

## சிவகதியை அளிக்கும் பதிகம்

திருநாவுக்கரசர் தலம்: பொது

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே 1

பூவினுக் கருங்கமலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றுமில்லையாம்
பண்ணிய உலகினில்பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே 3

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்துயாரையும்
விடுக்கிற் பிரானென்று வினைவுவோமல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினு மருளின் நாம்உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே 4

வெந்த நீறருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்
குலமில ராகிலும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றாலும்
ஓடினேன் ஓடிச் சென்றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே 7

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்கை விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே 9

மாப்பிணைத் தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பினை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாய பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 18

### தீராத வயிற்று வலியை குணமடையச் செய்யும் பதிகம்

திருநாவுக்கரசர் தேவாரம் தலம்: திரு அதிகை வீரட்டானம்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 1

நெஞ்சம் உமக்கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமுளீர்
அஞ்சேல் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடி கொண்டு மெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைக் கொண்டு
அணிந்தீர் அடி கேளதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 3

முன்னம் அடியேன் அறாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்கு ஆளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந்தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தம்கடன் ஆவதுதான்
அன்ன நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டு கொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும்வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யில்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன்அடி யேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 6

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப்புரட்டி அறுத் தீர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 7

வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடி யேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமில்லைச்
சங்க வெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 8

போர்த்தாய் அங்கோர் ஆனையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டருள் செய்து அது கருதாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல் சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே 10

## பதிகம் 19

## பிறவிப் பயனைக் கொடுக்கும் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: பொது

தலையை நீ வணங்காய் தலைமாலை - தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீ வணங்காய் 1

கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும் பிரான்தனைக் கண்காள் காண்மின்களோ 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ் செவிகாள் கேண்மின்களோ 3

மூக்கெ நீமுரலாய் - முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாம் 4

வாயே வாழ்த்து கண்டாய் - மதயானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான் தன்னைவாயே வாழ்த்துகண்டாய் 5

நெஞ்சே நீநினைப்பாய் - நிமிர்புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய் 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடிமாமலர்தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனை கைகாள் கூப்பித்தொழீர் 7

ஆக்கை யாற்பயனென் - அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றி என்னாத இவ் ஆக்கை யாற்பயனென் 8

கால்களாற்பயனென் - கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்களாற்பயனென் 9

உற்றார் ஆருளரோ - உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல் லால்நமக் குற்றார் ஆருளரோ 10

இறுமாந்திருப்பன் கொலோ - ஈசல் பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்க் சென்றங்கு இறுமாந்திருப்பன் கொலோ 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக் கண்டுகொண்டேன் - திரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன் 12

## பதிகம் 20

## திருஞானசம்பந்தர் அருளிய திருஎழுகூற்றிருக்கை திருச்சிற்றம்பலம்

தேவாரம் முழுவதும் ஓதிய பலனை நல்கும் ஒப்பற்ற திருப்பதிகம்

ஓர் உரு ஆயினை மானாங்காரத்து
ஈரியல் பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல்நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுதேத்திய நால்வர்க்கு ஒளிநெறி
இருநதி அரவமோடு ஒரு மதி சூடினை
ஒருதாள் ஈர்ஆயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துறு அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவலி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தொடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிஅம் ஐந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த
தோணி புரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தாராய் ஏய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைத்தனை
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறல் கெடுத்தருளினை புறவம்புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினன்
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும் மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒரு மையின்பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமலை முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே.

## பதிகம் 21

## விடம் தீர்க்கும் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தலம்: பொது

ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம் இடு வெண்டலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே 1

இரண்டு கொலாம் இமையோர் தொழுபாதம்
இரண்டு கொலாம் இலங்குக்குழை பெண்ஆண்
இரண்டு கொலாம் உருவம் சிறு மான்மழு
இரண்டு கொலாம் அவர் எய்தின தானே 2

மூன்று கொலாம் அவர் கண்ணுத லாவன
மூன்று கொலாம் அவர்சூலத்தின் மொய்யிலை
மூன்று கொலாம் கணை கையது வில் நாண்
மூன்று கொலாம் புர மெய் தன தாமே 3

நாலு கொலாம் அவர்தம்முகம் ஆவன
நாலு கொலாம் சனனம் முதற் தோற்றமும்
நாலு கொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலு கொலாம் மறை பாடின தாமே 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து கொலாம் அவர் ஆடரவின் படம்
ஐந்து கொலாம் அவர் வெல் புலனாவன
ஐந்து கொலாம் அவர் காயப்பட்டான் கணை
ஐந்து கொலாம் அவர் ஆடின தாமே 5

ஆறு கொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறு கொலாம் அவர்தம் மகனார் முகம்
ஆறு கொலாம் அவர்தார்மிசை வண்டின் கால்
ஆறு கொலாம்சுவை ஆக்கின தாமே 6

ஏழு கொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழு கொலாம் அவர்கண்ட இருங்கடல்
ஏழு கொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழு கொலாம் இசை யாக்கின தாமே 7

எட்டு கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்
எட்டு கொலாம் அவர் சூடும் இனமலர்
எட்டு கொலாம் அவர் தோளிணை யாவன
எட்டு கொலாம் திசை யாக்கின தாமே 8

ஒன்பது கொலாம் வாசல் வகுத்தன
ஒன்பது கொலாம் மார்பினில் நூலிழை
ஒன்பது கொலாம் கோலக் குழற்சடை
ஒன்பது கொலாம் பாரிடம் தானே 9

பத்து கொலாம் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்து கொலாம் எயிறுந்நெரிந் துக்கன
பத்து கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்து கொலாம் அடியார் செய்கை தானே 10

## பதிகம் 22

### என்றும் உணவு கிடைக்கச் செய்யும் பதிகம்

திருநாவுக்கரசர் தேவாரம்    தலம்: தில்லை

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னன் பாலிக்கும் மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
கரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப்புலியூர் எம் பிரானையே 2

அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச்சுற்றுக் கிடந்தார் என்ற யலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்பட முனம்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே 3

அல்லல் என் செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வாணர்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்பன என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி யிருக்கவும் வைப்பரே 5

சிட்டர் வானவர் சென்று வரங் கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும்அச்
சிட்டர்பால் அணுகான் செறு காலனே 6

ஒருத்தனார் உலகங்கட் கொரு சுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்தனார் இளையார் விடமுண்ட எம்
அருத்தனார் அடியாரை யறிவரே 7

விண் நிறைந்ததோர் வெவ்வழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண் நிறைந்த கடி பொழில் அம்பலத்
துள் நிறைந்து நின்றாடும் ஒருவனே 8

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டந்திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி நாரணன் - நான்முகன் என்றிவர்
தேடியந் திரிந்துங் காண வல்லரோ
மாட மாளிகை சூழ் தில்லை யம்பலத்(து)
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே 10

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடிபத்து இற
மிதி கொள் சேவடி சென்றடைந் துய்மினே 11

## பதிகம் 23

## முத்திப் பேற்றை அளிக்கும் உருத்திர திருத்தாண்டகம் நின்ற

### திருத்தாண்டகம் (உருத்திர தாண்டகம்)

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எரியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக் கப்பால் ஓர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
எழும் சுடராய் எம் அடிகள் நின்றவாறே 2

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் கால் ஆறாய்க் கழியு மாகிப்
பு-ல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாகி கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
        கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொள்களிறு கோமானுமாய்
        குரைகடலாய்க் குடைகடற்கோர் கோமானுமாயி
நீற்றானாய் நீறேற்ற மேனியாகி
        நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சி யாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
        யெழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
        திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
        தாரகையும் ஞாயிறும் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
        இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி
        நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 5

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
        அருமறையோடு ஐம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
        பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய் காவிரியாய்க் கன்னி யாகிக்
        கடலாகி மலையாகிக் கழியுமாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
        எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்ற வாறே 6

மாதா பிதாவாகி மக்க ளாகி
        மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
        கொல்புலித் தோல் ஆடைக் குழக னாகிப்
போதாய் மலர்கொண்டு போற்றி நின்று
        புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானும் என நினைந்தார்க்கு எளிதே யாகி
        அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே 7

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
        அறிவாகி அழலாகி ஆவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
        நாதனாய் வேத்தி னுள்ளோ னாகிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குகளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே 8

நீராகி நீள் அகலம் தானே யாகி
நிழலாகி நீளவிசும்பின் உச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தனாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்ல எம்ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே 9

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய் புராணன் தானே யாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே 10

## பதிகம் 24

## எமதூதர்கள் வரவிடாமல் தடுக்கும் பதிகம்

காலபாசத் திருக்குறுந்தொகை என்னும் திருநாவுக்கரசர் தேவாரம்

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்து
பண்டு நான் செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடு கொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே 1

நடுங்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்லவடம் இடுவார் கட்கு
கொடுக்கக் கொள்க எனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீர் இங்கு நீங்குமே 2

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமம் சிவன் என்று அரற்றுவார்
ஆர்க ளாகிலு மாக அவர்களை
நீர்கள் சாரப் பெறீரிங்கு நீங்குமே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றினேன் சடை நீள்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்றவும் களிப்பட்ட மனத்தராய்ப்
போற்றி என்றுரைப் பார்புடை போகலே 4

இறையென் சொல்மறவேல் நமன் தூதுவீர்
பிறையும் பாம்பும் உடைப்பெருமான் தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வார் எதிர் செல்லலே 5

வாம தேவன் வளநகர் வைகலும்
காமம் ஒன்றிலராய்க் கைவிளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏமமும் புனைவார் எதிர் செல்லலே 6

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன்மின் நமது ஈசன் அடியரை
விடைகொள் ஊர்தியினான அடியார்குழாம்
புடைபுகாது நீர்போற்றியே போமினே 7

விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நீச்சல் நீறணி வாரை நினைப்பதே
அச்சம் எய்தி அருகணாது நீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே 8

இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னில் ஒன்று வல்லாரையுஞ் சாரலே 9

மற்றுங் கேண்மின் மனப்பரிப்பு ஒன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடையான் அடியே அலால்
பற்று ஒன்றில்லிகள் மேற்படைபோகலே 10

அரக்கன் ஈரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றிட்டான் தமர் நிற்கிலும்
சுருக்கெனாது அங்குப் பேர்மின்கள் மற்று நீர்
சுருக்கெனில் சுடரான் கழல் சூடுமே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 25

# எல்லாத் தீவினைகளையும் போக்கி பதி புண்ணியத்தை நல்கும் அற்புதப் பதிகம்

திருநாவுக்கரசர் தேவாரம்  தலம்: திருவையாறு

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
 மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளெ ஒளித்தாய் போற்றி
 ஓவாதி சத்த(த்)து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
 ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
 கயிலை மலையானே போற்றி போற்றி 1

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
 பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
 மருவி யென்சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
 போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
 கயிலை மலையானே போற்றி போற்றி 2

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
 மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
 உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
 தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
 கயிலை மலையானே போற்றி போற்றி 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
 வந்து என்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
 ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேத்தை வார்த்த தெளிவே போற்றி
 தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
 கயிலை மலையானே போற்றி போற்றி 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என்சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத்தணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல்நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கு ஒன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல்கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி11

## பதிகம் 26

## திருடு போன பொருள்கள் கிடைக்க உதவும் பதிகம்

சுந்தரர் தலம்: திருமுருகன் பூண்டி

கொடகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்டு
ஆறலைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னோடும்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 1

வில்லைக் காட்டிவெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியுங்
கூறை கொள்ளுமிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தாது மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
எல்லைக் காப்பதொன் றில்லையாகில் நீர்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 2

பசுக்களே கொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்றறியார்
உசிர்க் கொலை பல நேர்ந்து நாள்தொறும்
கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போற்பல வேடர் வாழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
இசுக்கழியப் பயிக்கங் கொண்டு நீர்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 3

பீறல்கூறை உடுத்தோள் பத்திரங்
கட்டி வெட்டினராய்ச்
சூறைப் பங்கிய ராகி நாள்தொறுங்
கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடி வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
ஏறு கால் இற்ற தில்லையாய்விடில்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 4

தயங்கு தோலை உடுத்து சங்கர
சாம வேதமோதி
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும்
மார்க்க மொன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு
முருகன் பூண்டி மாநகர் வாய்
இயங்கவும் மிடுக்குடையராய் விடில்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 5

விட்டிப்பன கொக்கரை கொடு
கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங் கமழ் முருகன்
பூண்டி மாந கர்வாய்
இட்டபிச்சை கொண்டுண்ப தாகில்நீர்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமோதி வெண்ணீறு பூசி வெண்
கோவணந் தற்றயலே
ஓதமேவிய ஒற்றியூரையும்
உத்திர நீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளு முருகன்
பூண்டி மாநகர் வாய்
ஏதுகாரணம் ஏதுகாவல் கொண்டு
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 7

படஅரு நுண்ணேரிடைப் பனைத்
தோள் வரிநெடுங்கண்
மடவரல் உமை நங்கை தன்னையோர்
பாகம் வைத்துகந்தீர்
முடவரல்லீர் இடரிலீர் முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடவமேறியும் போவதாகில் நீர்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 8

சாந்த மாகவெண் ணீறுபூசிவெண்
பல்தலைகலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையோர்
பாகம் வைத்து கந்தீர்
மோந்தை யோடு முழக்கறா முருகன்
பூண்டிமா நகர்வாய்
ஏந்துபூண்முலை மங்கை தன்னோடும்
எத்துங்கிங் கிருந்தீர் எம்பிரானீரே 9

முந்திவானவர் தாந்தொழும் முருகன்
பூண்டிமா நகர்வாய்
பந்தணைவிரற் பாவை தன்யோர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூரன்
உரைத்தன பத்துங்கொண்(டு)
எந்தம் அடிகளை ஏத்துவார் இட
ரொன்றுந்தாமி லரே 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 27

## பொருள் பெறுவதற்கு ஓதவேண்டிய திருப்பதிகம்

சுந்தரர் தேவாரம்  தலம்: திருஓண காந்தன் தளி

நெய்யும் பாலுந் தயிருங்கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையில லொன்றுங் காண வில்லைக்
கழலடி தொழு துய்யினல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட வாடி
ஆழ் குழிப்பட்டழுந்து வேனுக்கு
உய்யுமர் றொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியுளீரே 1

திங்கள் தங்கு சடைக்கண் மேலோர்
திரைகள் வந்து புரளவீசும்
கங்கை யாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கோற்றட்டி யாளார்
உங்களுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளியுளீரே 2

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும்
பேணி உம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர் பற்றிலர் என்றிரங்கி
மதியுடையவர் செய்கை செய்வீர்
அற்ற போழ்தும் அலந்த போழ்தும்
ஆபத்காலத் தடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமோ
ஓண காந்தன் தளியுளீரே 3

வல்லதெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய்திறந் தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்ப தென்நீர்
பல்லை உக்க படு தலையிற்
பகல் எலாம் போய்ப் பலிதிரிந்திங்
கொல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர்
ஓண காந்தன் தளியுளீரே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
        கொண்ட பாணி குறை பாடமே
ஆடிப்பாடி அழுது நெக்கங்
        கன்புடையவர்க் கின்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்தெய்த் தாலும்
        சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றுந் தாரீர்
        ஓண காந்தன் தளியுளீரே 5

வாரிருங் குழல் வாள் நெடுங்கண்
        மலைமகள் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந்த தடமார்பு நீங்காத்
        தையலாள் உலகுய்ய வைத்த
காரிரும் பொழிற் கச்சி மூதூர்க்
        காம கோட்டம் உண்டாக நீர் போய்
ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே
        ஓண காந்தன் தளியுளீரே 6

பொய்ம்மை யாலே போது போக்கிப்
        புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்
        மேலை நாள் ஒன்றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
        ஏதுந் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மைலன்றே எம்பெருமான்
        ஓண காந்தன் தளியுளீரே 7

வலையம் வைத்த கூற்ற மீவான்
        வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலை அமைத்த சிந்தை யாலே
        திருவடி தொழுதுய்யின் அல்லால்
கலை அமைந்த காமச் செற்றக்
        குரோத லோப மதவரூடை
உலை அமைத்திங் கொன்ற மாட்டேன்
        ஓண காந்தன் தளியுளீரே 8

வாரமாகித் திருவடிக்குப்
        பணி செய் தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வ தாரூர்
        ஒற்றி யூரேல் உம்மதென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரமாகக் கங்கை யாளைச்ங
சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஓண காந்தன் தளியுளீரே 9

ஓவணம் மேல் எருதொன்றேறும்
ஓண் காந்தன் தளியுள்ளார் தாம்
ஆவணஞ்செய் தாளுங் கொண்டு
அரை துகிலொடு பட்டுவீக்கிக்
கோவணம் மேற் கொண்ட வேடம்
கோவையாக ஆரூரன் சொன்ன
பாவணத் தமிழ் பத்தும் வல்லார்க்குப்
பறையுந் தாஞ்செய்த பாவந் தானே 10

## பதிகம் 28

## கண்பார்வை பெற உதவும் பதிகம்

சுந்தரர் தேவாரம் தலம்: திருக்கச்சி ஏகாம்பரம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 1

உற்றார்க்குதவும் பெருமானை
ஊர்வதொன்றுடை யான் உம்பர் கோனைப்
பற்றினார்க் கென்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதிரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே 2

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகொல் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழி படப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 3

குண்ட லம்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளராமதி சேர் சடையானைக்
கெண்டைநயந்தடங் கண்உமை நங்கை
கெழுமி யேத்தி வழி படப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை
அருமறையவ ஐ அங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 5

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங் கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழி படப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே 6

விண்ணவர் தொழுதேத்த நின்றானை
வேதம் தான் விரித்து ஓதவல்லானை
நண்ணினார்க் கென்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றடைக் கம்பன் எம்மானை
காணக் கண் அடியேன் பெற்றவாறே 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித் தென்றும் நினைந்தெழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னைப்
பந்தித்த வினைப் பற்றறுப் பானைப்
பாலொடானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை
ஆதிரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 8

வரங்கள் பெற்றூல் வாள ரக்கர் தம்
வாலிய புரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் தன்பெரு வேள்வி
நிரந்தரஞ் செய்த நிர்க்கண்டகனைப்
பரந்து தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழி படப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 9

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 10

பெற்றம் ஏறுகந்த தேறவல் லானைப்
பெரிய எம்பெருமான என்றெப்போதும்
கற்றவர் பரவப்படு வானைக்
காணக் கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திருநாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லர்
நன்னெறி உலகெய்துவர் தாமே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 29

## விரோதிகளை அடங்கச் செய்து வெற்றியை நல்கும் திருப்பதிகம்

மாணிக்கவாசகர் தேவாரம்     தலம்: தில்லை

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தனமுப்புரம் உந்தீ பற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீ பற 1

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீ பற
ஒன்றும் பெருமிகை உந்தீ பற 2

தச்சு விடுத்தலும் தாம் அடியிட்டலும்
அச்சு முறிந்ததென்று உந்தீ பற
அழித்தன முப்புரம் உந்தீ பற 3

உய்யவல்லார் ஒருமூவரைக் காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற
இளமுலை பங்கன் என்றுந்தீ பற 4

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீ பற
உருத்திர நாதனுக் குந்தீ பற 5

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டு அன்று
சாவாது இருந்தான் என்று (உ)ந்தீ பற
சதுர்முகன் தாதை என்று (உ)ந்தீ பற 6

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று (உ)ந்தீ பற
கலங்கிற்று வேள்வி என்று (உ)ந்தீ பற 7

பார்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேடி (உ)ந்தீ பற
பணைமுலை பாகனுக்கு (உ)ந்தீ பற 8

புரந்தரனார் ஒரு பூங்குயிலாகி
மரந்தனில் ஏறினார் (உ)ந்தீ பற
வானவர் கோன் என்றே உந்தீ பற 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீ பற
தொடர்ந்த பிறப்பற உந்தீ பற 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீ பற
கொங்கை குலுங்கநின்று (உ)ந்தீ பற 11

உண்ணப் புகுந்த பகன்ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு (உ)ந்தீ பற
கருக்கெட நாமெலாம் உந்தீ பற 12

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் தேடுமாறு (உ)ந்தீ பற
தொல்லை வினைகெட உந்தீ பற 13

நான்மறை யோனும் மகத்துஇய மான்படப்
போம்வழி தேடுமாறு (உ)ந்தீ பற
புரந்தரன் வேள்வியில் (உ)ந்தீ பற 14

சூரிய னார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு (உ)ந்தீ பற
மயங்கிற்று வேள்வி என்று (உ)ந்தீ பற 15

தக்கனார் அன்றே தலை இழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின்று (உ)ந்தீ பற
மடிந்தது வேள்வி என்று (உ)ந்தீ பற 16

பாலக னார்க்குஅன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீ பற
குமரன் தன் தாதைக்கே உந்தீ பற 17

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை அரிந்தது என்று (உ)ந்தீ பற
உகிரால் அரிந்ததுஎன்று (உ)ந்தீ பற 18

தேரை நிறுத்தி மலை எடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவாறு (உ)ந்தீ பற
இருபதும் இற்றதென்று (உ)ந்தீ பற 19

ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீ பற
அகற் கப்பாலுங் காவல் என்றுந்தீ பற 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 30

## சொறி, படை போன்ற உடற்பிணிகளைப் போக்கும் திருப்பதிகம்

சுந்தரர் தலம்: திருத்துருத்தி திருவேள்விக்குடி

மின்னுமா மேகங்கள் பொழிந்திருந் தருவி
வெடிபடக்கரை யொடுந்திரை கொணர்ந்தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை யுறைவார்
அடியினை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம்பு அடும்பிணி இடர் கெடுத்தானை 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன ஏனலோ டைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலேன் எம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்ற றுத் தானை 2

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டு கூட்டெய் திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
சொல்லுமா றறிகிலேன் எம்பெரு மானைத்
தொடர்ந்தடுங்கடும்பிணித்தொடர் வறுத்தானை 3

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக்
கடலுற விளைப்பதே கருதித்தன்கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
அறியுமா றறிகிலேன் எம்பெரு மானை
யருவினை யுள்ளன ஆசறுத் தானை 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிந்திழி மும்மதத்(?) களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புனல் ஈண்டி
எண்டிசை யோர்களும் ஆடவந் திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
உற்றநோய் இற்றையே உறவொழித்தானை 5

புகழுமா சந்தனத் துண்டோ டகிலும்
பொன்மணி யன்றியும் நன்மலர் உந்தி
அகழுமா அருங்கரை வளம்படப்பெருகி
ஆடுவார் பாவந்தீர்த் தஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச்செடியனேன் நாயேன்
இகழுமா றறிகிலேன் எம்பெரு மானை
இழிந்த நோய் இம்மையே ஒழிக்கவல்லானை 6

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம்பீலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
உரையுமா றறிகிலேன் எம்பெரு மானை
உலகறி பழவினை அறவொழித்தானை 7

ஊருமா தேசமே மனமுகந் துள்ளிப்
புள்ளினம் பல படிந் தொண்கரை உகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
கவரிமா மயிர்சுமந்து ஒண்பளிக் கிடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச்செடியனேன் நாயேன்
ஆருமா றறிகிலேன் எம்பெரு மானை
அம்மை நோய் அம்மையே ஆசறுத்தானை 8

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினோ டினமணியிடறி
யிருகரைப் பெருமரம்பீழ்ந்துகொண்டெற்றிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமா றறிகிலேன் எம்பெரு மானை
மேலைநோய் இம்மையே விடுவித்தானை 9

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி அன்றி மற்றறியான்
அடியவர்க் கடியவன தொழுவன் ஆருரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளர் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுது தம்நாவின் மேற்கொள்வார்
தவநெறி சென்று அமர்உலகம் ஆள்பவரே 10

## பதிகம் 31

## மனக்கவலை நீக்க ஆனந்தம் அளிக்கும் 8-ம் திருமுறை திருப்பதிகம்

மாணிக்கவாசகர் திருவாசகம் தலம்: திருபெருந்துறை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்செ வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான்தன்கருணைக்கண்காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்ட எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தென் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தார் போலச்
சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்றி
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோறும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள்காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்றி சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணக்கரியநுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனே ஓஎன்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் 32

### ஊமை, திக்குவாய் முதலியன நீக்கி நன்றாகப் பேச உதவும் பதிகம்

மாணிக்கவாசகர் திருவாசகம்   தலம்: தில்லை

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமாறு என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான் தனியேன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ 3

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலை மற்று அருளினன்காண் சாழலோ 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ 6

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணி எல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றுஎழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ 8

தென்பால் உகந்து ஆடும் தில்லைச்சிற்றலம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய்இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ 9

தான் அந்த மில்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடீ
அனந்த வெள்ளத்து அழுத்தவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கு ஓர் வான் பொருள்காண் சாழலோ 10

நங்காய் இது என்னதவம் நரம்போடு எலும்பு அணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந் தரத்துஇருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ 11

கானார் புலித்தோல் உடைதலை ஊண் காடுபதி
ஆனால் அவனுக்குஇங்கு ஆட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ 12

மலையயரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத்தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடும்காண் சாழலோ 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்க நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டு ஆம் காண் சாழலோ 14

கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில்
இடமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக நால்வர்க்கு நான் மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்க அறம் உரைத்தான் காணேடீ
அன்று ஆலின்கீழ் இருந்தங்க அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான் காண்புரமூன்றும் கூட்டோடே சாழலோ 16

அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்
நம்பனையும்தேவன் என்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம் அறியா
எம்பெருமான ஈசா என்று ஏத்தினகாண் சாழலோ 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணர்க்கு அன்று அருளியவாறு என்னேடீ
நலமுடைய நாரணன் தன் நயனம் இடந்து அரனடிக்கீழ்
அலராக இடர் ஆழி அருளினன்காண் சாழலோ 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கு அறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுஉடுத்தங்கு ஏது அமுது செய்திடினும்
தம்பெருமை தான் அறியாத் தன்மையன்காண் சாழலோ 19

அருந்தவர்க்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கனையும்
இருந்தவிலக்க அருளுமது எனக்கறிஇயம்பேடீ
அருந்தவருக்கு அறமுதல் நான்கு அன்று அருளிச் செய்திலனேல்
திருந்தவருக்க உலகியற்கை தெரியாகாண் சாழலோ 20

## ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே 1

தற்புரம் பொருளே! சசிகண்ட சிகண்டா
சாமகண்டா! அண்டவாணா!
நற்பெரும் பொருளாய்! உரைகலந்து உன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன் என உள்ளத்து அளவிலா உன்னைத்
தந்த பொன்னம்பலத் தரசே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பமாய், உலகாய், அல்லா ஆனாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே 2

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா!
அம்பொன் செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடி எம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே 3

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே 4

## ஒன்பதாம் திருமுறை திருப்பல்லாண்டு

மன்னக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழா ம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்ல தோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரந்தரன் மால் அயன் பூசலிட்டு ஓலமிட்டு
இன்னம் புகலரிதாய்
இரந்து இரந்து அழைப்ப என்னுயிர் ஆண்ட
கோவினுக்கு என் செய வல்ல என்றும்
கரந்தும் கரவாத கற்பகனாகி
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே 3

தாதையைத் தாள் அற வீசிய சண்டிக்கு
இவ்வண்டத் தொடு முடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அரளிச்
சோதி மணி முடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்குப் பரிசு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே 4

குழல் ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழ வொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ் செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே 5

## பத்தாம் திருமுறை திருமூலர் திருமந்திரம்

ஆற்றரு இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த புகுந்ததுபோல
நினையாதவர்க்கு இல்லை நின் இன்பந்தானே 1

ஆற்றரு நோய்மிகு அவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிசைத்தும் புகழ்ந்தும் புனிதம் அடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக்கே செல்வம்
ஆற்றியது மயலுற்ற சிந்தையை
மாற்றி நின்றார் வழி மன்னி நின்றானே 3

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே 4

நாடு நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வனே 5

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே 6

## பதினோராம் திருமுறை

இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறிப் பணியாரேனும் - சுடர் உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்னெஞ் சவர்க்கு 1

காலனையும் வென்றோம் கடுநகரம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேர் அறுத்தோம் கோல
அரணார் அவிந்தழிய வெந்தீ அம்பு எய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து 2

குந்தி நடந்து குனிந்தொர கை கோலூன்றி
நொந்து இருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயா முன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை 3

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
கிளை குளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளை குளத்துள் ஈசனையே வாழ்த்து 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன்
கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையாவன விதித்தனவே. 5

## சேக்கிழார் சுவாமிகள் அருளிய
## பெரிய புராணம் 12-ம் திருமுறை

உலகெலாம் உணர்ந் ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் 1

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி 2

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்புர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி 3

மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமு செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையா மெனில் உலகர் முன் வருகென உரைப்பார் 4

வையநீடுக: மாமழை மன்னுக:
மெய்விரும்பிய அன்பர் விளங்குக:
சைவ நன்னெறிதாம் தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவருள் நல்கும் பெரிய திருப்பதிகம்

சுந்தரர் தேவாரம்   தலம்: திருவெண்ணெய்நல்லூர்

பித்தா! பிறைசூடீப்! பெருமானே! அருளாளா!
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்(து) உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனலாமே 1

நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்(து) உன்னைப்
பேயாய்த் திரிந்(து) எய்த்தேன் பெறல் ஆகா அருள்பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆயா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே 2

மன்னே! மறவாதே நினைக்கின்றேன் மனத்(து) உன்னைப்
பொன்னே! மணிதானே வயிரம்மே பொரு(து) உந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அன்னே உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே 3

முடியேன் இனிப்பிறவேன் பெறின் மூவேன் பெற்றம் ஊர்தீ!
கொடியேன் பல பொய்யே உரைப்பேனைக் குறிக்கோள் நீ!
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூர் அருட்டுறையுள்
அடிகேள் உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனலாமே 4

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம் அது பணியாய்
ஆதன் பொருள் ஆனேன் அறிவில்லேன் அருளாளா!
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆதீ உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே 5

தண்ணார் மதிசூடி! தழல் போலும் திருமேனி!
எண்ணார்புரம் மூன்றும் எரி உண்ணா நகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணேய்நல்லூர் அருட்டுறையுள்
அண்ணா உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனலாமே 6

ஊனாய் உயிர் ஆனாய் உடல் ஆனாய் உல(கு) ஆனாய்
வானாய் நிலன் ஆனாய் கடல் ஆனாய் மலை ஆனாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆனாய் உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனலாமே 7

ஏற்றார்புரம் மூன்றுமெரி யுண்ணாச்சிலை தொட்டாய்
தேற்றதன சொல்லித்திரி வேனோ செக்கர்வானீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆற்றாய் உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனலாமே 8

மழு வாள் வலன் ஏந்தீ! மறை ஓதி! மங்கை பங்கா!
தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அழகா உனக்(கு) ஆளாய் இனி அல்லேன் எனலாமே 9

காரூர் புனல் எய்திக் கரை கல்லித் திரைக் கையால்
பாரூர் புகழ் எய்தித் திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர் பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆரூரன் எம்பெருமாற்(கு) ஆள் அல்லேன் எனலாமே 10

## குருவருள் தொல்வினைகளறுக்கும் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர் தேவாரம் தலம்: சீர்காழி

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட்பணிந்(து) ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 1

முற்றல் ஆமை இறநாகமொ டேன முளைக்கொம்பவை பூண்டு
வற்றந் ஓடு கலனாப்பலி தேர்ந்தென(து) உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்தப்
பெற்றும் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 2

நீர் பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலா வெண்மதி சூடி
ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
உர் பரந்த உலகின் முதலாகிய ஓர் ஊர் இது என்னப்
பேர் பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 3

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி விளங்கு தலை ஒட்டில்
உண் மகிழ்ந்த பலி தேரிய வந்(து) எனதுள்ளம் கவர் கள்வன்
மண் மகிழ்ந்த அரவம் மலர்க் கொன்றை மலிந்த வரை மார்பிற்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 4

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடை ஊரும் இவன்என்ன
அருமையாக உரை செய்ய அமர்ந்(து) எனதுள்ளம் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தோர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மாள் இவன் அன்றே 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறை கலந்த ஒலி பாடலோ(டு) ஆடலர் ஆகி மழு ஏந்தி
இறை கலந்த இன வெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
கறை கலந்த கடியார் பொழில் நீடுயர் சோலைக்கதிர் சிந்தப்
பிறை கலந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 6

சடை முயங்கு புனலன் அனலன் எரி வீசிச் சதிர்வெய்த
உடை முயங்கும் அரவோ(டு) உழிதந்(து) எனதுள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர காணல் அம்பொன்னஞ் (சிறகு) அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 7

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி (செற்று) என(து) உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகிற் பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 8

தாணுதல் செய்திறை காணிய மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்தொழியந் நிமிர்ந்தான் எனதுள்ளம் கவர் கள்வன்
வாணுதல் செய் மகளிர் முதலாகிய வையத்தவர் ஏத்தப்
பேணுதல் செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 9

புத்தரோடு பொறியில் சமணும் புறம்கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலி தேர்ந்தென(து) உள்ளம் கவர் கள்வன்
மத்த யானை மறுகவ்வுரி போர்த்ததோர் மாயம் இது என்னப்
பித்தர் போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 10

அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே 11

## திருவாலவாயுடையார்

### திருமுகப்பாசுரம் [11 -ஆம் திருமுறை]

மதிமலி புரிசை மாடக் கடல்
பதிமிசை நிலவு பானிய வரிச்சிற(கு)
அன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையி னுரிமையின் உதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண புத்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

## திருநாவுக்கரசு நாயனார்

### திருவாரூர் [6–ஆம் திருமுறை]

கற்றவர் நண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி

அற்றவர்கட்கு ஆரமுத மானாய் போற்றி
அல்லலறுந் தடியேனை யாண்டாய் போற்றி
மற்றெருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்று மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 1

வங்கமலி கடல்னஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யிருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் மிறைவா போற்றி
ஆலமர நீழறைஞ் சொன்னாய் போற்றி
செங்கனத் தணிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாம் போற்றி போற்றி
நிலையாக வென்னெஞ்சி னின்றாய் போற்றி
நெற்றிமேலொற்றைக் கண்ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
யேழ்கடலும் மேழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி 3

பொன்னியலும் மேயினனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி
யுலகுக் கொருவனே போற்றி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிமிசை வெண்பிறயாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 4

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூற போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேத மாறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 7

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர் கோன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 9

பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவா டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரைக்க னைந்நான்கு தோளுந் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

## திருநாவுக்கரசு நாயனார்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே 1

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே 2

ஆளா காராளானா ரைஅடைந் துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யேதொழும் பர்செவி
வாளா மாய்த்துமண் ணாகிக் கழிவரே 3

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
குடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே 4

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கே இரை தேடி அமைந்து
காக்கைக் கே இரை ஆகிக் கழிவரே 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே 6

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்ந்த வாவினை யேன்நெடுங் காலமே 7

எழுது பாவைநல் லார்திறம் விட்டு நான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்(டு)
உழுத சால்வழி யேழு வான்பொருட்(டு)
இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே 8

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுகளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே 9

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே 10

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய நம்பி திருப்பதிகம்
## [7-ஆம் திருமுறை]

மெய்யைமுற் றப்பொடிப் பூசியோர் நம்பி
வேதம்நான் கும்விரித் தோதியோர் நம்பி
கையில்ஓர் வெண்மழு வேந்தியோர் நம்பி
கண்ணும் மூன்றுடை யாயொரு நம்பி
செய்யநம் பிசிறு செஞ்சடை நம்பி
திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்தநம் பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பிகண்டாயே 1

திங்கள்நம் பிமுடி மேல்அடி யார்பாற்
சிறந்தநம் பிபிறந்த உயிர்க் கெல்லாம்
அங்கண்நம் பியருள் மால்விசும் பாளும்
அமரர் நம் பிகும ரன்முதல் தேவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் நம் பிதவத் துக்கொரு நம்பி
தாதை என்றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள்நம் பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண்டாயே 2

வருந்தஅன் றுமத யானை யுரித்த
வழக்குநம் பிமுழக் குங்குடல் நஞ்சம்
அருந்துநம் பிஅம ரர்க்கமு தீந்த
அருளின்நம் பிபொரு ளால்வரு நட்டம்
புரிந்தநம் பிபுரி நூலுடை நம்பி
பொழுதும் விண்ணும்முழ தும்பல வாகி
இருந்தநம் பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பிகண்டாயே 3

ஊறுநம் பிஅமு தாஉயிர்க் கெல்லாம்
உரியநம் பிதெரி யம்மறை அங்கம்
கூறுநம் பிமுனி வர்க்கருங் கூற்றைக்
குமைத்தநம் பிகுமை யாப்புலன் ஐந்தும்
சீறுநம் பிதிரு வெள்ளடை நம்பி
செங்கண்வெள் ளைச்செழுங் கோட்டெரு தென்றும்
ஏறுநம் பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே 4

குற்றநம் பிகுறு கா்எயில் மூன்றைக்
குலைத்தநம் பிசிலை யாவரை கையில்
பற்றுநம் பிபர மானந்த வெள்ளம்
பணிக்குநம் பிஎன பாடுத லல்லால்
மற்றுநம் பிஉனக் கென்செய வல்லேன்
மதியி லேன்படு வெந்துயர் எல்லாம்
எற்றுநம் பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பிகண்டாயே 5

அரித்தநம் பிஅடி கைதொழு வார்நோய்
ஆண்டநம் பிமுன்னை ஈண்டுல கங்கள்
தெரித்தநம் பிஒரு சேவுடை நம்பி
சில்பலிக் கென்றுகந் தோறுமெய் வேடம்
தரித்தநம் பிசம யங்களின் நம்பி
தக்கன்றன் வேள்விபுக் கன்றிமை யோரை
இரித்த நம் பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பிகண்டாயே 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னைநம் பும்புயத் தான்நெடு மாலும்
பிரமனும் என்றிவர் நாடியுங் காணா
உன்னைநம் பிஒரு வர்க்கெய்த லாமே
உலகுநம் பிஉரை செய்யு தல்லால்
முன்னைநம் பிபின்னும் வார்சடை நம்பி
முழுதிவை இத்தனை யும்தொகுத் தாண்ட
தென்னைநம் பிஎம் பிரானாய நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பிகண்டாயே 7

சொல்லைநம் பிபொரு ளாய்நின்ற நம்பி
தோற்றம் ஈறுமுத லாகிய நம்பி
வல்லைநம் பிஅடி யார்க்கருள் செய்ய
வருந்திநம் பிஉனக் காட்செய கில்லார்
அல்லல்நம் பிபடு கின்றதெந் நாடி
அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற
இல்லநம் பியிடு பிச்சைகொள் நம்பி
எழுபிறப் பும் எங்கள் நம்பிகண்டாயே 8

காண்டுநம் பிகழல் சேவடி என்றும்
கலந்துனைக் காதலித் தாட்செய்கிற பாரை
ஆண்டும் நம்பியவர் முன்கதி சேர
அருளும்நம் பியவர் முன்கதி சேர
தீண்டுநம்பி சென்னி யிற்கன்னி தங்கத்
திருத்துநம் பிபொய்ச் சமண்பொரு ளாகி
ஈண்டுநம் பிஇமை யோர்தொழு நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பி கண் டாயே 9

கரக்கும்நம் பிகசி யாதவர் தம்மைக்
கசிந்தவர்க் கிம்மையோ டம்மையிலின்பம்
பெருக்குநம் பிபெரு கக்கருத்தா .... 10

(முற்றிற்று)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

அம்பிகையைப் பற்றி ஓர் அற்புதமான பாடல். இதை எழுதியவர், அம்பிகையை நேரில் தரிசித்த அபிராமி பட்டர். இவர் பெயரைச் சொன்னதும், அபிராமி அந்தாதிதான் நினைவுக்கு வரும். அபிராமி அந்தாதி உயர்ந்ததுதான். சந்தேகம் இல்லை. ஆனால், அதில் உள்ள பல பாடல்களுக்கு விளக்க உரை இருந்தால்தான் அர்த்தம் புரியும். ஆனால், படிக்கும்போதே எளிமையாகப் பொருள் புரியும் வண்ணம், அதேநேரம் நேருக்கு நேராக அம்பிகையிடம் முறையிடும் விதமாக அமைந்துள்ள பல பாடல்களையும் அபிராமி பட்டர் எழுதியுள்ளார்.

அபிராமியம்மைப் பதிகங்கள் என்ற பெயரில் அமைந்துள்ள அப் பாடல்கள், மக்கள் மத்தியில் ஏனோ, பரவவே இல்லை. அந்தப் பாடல்களில் இருந்து ஒரு பாடலைப் பார்க்கலாம்.

*மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த*
*வெகுளி யானதுந் துரத்த*
*மிடியுந் துரத்தநரை திரையுந் துரத்தமிகு*
*வேதனைகளுந் துரத்த*
*பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்த*
*பசியென் பதுந்துரத்த*
*பாவந் துரத்த பதிமோகந் துரத்த*
*பலகா ரியமுந் துரத்த*
*நகையுந் துரத்த ஊழ் வினையுந் துரத்த*
*நாளும் துரத்த வெகுவாய்*
*நாவறண் டோடிக்கால் தளர்ந்திடும் என்னை*
*நமனும் துரத்து வானோ?*
*அகில உல கங்கட்டும் ஆதார தெய்வமே*
*ஆதி கடவூரின் வாழ்வே*
*அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி*
*அருள்வாமி! அபிராமியே!*

தன்னந்தனி ஆளாக ஒருவன் ஓடிக்கொண்டிருக்கிறான். ஏராளமானோர் அவனைத் துரத்திக்கொண்டு ஓடுகிறார்கள். யாரந்த மனிதன்? துரத்துபவர்கள் யார்? ஏன் துரத்துகிறார்கள்? இதற்கு, மிக அருமையான விளக்கம் தருகிறார் அபிராமிபட்டர். ஓடும் மனிதன் நாம் தான். நம்மைத் துரத்துவோர் குறித்து பெரிய பட்டியலே போடுகிறார்! மனிதனைத் துரத்துவதில் முதல் இடம் பிடித்திருப்பது அகம்பாவம். எனக்கு அகம்பாவம் துளியும் கிடையாது. நம்பாவிட்டால், என்னுடன் இருப்பவர்களைக் கேட்டுப்பார்! துளிக்கூட அகம்பாவம் இல்லை எனக்கு - என்பதை அவர்களே சொல்வார்கள்! என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கத்தைக் குறிக்கும் முகமாகச் சொன்னாலும் கூட, அதிலும் அகம்பாவம் தலை நீட்டிவிடுகிறது. மனிதனை அகம்பாவம் துரத்துகிறது.

மிகையும் துரத்த- மிகை என்பதற்கு அகம்பாவம் என்பது பொருள். அத்துடன், மிகை என்பதற்கு தீய செயல்கள், தவறுகள், தண்டனை என்னும் அர்த்தங்களும் உண்டு. அதன்படி பார்த்தால்... தீய செயல்கள் துரத்த, தவறுகள் துரத்த, தண்டனை துரத்த - என விளக்கம் கிடைக்கும். தீய செயல்களும், அதனால் விளைந்த தவறுகளும், அவற்றுக்கு உண்டான தண்டனைகளும் நம்மைத் துரத்துகின்றன. இதிலிருந்து தப்பிப் பிழைத்தால்... வெம்பிணியும் துரத்த என்கிறார். அதாவது, நோய்கள் துரத்துகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு. ஆனால், இந்த நோய்களுக்கு மட்டும், காலம் என்பதே கிடையாது. கருவில் இருக்கும் குழந்தை முதல், கடைசி காலத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் முதியோர்கள் வரை, எல்லோரையும் ஒரு கை பார்த்துவிடும் நோய். ஆண் - பெண், படித்தவன் - படிக்காதவன் என்ற பேதமெல்லாம் நோய்க்குக் கிடையாது. எல்லோரையும் பாதிக்கும்.

தலைவலி போன்ற சாதாரண பிணிகள் மட்டுமல்ல, ஒருமுறை வந்தாலே ஆளையே புரட்டிப் போட்டுப் பாதிக்கும் தற்கால சிக்குன் குன்யா, மருத்துவமே கிடையாது என்று சொல்லக்கூடிய எய்ட்ஸ் வரையிலும் அனைத்து நோய்களும் மனித குலத்தைத் துரத்துகின்றன. இந்தக் கொடுமையைக் குறிப்பதற்காகவே, வெம்பிணியும் துரத்த என்றார் அபிராமிபட்டர். உடலுடன் பிணிக்கப்பட்டு நம்மைக் கொடுமைப்படுத்துவ தாலும், வெம்பிணியும் துரத்த எனக் கூறி இருக்கிறார். சரி! இப்படி வியாதி வந்தால் விளைவு? அடுத்தது கோபம்தான். சாதாரணமாகவே கோபம் வரும் மனிதகுலத்துக்கு. வியாதி வந்துவிட்டால்... கேட்கவே வேண்டாம். யாரைப் பார்த்தாலும் வள்வள் என்று எரிந்து விழுவோம்! வியாதியும் கோபமும் நம்மைத் துரத்துவது மட்டுமல்ல! நம்முடன் இருப்பவர்களையும், நம்மை விட்டுத் துரத்திவிடும். அதையே, வெகுளியும் துரத்த எனக் குறிப்பிடுகிறார் அபிராமிபட்டர். இதன் தொடர்ச்சி மிடியும் துரத்த அதாவது வறுமை துரத்துகிறது.

வியாதி வந்து,, பணமெல்லாம் மருத்துவத்துக்கே போய், கோபம் வந்துவிட்டால், பிறகு... வறுமைதானே? அந்த வறுமையும் நம்மைத் துரத்துகிறது. அது மட்டுமல்ல! நாம் வறுமையில் இருக்கிறோம் என்றால், நம்மை நெருங்கவிடாமல் நம் உறவினர்கள் துரத்துவார்கள். எங்கே உதவி கேட்டு வந்துவிடுவானோ? என்ற எண்ணமே அதற்குக் காரணம். மிடியும் (வறுமை காரணமாக உறவினர்கள் நம்மைத்) துரத்த - என அபிராமி பட்டர் அனுபவ பூர்வமாகக் கூறுகிறார். இவ்வளவு நேரம் பார்த்த துரத்தல்களில் இருந்து தப்பிப் பிழைத்தாலும், நரை திரை (மூப்பு)களில் இருந்து தப்பிப் பிழைக்க முடியாது. நரை திரையுந் துரத்த உடம்பில் தோல் சுருங்கி தலையும் வெளுத்துப் போய், நம்மைத் துரத்துகிறது. எதை நோக்கி?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைகளை நோக்கித் துரத்துகிறது. தலை நரைத்துவிட்டது. கறுப்புச் சாயம் பூசிவிடலாம். ஆனால், முதுமை வந்துவிட்டதே! ஒருவேளை, நம்மை வீட்டை விட்டு வெளியேற்றி முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடுவார்களோ? நம் குழந்தைகள், மரியாதை கொடுக்காமல், நம்மை அவமானப்படுத்தி விடுவார்களோ? என்ற வேதனை புலம்பல் வெளிப்படும்; அக்கம் பக்கமெல்லாம் போய்ப் புலம்பச் சொல்லும். அதையே அடுத்ததாக, மிகு வேதனைகளும் துரத்த என்கிறார் அபிராமி பட்டர். இதன் விளைவு - பகை. வேண்டியவர்; வேண்டாதவர் என அனைவரிடமும் பகை மூளும். பக்கத்து வீட்டுக்காரரிடம் போய்ப் புலம்பினால், யோவ்! நாம்பாட்டுல ஏதோ இந்த வயசான காலத்துல நிம்மதியா இருக்கேன். எம் பையன் ராஜா மாதிரி, உள்ளங்கையில வெச்சுத் தாங்கறான். நீ உன் வீட்டுக் கதையை வந்து இங்க சொல்லி எம்புள்ள மனசக் கலைச்சி, என்னை முதியோர் இல்லத்துல சேர்க்க ஏற்பாடு பண்ணிடாதே! இனிமேல் இந்தப் பக்கமே வராதே! என்று அவர் நம்மை விரட்டுவார். பகைதான். அப்போதும் சும்மா இருக்கமாட்டோம். அந்தத் தகவலை, நம் வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லிப் புலம்புவோம். அவர்கள் சும்மா இருப்பார்களா?

வயசான காலத்துல வாய மூடிக்கிட்டு சிவனேனு இருக்காம, தெருத் தெருவாப் போய்த் தண்டோரா போட்டா இப்படித்தான். பேசாம இரு ! இல்லேன்னா, அப்புறம் நாங்க என்ன செய்வோம்னு, எங்களுக்கே தெரியாது என்று வீட்டில் உள்ளவர்கள் கத்துவார்கள். அங்கும் பகைதான்! அடுத்தது... பகை என்று வந்த பின்னர், கேட்கவே வேண்டாம். வஞ்சனை வெளிப்படும். அடுத்துக் கெடுப்பது, கூடவே இருந்து குழி பறிப்பது, யாருக்கும் தெரியாமல் வேரில் வெந்நீரை ஊற்றுவது என வஞ்சனை பட்டியல் நீண்டுகொண்டே போகும். வஞ்சனை வெளிப்படாத வரையிலும், அது நம்மைத் துரத்தித் துரத்திச் செயல்படச் செய்துகொண்டே இருக்கும். வஞ்சனை வெளிப்பட்டு விட்டாலோ... அதன் விளைவுகள் நம்மைத் துரத்தும். அடுத்து, தொடக்கத்தில் இருந்து பார்த்து வந்த அத்தனையும் நம்மைத் துரத்துகிறதோ இல்லையோ... முக்கியமான ஒன்று, எல்லோரையும் துரத்தும்; எப்போதும் துரத்தும். நாம் நம்புகிறோமோ- இல்லையோ அது நம்மை விடாமல் துரத்துகிறது! அது, பசி ! பசி தீர அறுசுவை உணவுதான் வேண்டும் என்பது இல்லை. அப்போதைக்கு ஏதாவது கிடைத்தால் போதும். ஆனால், நம்மைத் துரத்தும் பசியை துரத்துவதற்காக நாம் செய்யும் செயல்களையே, பாடல்கள் பகுதிகள் சொல்கின்றன.

## கணபதி காப்பு

*தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை*
*ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற*
*சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே*
*காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஞானமும் நல்வித்தையும் பெற

**உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக்குங்கும தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.**

பொருள்: உதிக்கின்ற செங்கதிரோனும் நெற்றியின் மையத்திலிடுகின்ற சிந்தூரத் திலகமும், ஞானம் கைவரப் பெற்றவர்களே மதிக்கின்ற மாணிக்கமும், மாதுளை மலரும், தாமரை மலரில் தோன்றிய இலக்குமி துதி செய்கின்ற மின்னற் கொடியும், மென்மணம் வீசும் குங்குமக் குழம்பும் ஆகிய அனைத்தையும் போன்றதென்று நூல்கள் யாவும் பாராட்டிக் கூறும் திருமேனியைக் கொண்ட அபிராமி அன்னையே எனக்கு மேலான துணையாவாள்.

## 2. பிரிந்தவர் ஒன்று சேர

**துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்**
**பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்**
**கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்**
**அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.**

பொருள்: எங்களுக்கு உயிர்த்துணையும் நாங்கள் தொழுகின்ற தெய்வமும் எம்மையெல்லாம் ஈன்றெடுத்த அன்னையும், வேதமென்னும் விருட்சத்தின் கிளையும், அதன் முடிவிலுள்ள கொழுந்தும், கீழே பரவிப் பதிந்துள்ள அதன் வேரும் குளிர்ச்சி பொருந்தியவையான மலரம்புகள், கரும்பு வில், மென்மைமிகு பாசாங்குசம் ஆகியவற்றைத் திருக்கரத்தில் ஏந்தி நிற்கும் திரிபுரசுந்தரியே என்னும் உண்மையை நாங்கள் உணர்ந்து கொண்டோம்.

## 3. குடும்பக் கவலையிலிருந்து விடுபட

**அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு**
**செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்**
**பிறந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்**
**மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.**

பொருள்: அருட்செல்வம் மிக்க திருவே! வேறெவரும் அறிய முடியாத ரகசியத்தை நான் அறிந்து, அதன் காரணமாக உன் திருவடிகளை அடைந்தேன். உன் அடியவர்களின் பெருமையை உணரத்தவறிய நெஞ்சத்தின் காரணமாக நரகலோகத்தின் தொடர்பு கொண்ட மனிதரைக் கண்டு அஞ்சி விலகிக் கொண்டேன். இனி நீயே எனக்குத் துணை.

## 4. உயர் பதவிகளை அடைய

**மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி**
**குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார்சடைமேல்**
**பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த**
**புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: மனிதர்களும் தேவர்களும் பெருமைமிக்க முனிவர்களும் வந்து தலை தாழ்த்தி நின்று வணங்கிப் போற்றும் செம்மையாகிய திருவடிகளையும் மெல்லியல்பும் கொண்ட கோமளவல்லி அன்னையே! கொன்றைக் கண்ணியை அணிந்த சடா மகுடத்தின் மேல் பனியை உண்டாக்கும் சந்திரனையும், கங்கையையும் மற்றும் பாம்பையும் கொண்ட தூயோனாம் சிவபிரானும் நீயும் என் சிந்தையை விட்டு எந்நாளும் நீங்காமல் பொருந்தியிருப்பீர்களாக!

## 5. மனக்கவலை தீர

***பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முலையால்***
***வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்***
***அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்***
***திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.***

பொருள்: அடியவர்களாகிய எங்களுக்குத் திருவருள் புரியும் திரிபுரையும் தனங்களின் பாரம் தாங்காது வருந்தும் வஞ்சிக் கொடியைப் போன்ற மெல்லிடையைக் கொண்ட மனோன்மணியும், நீள்சடை கொண்ட சிவபிரான் உண்ட நஞ்சைக் கழுத்தளவில் நிறுத்தி அமுதமாக்கிய அம்பிகையும், அழகிய தாமரை மலரின்மேல் அமர்ந்தருளும் சுந்தரியும், அந்தரியும் ஆன அபிராமி அன்னையின் பொன்னடி என் தலையின் மீது பொருந்தியுள்ளது. அதை நான் வணங்குகிறேன்.

## 6. மந்திர சித்தி பெற

***சென்னியது உன்பொன் திருவடித்தாமரை; சிந்தையுள்ளே***
***மன்னியது உன் திருமந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே!***
***முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே***
***பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே.***

பொருள்: சிந்தூரத்தின் செந்நிறத்தையொத்த திருமேனியைக் கொண்ட அபிராமி அன்னையே! பொலிவுமிக்க பொன்னான உன் திருவடிகள் என்னும் அழகிய தாமரை மலர்கள் என் சிரசின் மேல் இருக்க, என் நெஞ்சினுள்ளே உன் அழகிய திருமந்திரச் சொல் நிலை பெற்றுள்ளது. உன்னையே வணங்கி நிற்கும் உன் அடியவர்களுடன் சேர்ந்து மீண்டும் மீண்டும் நான் பாராயணம் செய்து வருவது, உன் பெருமைகளைக் கூறும் மேலான நூல்களையேயாகும்.

## 7. மலையென வரும் துன்பம் பனியென நீங்க

***ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்***
***கதியுறும் வண்ணம் கருது கண்டாய்; கமலாலயனும்,***
***மதியுறு வேணி மகிழ்நனும், மாலும் வணங்கிஎன்றும்***
***துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே.***

பொருள்: தாமரை மலரில் உறைகின்ற பிரமதேவனும், பிறைச்சந்திரனைச் சிரசில் தரித்த உன் பாதியாகிய சிவபிரானும், பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலும், வணங்கி எந்நாளும் துதித்து மகிழும் செம்மைமிக்க திருவடிகளையும் செந்தூரத் திலகமணிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுகத்தையும் கொண்ட பேரழகுமிக்க அன்னையே! தயிர் கடையும் மத்தைப் போல, பிறவிக் கடலாம் சுழலில் சிக்கி அலையாமல், ஒப்பற்ற பேரின் நிலைலை நான் அடையும்படி திருவுள்ளம் கொண்டருள்வாயாக!

### 8. பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

***சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத் தொடரைஎல்லாம்***
***வந்தரி; சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்***
***அந்தரி; நீலி; அழியாத கன்னிகை; ஆரணத்தோன்***
***சுந்தரி; கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.***

பொருள்: என் தந்தையாம் ஈசனின் துணைவியான தேவியே! பேரழகு மிக்க அன்னையே! பாசமாம் தளைகளையெல்லாம் ஓடிவந்து அழிக்கும் சிந்தூர நிறம் கொண்டவள், மகிடன் என்னும் அசுரனின் சிரத்தின் மேல் நிற்கும் அந்தரி நீல நிறங்கொண்டவள், என்றும் அழிவில்லாத இளங்கன்னி, பிரமதேவனின் கபாலத்தைத் தாங்கும் திருக்கரத்தைக் கொண்டவள் ஆகிய அபிராமி அன்னையே! தாமரை மலரைப் போன்ற உன் அழகிய திருவடிகள் என் உள்ளத்தில் என்றென்றும் பொருந்தி நிற்கின்றன.

### 9. அனைத்தும் வசமாக

***கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்***
***பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்***
***திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்***
***முருத்தனமூரலும், நீயும், அம்மே! வந்துஎன்முன் நிற்கவே.***

பொருள்: அன்னையே! என் தந்தையாம் சிவபிரானின் சிந்தையில் நீங்காது நிற்பனவும், திருவிழிகளில் காட்சி தருவனவும், அழகிய பொன் மலையாம் மேருவைப் போன்று பருத்தனவும், அழுத பிள்ளையான ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பாலூட்டியதுமான திருத்தனங்களும், அவற்றின்மேல் புரளும் முத்துமாலையும், சிவந்த திருக்கரத்திலுள்ள கரும்பு வில், மலர் அம்புகள் ஆகியனவும், மயிலிறகின் அடிப்பாகம் போன்ற அழகிய புன்னகையும் காட்டி, உன் முழுமையான திருக்கோலக் காட்சியை எனக்குக் காட்டியருள்க.

### 10. மோட்ச சாதனம் பெற

***நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை;***
***என்றும் வணங்குவது உன்மலர்த்தாள்; எழுதாமறையின்***
***ஒன்றும் அரும் பொருளே! அருளே! உமையே இமயத்து***
***அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!***

பொருள்: எழுதாமல் கேட்கப்படுவது மட்டுமான வேதத்தில் பொருந்தக் கூடிய அரும் பொருளாயும், சிவபிரானின் திருவருள் வடிவமாயும் விளங்கும் உமையன்னையே! நான் நின்றவாறும், இருந்தவாறும் படுத்தவாறும், நடந்தவாறும், தியானம் செய்வதும் உன்னைத்தான்; என்றென்றும் மறவாமல் வழிபடுவதும் உன்னுடைய திருவடித் தாமரையையேதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. இல்வாழ்க்கையில் இன்பம் பெற

***ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,***
***வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்***
***தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்***
***கானம் தம் ஆடரங்கம் எம்பிரான் முடிக்கண்ணியதே.***

பொருள்: ஆனந்த உருவமாகி, என் அறிவாகி, நிறைவான அமுதமும் போன்றவளாகி, வானம் இறுதியாயுள்ள பஞ்சபூதங்களுக்கும் முடிவாக நிற்கும் தேவியின் திருவடித் தாமரை, நான்கு வேதங்களுக்கும் எல்லையாய் நிற்பது, வெண்ணிறச் சாம்பல் படர்ந்த மயானத்தைத் தாம் ஆடல் நிகழ்த்தும் இடமாகக் கொண்ட சிவபெருமானின் திருமுடியில் அணியப்பட்ட மாலையாயும் திகழ்கிறது.

## 12. தியானத்தில் நிலைபெற

***கண்ணியது உன்புகழ் கற்பது உன்; நாமம் கசிந்து பத்தி***
***பண்ணியது உன் இருபாதாம் புயத்தில்; பகல் இரவா***
***நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த***
***புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே.***

பொருள்: என் அன்னையே! உலகங்கள் ஏழையும் பெற்ற தாயே! நான் அல்லும் பகலும் கருதுவதெல்லாம் உன் புகழ்; கற்பதெல்லாம் உன் திருநாமம். எந்நேரமும் உள்ளமுருகப் பிரார்த்திப்பது உன் இரு திருவடித் தாமரைகளைத் தான். நான் கலந்து கொண்டு உன்னை வணங்குவதெல்லாம், உன்னை மெய்யாக விரும்பித் தொழும் அடியவர்களின் கூட்டத்தில் தான். இவ்வளவுக்கும் காரணமாக நான் முற்பிறவிகளில் செய்த புண்ணியம்தான் ஏதோ அறியேன்.

## 13. வைராக்கிய நிலை எய்த

***பூத்தவளே புவனம் பதினான்கையும்; பூத்தவண்ணம்***
***காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு***
***மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!***
***மாத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!***

பொருள்: ஈரெழுலகங்களையும் திருவருளால் ஈன்றதுடன், பாதுகாப்பவளும், சம்காரம் செய்பவளுமான தாயே! நஞ்சினைக் கண்டத்தில் கொண்ட நீலகண்டப் பெருமானுக்கு முன் பிறந்தவளே! என்றுமே மூப்பறியாத திருமாலின் தங்கையே! பெருந்தவத்தை உடையவளே! நான் உன்னையே தெய்வமாக ஏற்று வழிபடுவதைத் தவிர இன்னொரு தெய்வத்தை வழிபட என்னால் இயலுமோ?

## 14. தலைமை பெற

***வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்;***
***சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே;***
***பந்திப்பவர் அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்***
***சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: எம் தலைவியான அபிராமி அன்னையே! தேவர்கள், அசுரர்கள் ஆகிய இருவகையினரும் உன்னை வழிபடுகிறார்கள். பிரம்ம தேவரும் திருமாலும் உன்னை எண்ணித் தியானம் செய்கின்றனர். மேலான ஆனந்த வடிவினரான சிவபெருமானோ, தம் உள்ளத்தினுள்ளே உன்னை அன்பினால் கட்டிவைப்பவர், இவ்வாறெல்லாம் இருப்பதால், உலகில் உன்னைத் தரிசிப்பவர்களுக்கு உன்குளிர்ச்சி மிக்க திருவருள் தரிசனம் தரிசிப்பவர்களுக்கு அது மிக எளிதாக இருக்கிறது.

### 15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

***தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்***
***மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்***
***விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?***
***பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.***

பொருள்: அழகிய பண்ணைப் போன்று இனிய மொழிகளைப் பேசும் நறுமணங் கமழும் திருமேனியையுடைய யாமளையாகிய பசுங்கிளியே! உன் பேரருளைப் பெற வேண்டுமென முற்பிறவிகளில் பலகோடி தவங்களைச் செய்தவர்கள், இவ்வுலகைக் காக்கும் அரசபோகத்தை மட்டுந்தானா பெறுவர்? யாவரும் மதிக்கும் தேவர்களுக்கேயுரிய வானுலகை ஆளும் அரிய செல்வத்தையும் என்றும் அழிவற்ற மோட்சம் என்னும் வீட்டையும் அன்றோ பெற்று மகிழ்வர்?

### 16. முக்காலமும் உணரும் திறன் உண்டாக

***கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்***
***ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா***
***வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!***
***அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.***

பொருள்: கிளி போன்ற தேவி! உற்றாராகிய அடியவர் மனங்களில் நிலை பெற்று விளங்கும் ஞான ஒளியே! விளங்கும் பிற ஒளிகளுக்கெல்லாம் ஆதாரமான பொருளே! எண்ணிப் பார்த்திடவொண்ணாத எல்லை கடந்து நின்ற பரவெளியே! விண் முதலிய ஐம்பெரும் பூதங்களுமாகி விரிந்த தாயே! இத்துணை சிறப்பு மிக்கவளான நீ இரக்கத்திற்குரிய அடியவனான என் சிற்றறிவின் எல்லைக்குட்பட்டது வியப்பிற்குரியதுதான்!

### 17. கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

***அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்***
***துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி***
***பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்***
***மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.***

பொருள்: வியப்பூட்டும் வடிவத்தைக் கொண்டவள், தம்மினும் சிறந்த அழகுடையதென்று தாமரை மலர்கள் துதிப்பதற்குக் காரணமாக அவற்றை வெற்றி கொண்ட அழகிய கொடியைப் போன்றவள், தனக்குத் துணையான ரதிக்கு நாயகனான காமனைப் பிற இடங்களில் பெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி யாவற்றையும் இழந்து தோல்வியுறும்படி, நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்த சிவபிரானை வெற்றி கொள்ளத் தானே அவரது இடப்பாகத்தைக் கவர்ந்து கொண்டது?

### 18. மரண பயம் நீங்க

***வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்***
***செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே***
***அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து***
***வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.***

பொருள்: அன்னையே! உன்னால் கவரப்பட்ட இடப்பாகத்தையுடைய சிவனும் நீயும் இணைந்து மகிழ்ந்து நின்றிருக்கும் அர்த்தநாரீசுவரத் திருக்கோலமும், உங்கள் இருவரின் திருமணக் கோலமும், என் உள்ளத்தில் குடி கொண்டிருந்த ஆணவத்தை அகற்றி, என்னைத் தடுத்தாட் கொண்ட பொலிவு பெற்ற திருவடிகளாகக் காட்சி தந்து, வெம்மைமிக்க காலன் என் உயிரைக் கொள்ளும் பொருட்டு வரும்போது, என்முன் வெளிப்படையாய்த் தரிசனம் தந்தருளி நிற்பீராக!

### 19. பேரின்ப நிலையடைய

***வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்,***
***களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை; கருத்தினுள்ளே***
***தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?***
***ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.***

பொருள்: ஒளி பொருந்தித் திகழும் நவகோணங்களை ஏற்று விரும்பித் தங்கியுள்ள அபிராமித் தாயே! எளியவனான நானும் வெளிப்படையாய்க் காணும்படி நின்ற உன் திவ்யத் திருமேனியைப் புறத்தே கண்டு கண்களிலும், அகத்தே கண்டு உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கி ஏற்பட்ட இன்ப வெள்ளத்துக்குக் கரைகாண இயலவில்லை. எளியவனாகிய என் உள்ளத்தினுள்ளே தெளிந்த மெய்ஞ்ஞானம் விளங்கும்படி இத்தகைய பேரருளைச் செய்த உன் திருவுள்ளக் குறிப்பின் காரணம்தான் யாதோ?

### 20. வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

***உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?***
***அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்***
***நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?***
***மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.***

பொருள்: பேரருளின் நிறைவான நித்திய மங்கலையே! நீ உறைகின்ற ஆலயம் உன் பதியான பரமேசுவரனின் ஒரு பக்கமோ அல்லது உன் புகழை எப்போதும் முழங்குகின்ற நான்கு வேதங்களின் மூலமோ, அல்லது அவற்றின் திருமுடிகளாகிய உபநிடதங்களோ, அமுதம் பொலிந்து திகழும் வெண்மையான சந்திரனோ, வெள்ளைத் தாமரையோ அடியேனின் உள்ளமோ, அல்லது பொங்கியெழும் அலைகளைக் கொண்ட கடலோ? இவற்றில் எதுவோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

***மங்கலை! செங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்***
***சங்கலை செங்கை! சகலகலாமயில்! தாவுகங்கை***
***பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!***
***பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.***

பொருள்: நித்திய மங்கலையாகிய அபிராமி அன்னையே! சிவந்த கலசங்களையொத்த தனபாரங்களை உடைய மலைமகளே! சங்குகளாலான வளைகள் அசைகின்ற திருக்கரங்களையுடைய, கலைகள் அனைத்திற்கும் தலைவியாகிய, மயில் போன்றவள். பொங்கிப் பாயும் கங்கையின் மேலெழும் அலைகள் அடங்கித் தங்குவதற்குரிய சிவபிரானின் இடப்பாகத்தை ஆட்கொண்டவள். பொன்நிறத்தினளான பிங்கலை; நீல நிறத்தினாளான காளி; செந்நிறத்தினாளான லலிதாம்பிகை; வெண்ணிறத்தினளான வித்யா தேவி; பச்சை நிறத்தினாளான உமையன்னை யாவும் நீயே.

### 22. இனிப் பிறவா நெறி அடைய

***கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த***
***படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்***
***பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!***
***அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டு கொள்ளே.***

பொருள்: கொடிபோன்ற அபிராமி அன்னையே! இளம் வஞ்சிப் பூங்கொம்பை நிகர்த்தவளே! எனக்குக் காலமல்லாத காலத்தில் பழுத்துக் கனிந்த பழத்தின் உருவமே! வேதமாகிய மலரின் நறுமணம் போன்றவளே! குளிர்ச்சி பொருந்திய இமாசலத்தில் விளையாடி மகிழும் பெண் யானையே! பிரமன் போன்ற தேவர்களை ஈன்ற அன்னையே! நானும் இந்த உலகில் இறந்த பின்னர் மீண்டும் பிறவாதிருக்குமாறு என்பால் ஓடிவந்து உதவி செய்து என்னை ஆட்கொண்டருள் செய்வாயாக!

### 23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

***கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது; என்பர் கூட்டம் தன்னை***
***விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்கு***
***உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த***
***கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.***

பொருள்: பரந்து விரிந்து மூவுலகின் உள்ளேயும் உள்ள பரம் பொருளே! இருப்பினும் எல்லாப் பொருள்களுக்கும் புறம்பாயும் உள்ளாய். அடியவர்களின் உள்ளத்தில் முற்றி விளைந்த இன்பமென்னும் கள்ளே! மற்றவற்றையெல்லாம் மறந்து ஆனந்த மயக்கம் கொண்டு மகிழும் மகிழ்ச்சியே! இரக்கத்திற்குரிய என் கண்ணினுள் மணி போன்றவளே! நான் என் உள்ளத்தில் தியானம் செய்யும் பொழுது உன்னுடைய திருக்கோலத்தைத் தவிர வேறு தெய்வம் எதனுடைய திருவுருவையும் நினையேன். உன் அடியவர்களை விட்டுப் பிரிந்து மற்ற சமயங்களையும் விரும்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. நோய்கள் விலக

*மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த*
*அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்*
*பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!*
*பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.*

பொருள்: ஒளிவீசித் திகழும் மாணிக்கத்தைப் போன்றவளே! அந்த மாணிக்கத்தின் பிரகாசத்தைப் போன்றவளே! ஒளிமிக்க மாணிக்கங்களால் அழகிய முறையில் உருவாக்கப் பெற்ற ஆபரணத்தைப் போன்றவளே! அந்த ஆபரணங்களுக்கும் அழகூட்டுபவளே! உன்னை அணுகாமல் வீணாகப் பொழுது போக்குவோருக்கு நோய் போன்றும், உன்னை அணுகியவர்களின் பிறவிப் பிணிக்கு மருந்து போன்றும் விளங்குபவளே! தேவர்களனை வர்க்கும் பெரும் விருந்தாய்த் திகழ்பவளே! தாமரை மலரை நிகர்த்த உன் திருவடிகளைப் பணிந்த நான் வேறொருவரைப் பணியேன்.

## 25. நினைத்த காரியம் நிறைவேற

*பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க*
*முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்; முதல் மூவருக்கும்*
*அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!*
*என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.*

பொருள்: முதன்மை பெற்றவர்களான மும்மூர்த்திகளுக்கும் அன்னையான அபிராமித் தாயே! உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் பிறவிப் பிணியினின்றும் நீங்க எழுந்தருளி, பிணிதீர்க்கும் அருமருந்தே! உன்னைப் போற்றும் அடியவர்களின் பின்சென்று அவரை வழிபட்டு, பிறவிப் பிணியை அறுத்தெறியும் நோக்குடன், முற்பிறவியில், தவங்களைச் செய்து வைத்தேன், இனி என்றும் உன்னை மறவாமல் நிலையாய் நின்று துதி செய்வேன். இந்த நிலையிலுள்ள எனக்குள்ள குறைதான் யாதோ? எதுவும் இல்லை.

## 26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

*ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்,*
*காத்தும், அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு*
*சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்*
*நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.*

பொருள்: மணங்கமழும் கடம்ப மலரை அணியும் கூந்தலையுடைய தேவி! ஈரேழுலகங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் புரிந்து வரும் மும்மூர்த்திகளும், உன்னைத் துதிக்கும் அடியவர்களாக உள்ளனர். நிலைமை இவ்வாறிருக்க, மணம் பொருந்திய உன்னுடைய திருவடிகள் இரண்டுக்கும் எவ்வகை யிலும் ஈடாகாத எளியவனாகிய என் நாவில் வெளிவந்த பொருளற்ற சொற்களையும் கூடத் துதிகளாக ஏற்றுக்கொண்டு, மகிழ்வதைக் கண்டால் அந்தச் சொற்கள் பெற்ற ஏற்றம் உண்மையில் நகைப்புக்குரியதன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 27. மனநோய் அகல

**உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும் அன்பு**
**படைத்தனை; பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே**
**அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்**
**துடைத்தனை; சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.**

பொருள்: பேரழகு வடிவுடைய தாயே! என் முன்வினைப் பயனால் ஏற்பட்ட பிறவியைத் தகர்த்து, என் உள்ளம் உருகும் வண்ணம் ஆழ்ந்த அன்பையும் அந்த உள்ளத்தில் உண்டாக்கி, தாமரை மலரையொத்த உன் திருவடிகள் இரண்டையும் தலையால் வணங்கி மகிழும் தொண்டையும் எனக்கென ஏற்படுத்தித் தந்தாய். என் நெஞ்சில் கப்பியிருந்த ஆணவம் முதலிய அழுக்குகளையெல்லாம் உன் கருணையென்னும் தூய நீரால் கழுவிப் போக்கினாய். இந்த உன் திருவருட் சிறப்பை நான் என்னவென எவ்விதம் எடுத்துக் கூறிப் பாராட்டுவேன்?

### 28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய

**சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்**
**புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்**
**செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.**

பொருள்: ஆனந்தத் தாண்டவம் ஆடி மகிழும் நடராசப் பெருமானுடன் - சொல்லும் அதை விட்டு விலகாத பொருளும் போல - என்றும் இணைந்து நிற்கும் நறுமணமிக்க பூங்கொடி போன்ற தாயே! மலர் போன்ற உன் திருவடிகளை அல்லும் பகலும் விடாது தொழும் அடியவர்களுக்கெல்லாம் அழிவற்ற உயர்பதவியும், என்றும் நிலை பெற்று விளங்கும் தவ வாழ்க்கையும், இறுதியில் சிவலோக பதவியும் சித்திப்பதாகும்.

### 29. எல்லா சித்திகளும் அடைய

**சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்**
**பராசத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்**
**முத்தியும், முத்திக்கு வித்தும் ,வித்தாகி முளைத்தெழுந்த**
**புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.**

பொருள்: அடைதற்கரிய எண்வகைச் சித்திகளும், அந்த சித்திகளை அளிக்கும் தெய்வமாக விளங்கும் பராசக்தியும், சக்தியைத் தம்மிடத்தில் தழைத்தோங்கச் செய்த பரமசிவமும் தவம் புரிபவர்கள் பெறும் மோட்சம் எனும் பேரானந்தமும் அந்த முத்தியைப் பெறுவதற்கு அடிப்படையான மூலமும் மூலமாகித் தோன்றி எழுந்த ஞானமும் ஆகிய அனைத்துமா யிருப்பவள் என் அறிவினுள்ளே நின்று காத்தருளும் திரிபுரசுந்தரியேயாம்.

### 30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க

**அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய்; கொண்டதல்ல என்கை**
**நன்றே உனக்கு இனி நான் என்செயினும், நடுக்கடலுள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே;**
**ஒன்றே! பல உருவே! அருவே! என் உமையவளே!**

பொருள்: ஓருருவாகவும், பல உருவங்களையுடையவளாயும், உருவமற்ற அருவமாயும் காட்சி தரும், எனக்குத் தாயான உமாதேவியே! முன்னொரு நாள் என்னைத் தடுத்தாட் கொண்டு காத்தருள் புரிந்தாய். அவ்வாறு அருள் செய்ததை இல்லையென மறுத்தல் உனக்கு நியாயமாகுமா? இனி எளியவனான நான் எத்தகைய பிழையைச் செய்தாலும், கடலின் நடுவே சென்று விழுந்தாலும், என் குற்றத்தை மன்னித்து, என்னைக் கரையேற்றிக் காத்தருள்வதே உன் திருவுள்ளச் செயலுக்கு மிக உகந்ததாகும்.

### 31. மறுமையில் இன்பம் உண்டாக

**உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு**
**எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்; இனி எண்ணுதற்குச்**
**சமையங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை;**
**அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.**

பொருள்: அன்னையாம் உமையும், உமையைத் தம் இடப்பாகத்தில் கொண்ட அண்ணலாம் ஈசனும் இணைந்தபடி ஒருவராக அர்த்தநாரீசுவரக் கோலத்தில் எழுந்தருளி, பக்குவமில்லாத எளியவனான என் போன்றோரையும் தங்கள் திருவடிகட்கு அன்பு செலுத்துமாறு நெறிப்படுத்தினார். அதன் விளைவாக இனி இதைப் பின்பற்றுவோம் என்றெண்ணத்தக்க வேறு சமயங்கள் ஏதுமில்லை. என் பிறவிப் பிணி அகன்றுவிட்டதாதலால் இனி என்னை ஈன்றெடுக்கத்தக்க தாயும் இல்லை. மூங்கிலையொத்த தோளினைப் பெற்ற மங்கையர் பால் கொண்டிருந்த மோகமும் இனி இல்லை.

### 32. துர்மரணம் வராமலிருக்க

**ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்**
**பாசத்தில் அல்லல்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்**
**வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட**
**நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழையே!**

பொருள்: ஈசனின் இடப்பாகத்தில் அமர்ந்தருளும் தேவியாம் அன்னையே! நுண்ணிய வேலைப்பாடமைந்த அணிகலன்களை அணிந்த தேவியே! ஆசைகளால் அலைகள் பொங்கியெழும் கடலில் அகப்பட்டு, அதன் விளைவாக யமனின் கையிலுள்ள காலபாசத்தில், சிக்கித் துன்பப்பட வேண்டியிருந்த என்னை, உன் திருவடியான தாமரை மலரை எளியவனான என் சிரசின் மீது வைத்து, வலியவந்தென்னை ஆட்கொண்டருளிய உன் பேரருட் பெருங்கருணையை எப்படிப் போற்றி உரைப்பேன்?

### 33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

**இழைக்கும் வினைவழியே ஆடும் காலன் எனைநடுங்க**
**அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்; அத்தர் சித்தமெல்லாம்**
**குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!**
**உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஈசனின் திருவுள்ளத்தை உருகிக் களிக்கச் செய்யும் வண்ணம், மணமுள்ள சந்தனக் குழம்பைப் பூசிய குவிந்த தனபாரங்களையுடைய யாமளையெனும் கோமளச் செவ்வியே! நான் செய்யும் பாபங்களின் விளைவாக என்னைக் கொல்ல வரும் யமன், நான் நடுங்கும் வண்ணம் என்னை அழைக்க வருகிற வேளையில், நான் நடுங்கும் வண்ணம் என்னை அழைக்க வருகிற வேளையில், நான் மிக வருந்தி உன்பால் ஓடிவந்து 'அன்னையே காத்தருள் என்று உன்னை சரணடைவேன். அந்தச் சமயத்தில் 'அஞ்சேல் எனக்கூறி அபயமளித்து நீ என்னைக் காத்தருள வேண்டும்.

### 34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

***வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்***
***தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்***
***பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்***
***செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.***

பொருள்: தன்னிடம் வந்து சரணடையும் பக்தர்களுக்கு, அன்புடன் சுவர்க்கலோகப் பதவியை அளிக்கும் அன்னை அபிராமியானவள், தான் பிரமதேவனின் நான்கு முகங்களிலும், தேன் வடியும் துளசி மாலையுடன் பருத்த கௌஸ்துப மணியையும் கழுத்திலணிந்த திருமாலின் மார்பிலும், சிவபிரானின் இடப்பாகத்திலும், செந்தேன் சொரியும் தாமரை மலரிலும், ஒளிமிக்க கிரணங்களைக் கொண்ட சூரியனிடத்திலும், சந்திரனிடத்திலும் சென்று வீற்றிருப்பாள்.

### 35. திருமணம் நிறைவேற

***திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க***
***எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்***
***தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்***
***வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.***

பொருள்: அலைகள் புரண்டெழும் பாற்கடலின் மீது ஆதிசேஷனாகிய பாம்பணை மீது பள்ளி கொண்டு துயிலும் மென்கொடியான மேலான பொருளே! ஈசனின் திருமுடியிலுள்ள பிறைச்சந்திரனின் மணம் கமழ்கின்ற உன்னுடைய சிற்றடியை, ஒன்றுக்கும் உதவாத எளியவர்களான எங்களைப் போன்றோரின் சிரங்களின் மீது வைத்தருள்வதாயின் எங்கள் ஒப்பற்ற தவத்தின் சிறப்புத்தான் என்னே என வியக்கிறோம். எண்ணற்ற தேவர்களுக்கும் கூட இத்தகைய சிறந்த பாக்கியம் கிட்டுமோ? கிட்டாது.

### 36. பழைய வினைகள் வலிமை பெற

***பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்***
***மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து***
***இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்***
***அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!***

பொருள்: தாமரையாகிய அழகிய ஆசனத்தில் எழுந்தருளிய அபிராமித் தாயே! பலவகைச் செல்வங்களின் வடிவமாய் இருக்கிறாய். அச்செல்வங்களால் உண்டாகும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகங்களை அனுபவிக்கச் செய்யும் மாயா ரூபிணியே! அதன் மயக்கத்தின் முடிவில் ஏற்படும் தெளிவான ஞானமே! அடியேனின் உள்ளத்தில் சிறிதளவும் இல்லாதபடி மாயையெனும் இருளைப் போக்கி, ஒளிவீசிப் பிரகாசமாய்த் திகழும் உன் திருவருள் எத்தகையதென என்னால் அறிந்து கொள்ள இயலவில்லையே!

### 37. நவமணிகளைப் பெற

***கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன***
***மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விட அரவின்***
***பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும், எட்டுத்***
***திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!***

பொருள்: எண்திசைகளையுமே ஆடையாய் உடுத்த அண்ணலாம் சிவபிரானின் இடப்பக்கத்தில் பொருந்தியுள்ள அபிராமி அன்னையே! உன் திருக்கரத்தில் அணிந்திருப்பவை கரும்பாகிய வில்லும், மலராகிய அம்புகளுமாம். அழகிய வெண்முத்து மாலையை, செந்தாமரையையொத்த உன் சிவந்த திருமேனியில் அணிந்திருக்கிறாய். கொடிய நஞ்சைக் கொண்ட நாகத்தின் படம் போன்ற உன் மெல்லிடையில் அழகிய நவமணிகளாலான மேகலையைத் தரித்திருக்கிறாய்.

### 38. வேண்டியதை வேண்டியவாறு அடைய

***பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்***
***தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்***
***துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்***
***அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.***

பொருள்: நல்ல இன்பந்தரும் பதவியாகிய இந்திர பதவி பெற்ற, தேவலோகத்திலுள்ள அமராவதிப் பட்டணத்தை ஆளவேண்டுமென விரும்புபவர்களே! அதற்கு நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? பவளக்கொடியைப் போல கனிந்த செக்கச் சிவந்த வாயையும், அதற்கேற்ப குளிர்ச்சி மிகுந்த புன்னகை மிளிரும் வெண் முத்தனைய அழகிய பல்வரிசையும் கொண்டு, எங்கும் நிறைந்த பரிபூரணனாம் ஈசனை மகிழ்விக்குமாறு எதிர்ப்பட்டு அவரது தவத்தைக் கலைக்குமாறு செய்த உடுக்கை போன்ற இடையையும் அழுத்தும்படியான தன பாரங்களையுடைய அபிராமி அன்னையை வழிபடுங்கள்.

### 39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற

***ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு; அந்தகன்பால்***
***மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு; மேல் இவற்றின்***
***மூளுகைக்கு என்குறை; நின்குறையே அன்று; முப்புரங்கள்***
***மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!***

பொருள்: முப்புரங்களையும் எரிக்கும் பொருட்டு மேரு மலையாகிய வில்லை வளைத்து, திருமாலாகிய அம்பைத் தொடுத்த சிவபிரானின் இடப்பாகத்தில் அமர்ந்த அன்னையே! ஒளிவீசித் திகழும் வாள் போன்ற வளைந்த நெற்றியையுடைய தேவி! என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொண்டருள்வதற்கென உன் திருவடித் தாமரைகள் உள்ளன. காலனின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக் காக்க உன் கருணைத் திருவிழிகளின் பார்வையுண்டு. இவையெல்லாம் இருந்தும் உன்னைத் தொழுது வணங்கிப் பயன் பெறாததெல்லாம் என் குறைதானேயன்றி, உன் குறையன்று.

## 40. பூர்வ புண்ணியம் பலன்தர

***வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்***
***பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்***
***காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு***
***பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.***

பொருள்: ஒளிவீசித் திகழும் அழகிய திருநெற்றியிலே விழி பெற்றவளை, தேவர்களுக் கெல்லாளும் வந்து வணங்கி வழிபட விழைகின்ற அபிராமி என்னும் எம் பெருமாட்டியைத் தொழும் வாய்ப்பு எனக்கு எப்படி ஏற்பட்டது? அறியாமை நிறைந்த நெஞ்சினருக்கு, மிக அருகிலிருந்தும் கூடக் கண்டுகொள்ள முடியாத கன்னியான அவளைக் கண்டு தொழுது அவளது பேரன்பை நான் பெறுவதற்கு, முற்பிறவிகளில் நான் செய்த புண்ணியங்களின் பயனே காரணம் எனக் கருதுகிறேன்.

## 41. நல்லடியார் நட்புப் பெற

***புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்***
***கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்***
***நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்***
***பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.***

பொருள்: மனமே! அன்றலர்ந்த புத்தம் புதிய குவளை மலர்களையொத்த அழகிய திருவிழிகளையுடைய அபிராமி அன்னையும், செந்நிறத்துடன் கூடிய அவருடைய பதியும் சேர்ந்து நம்மை ஆட்கொள்ளும் காரணத்தால் நம்மை நாடி வந்து, நம்மையும் தம் அடியவர்களுடன் இருக்குமாறு திருவருள் புரிந்து, நம் தலை மீது தம் திருவடி மலர்களைப் பதிப்பதற்கு, நாம் முற்பிறவியில் என்ன புண்ணியத்தைச் செய்திருக்கிறோமோ என்றெண்ணும்போது வியப்பாகத் தான் இருக்கிறது.

## 42. உலகினை வசப்படுத்த

***இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து***
***வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை***
***நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்***
***படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.***

பொருள்: அளவில் பரந்து பருத்தனவாயும் ஒன்றோடொன்று இணையாய்க் காணப்படுவனவாயும் தளர்ச்சியின்றிச் செழித்தும் குழைந்தனவுமான கொங்கைகளாகிய மலைகளின் மீது அழகிய முத்துமாலையை அணிந்தவாறு, ஈசனின் வன்மை மிகுந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தைத் தாம் எண்ணியபடியெல்லாம் ஆட்டி வைக்கும் உறுதியையும் அதற்கேற்ற பேரெழிலையும் படைத்த தேவி, நல்ல பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையும், இனிமையான வாய்ச்சொற்களையும் வேதமாகிய சிலம்பையும் உடையவளாவாள்.

### 43. தீமைகள் ஒழிய

*பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்*
*திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்*
*பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை*
*எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.*

பொருள்: நெஞ்சில் தீய எண்ணங்களைக் கொண்டு தேவர்களுக்குத் தீமை செய்ய எண்ணித் திரிபுரத்தில் உள்ள அசுரர்களை அச்சுறுத்த எண்ணி, வளைத்த மேருமலையாகிய வில்லையேந்திய திருக்கரத்தையும், நெருப்பைப் போன்று சிவந்த திருமேனியையுங் கொண்ட ஈசனின் இடப்பாகத்தில் எழுந்தருளியுள்ள அன்னை அபிராமி சிலம்பை அணிந்த சிறிய திருவடிகளையும், பாசாங்குசத்தையும் உடையவள். ஐந்து மலர்ப்பாணங்களைக் கையில் ஏந்தியவள். இனிய வார்த்தைகளையுடைய திரிபுரசுந்தரி. சிந்தூரம் போலச் சிவந்த திருமேனியையுடையவள்.

### 44. பிரிவுணர்ச்சி அகல

*தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்*
*அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்*
*இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்*
*துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.*

பொருள்: எங்களுக்கெல்லாம் இறைவியாகிய அன்னையே! எங்கள் இறைவராகிய சங்கரனாரின் துணைவியானவளே. இவளே ஒரு சமயம் ஈசனுக்கே அன்னையுமானாள். எனவே தேவர்கட்கெல்லாம் தலைவியாயிருக்கும் மேலான பேறு பெற்றவளைத் தெய்வமாய்க் கொள்வதல்லாமல் வேறொரு தெய்வம் உண்டெனக் கருதி வீணாகத் தொண்டு செய்து நான் மன வருத்தம் அடையமாட்டேன்.

### 45. உலகோர் பழியிலிருந்து விடுபட

*தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே*
*பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்*
*கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?*
*மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே; பின் வெறுக்கை அன்றே.*

பொருள்: தேவி! உனக்குத் தொண்டு புரியாமலும் உன் திருவடிகளைத் தொழாமலும், மெய்ப்பொருள் இன்னதென உணர்ந்து, தம் மனம் போன போக்கினராய்ப் பழங்காலத்தில் ஞானியரைப் போன்ற அடியவர்கள் இருந்தார்களன்றோ! அவற்றைத் தெரிந்து அவரைப் போன்றே என் இச்சைப்படி நானும் செயல்புரிந்தால் அது மட்டும் எப்படி வஞ்சகமாகும் அல்லது அவர்கள் செய்ததெல்லாம் தவமானதைப் போல நான் செய்ததும் தவமாகுமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் நான் செய்யும் செயலில் தவறுண்டெனில் நீ பொறுத்தருள்வதே நலமன்றி என்னை வெறுத்தொதுக்குவது நன்றன்று.

### 46. நல்நடத்தையோடு வாழ

***வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்***
***பொறுக்கும் தகைமை புதியதன்றே; புது நஞ்சைஉண்டு***
***கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!***
***மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான் உன்னை வாழ்த்துவேனே!***

பொருள்: ஆலகால விஷம் என்னும் கொடிய நஞ்சை விழுங்கிக் கழுத்திலேயே நிறுத்திக் கொண்டதால் கறுத்த திருக்கழுத்துடையவரான சிவபிரானின் இடப்பாகத்தில் அமர்ந்துள்ள பொன்னிற மேனியளே! வெறுக்கத்தக்க செயல்களை அடியவர்கள் செய்தாலும், அறிவிற் சிறந்த பெரியவர்கள் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் பழக்கம் தொன்று தொட்டே இருந்து வருவதுதானே? ஆகவே, நீ விரும்பாமல் விலக்கத்தக்க செயல்களை நான் அறியாமையால் செய்தாலும், நீ பொறுத்துக் கொள்வாய் என்ற நம்பிக்கையில் உன்னை நான் வாழ்த்தி வணங்கத் தவறேன்.

### 47. யோகநிலை அடைய

***வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன்; மனத்தே ஒருவர்***
***வீழும்படி அன்று, விள்ளும் படி அன்று, வேலைநிலம்***
***ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்***
***சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.***

பொருள்: அழிவில்லாத இன்பத்தில் வாழும்படியான பரம்பொருள் ஒன்றை மெய்ஞ்ஞானத்தால் அறிந்து கொண்டேன். அது, மனத்தில் ஒருவர் விரும்பித் தியானிக்குமாறுள்ள ஒன்றன்று; இப்படி இருப்பதென வாயினால் எடுத்துக் கூறவும் உரியதன்று. ஏழு கடல்களுக்கும், ஏழுலகங்களுக்கும் உயர்ந்தவையான எட்டு மலைகளுக்கும் அப்பால், முறையே இரவையும் பகலையும் ஏற்படுத்தும் சந்திரன், சூரியர்களுக்கிடையே அமைந்து திகழ்கிறது.

### 48. உடல் பற்று நீங்க

***சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்***
***படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்***
***இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ;***
***குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.***

பொருள்: ஒளிவீசித் திகழும் கலைகளையுடைய பிறையைத் தரித்த சடையடர்ந்த திருமுடியையுடைய மேருமலை போன்ற சிவபிரானுடன் இணைந்து, மணங்கமழும் பசுங்கொடியான அபிராமித் தாயைத் தம் நெஞ்சில் தியானித்து, அதனால் தங்கள் துயரங்களிலிருந்து விடுபட்டு, ஒரு கண்ணிமைப் பொழுதாவது பேரானந்த நிலையில் இருப்பவர்கள், மீண்டும் இந்தத் தோலும், ரத்தமும், குடலும், தசையும் கொண்ட உடற்கூட்டை விரும்பிப் பிறப்பார்களோ? மாட்டார்களன்றோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 49. மரணத் துன்பம் இல்லாதிருக்க

***குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட***
***வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து***
***அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்;***
***நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.***

பொருள்: யாழின் நரம்பைப் பொருத்திய கருவியில் இசை வடிவமாய் எழுந்தருளி நிற்கும் அபிராமித் தாயே! உடம்பாகிய கூட்டில் குடிபுகுந்துள்ள உயிரானது, பிரமன் குறித்த நாளில் கூற்றுவன் வந்து கவர்ந்து செல்லப்பட உள்ள அந்த வேளையில், அரம்பையும் தேவமகளிரும் சூழ்ந்து நின்று சேவிக்கப்படுபவளாகிய நீ, ஓடோடி வந்து வளையணிந்த உன் அழகிய திருக்கரத்தால் எனக்கு அபயமுத்திரை காட்டி அஞ்சாதே என்று திருவாய் மலர்ந்தருளி ஆதரிப்பாயாக!

### 50. அம்பிகையை நேரில் காண

***நாயகி; நான்முகி; நாராயணி; கை நளின பஞ்ச***
***சாயகி; சாம்பவி; சங்கரி; சாமளை; சாதிநச்சு***
***வாயகி; மாலினி; வாராகி; சூலினி; மாதங்கி என்று***
***ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.***

பொருள்: அம்பிகை, நான்கு திருமுகங்களை உடையவள். நாராயணனின் தங்கை என்பதால் நாராயணி. தாமரை போன்ற கரத்தில் ஐந்து மலரம்புகளை ஏந்தியவள். சம்புவின் துணைவி என்பதால் சாம்பவி. இன்பங்களைத் தருபவளான சங்கரி, பச்சை (சாமள) நிறம் பொருந்தியவளாதலால் சாமளை, வாயிலே நஞ்சைக் கொண்ட பாம்பை மாலையாக அணிந்தவள். ஒரு சமயம் வராகத் தோற்றத்துடன் தரிசனம் தந்ததால் வாராகி, சூலத்தை ஏந்தினவள் என்பதால் சூலினி, மதங்க முனிவரின் திருமகளாதலால் மாதங்கி என்ற பல திருநாமங்களால் அழைக்கப்படும் புகழையுடைய அபிராமியின் திருவடிகள் என்றும் நமக்குப் பாதுகாப்பாயிருந்து காக்கவல்லவை.

### 51. மோகம் நீங்க

***அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்***
***முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே***
***சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்***
***மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.***

பொருள்: பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றினால் கட்டப்பட்ட கோட்டைகளே மெய்யான செல்வமென எண்ணிய மூன்று அசுரர்களின் வலிமையும் அற்றுப் போகுமாறு செய்த சிவபிரானும் திருமாலும் கூட, உன் திருவடியைச் சரணடைந்தோம் என்று வந்து நின்று வணங்கக் கூடிய நிலையிலுள்ள தலைவியான அபிராமித் தாயின் அடியவர்கள் இறப்பு, பிறப்பு ஆகிய இரண்டினாலும் ஒருநாளும் துன்பமடையார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52. பெருஞ்செல்வம் அடைய

***வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை***
***பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த***
***ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு***
***செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.***

பொருள்: பிறைச் சந்திரனைச் சிரசில் சூடிக் கொண்ட பெருமானின் அழகிய தேவியாகிய அபிராமித் தாயே! தேர், குதிரை, மதங்கொண்ட யானை, மாபெரும் மணிமகுடம், நவமணிகளாலான அழகிய பல்லக்கு, பிற மன்னர்கள் கப்பமாகச் செலுத்திய பொற்குவியல், விலைமதிப்பு மிக்க பொன்னாரம் ஆகிய உன் அழகிய அணிகலன்களெல்லாம், தவம் புரிந்து உன்னை வணங்கும் அடியவர்களுக்குக் கிடைத்த பெரும் பேறுகளாகும்.

## 53. பொய்யுணர்வு நீங்க

***சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,***
***பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து***
***கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்***
***தன்னந்தனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.***

பொருள்: சின்னஞ் சிறிய இடையிலே தேவி உடுத்தியிருக்கும் சிவந்த பட்டாடையையும், மிகப் பெரிய மார்பகத்தையும், அவற்றின் மேல் அணிந்த அழகிய முத்து மாலையையும், பிச்சி மலர் சூடப்பெற்ற கரிய கூந்தலையும், மூன்று திருவிழிகளையும் தம் உள்ளத்திலே வைத்துத் தியானிப்பவர்களுக்கு, இதைவிடப் பெரிய தவமென்று வேறொன்றுமில்லை.

## 54. கடன் தீர

***இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு***
***நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்***
***கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்***
***செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.***

பொருள்: அடியவர்களே! செல்வர்களைத் தேடிச் சென்று உங்கள் ஏழைமை நிலையைக் கூறி அவர்களால் இழிமொழிகளால் ஏசப்படும் நிலைக்கு நீங்கள் செல்லாமல் இருக்க வேண்டும் என்ற நினைவு உங்கள் நெஞ்சத்தில் இருக்குமானால், நாள்தோறும், உயர்ந்த தவத்தைக் கல்லாத இழிகுணத்தவர்களிடம் தோழமை கொள்ளாத பெருமைமிக்க நிலையையளித்த திரிபுரசுந்தரியின் திருவடிகளை நாள்தோறும் தொழுது மகிழ்வீர்களாக!

## 55. மோனநிலை எய்த

***மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது***
***அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு***
***முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை***
***உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: பல்லாயிரம் மின்னல்கள் ஒரு திருமேனியாய் உருப்பெற்று விளங்குவதைப் போன்ற கோலத்தையுடையவளும், அடியவர்களின் உள்ளங்களில் எல்லையற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துபவளும், அரிய வேதத்திற்கு முதலும், நடுவும் முடிவுமாகி முதல்வியாயும் விளங்கும் அபிராமித் தாயை இந்த உலகத்தவர் நினைந்தாலும், நினையாமலிருந்தாலும் அவர்களாலெல்லாம் அன்னைக்கு வேண்டப்படுவது யாதொன்றும் இல்லை.

### 56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக

***ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்***
***நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்என்தன் நெஞ்சினுள்ளே***
***பொன்றாது நின்று புரிகின்றவா; இப்பொருள் அறிவார்***
***அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.***

பொருள்: ஏகப் பரம்பொருள் என்கின்ற ஒரே பொருளாகிய பராசக்தியாய் முதலில் தோன்றி, பின்னர் பல பல சக்திகளாகி விரிந்து, இந்த உலகெங்கினும் நிறைந்து நின்றவளாய், அந்த அனைத்துப் பொருள்களினின்றும் நீங்கியும் நிற்பவளாகிய அபிராமியன்னை என் நெஞ்சில் மட்டும் நீங்காமல் நிலை பெற்றிருப்பதென்ன வியப்பு! இந்தப் பேருண்மையை முழுமையாய் நன்கறிந்தவர்கள் முன்னொரு நாளில் பிரளய காலத்தில் ஆலிலை மேல் பள்ளி கொண்டருளிய திருமாலும், என் தலைவனாம் இறைவன் சிவபிரானுமேயாவர்.

### 57. வறுமை ஒழிய

***ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்***
***உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்***
***செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்***
***மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.***

பொருள்: தேவி! சிவபிரான் அளந்து கொடுத்த இருநாழி நெல்லைக் கொண்டு, உலகமெல்லாம் பசி நீங்கி உய்யும் பொருட்டு முப்பத்திரண்டு வகையான அறங்களையும் குறைவின்றி முழுமையாய்ச் செய்த உன்னை, அழகிய தமிழ்ப் பாடலால் நான் பாடி மகிழ எனக்கு அருள் புரிந்த நீயே, செல்வர் என்ற ஒரே காரணத்திற்காக ஒருவர் முன் நான் போய் நின்று பொய்யையும் மெய்யையும் கலந்து பாடி வாழ்த்தும் நிலையில் என்னை வைத்து விட்டாயே, இதுவா உன் திருவருள்?

### 58. மனஅமைதி பெற

***அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்***
***தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள், தகை சேர்நயனக்***
***கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,***
***சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.***

பொருள்: செந்தாமரை மலரிலும், என் உள்ளத் தாமரையிலும் எழுந்தருளியிருக்கும், தாமரை அரும்பைப் போன்ற தனபாரத்தையுடைய அம்பிகையின் அழகு மிகுந்த கருணைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழியான தாமரையும், திருமுகத் தாமரையும், திருக்கரமாகிய தாமரையும், திருவடித் தாமரையும் அல்லாமல் என்னைக் காக்கவும், அருள் புரியவும் வேறோர் அரண் இருப்பதாக நான் எண்ணவில்லை.

### 59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர

***தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே***
***நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை; நீள்சிலையும்***
***அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய்; அறியார் எனினும்***
***பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.***

பொருள்: கரும்பையும், மலரையும் முறையே நீண்ட தனி வில்லாகவும், ஐந்து அம்புகளாகவும் கொண்டு, நின்ற அபிராமியன்னையே! இதைத் தவிர எனக்கு வேறொரு பற்றுக்கோடும் இல்லையென உணர்ந்தாலும், உன்னைத் தியானம் செய்யும் தவவழியில் என் மனத்தைச் செலுத்த நான் முயலவில்லை. பஞ்சை மிதிக்கவும் அஞ்சும் மெல்லிய அடிகளைப் பெற்றுள்ள தாய்மார்கள், தாம் பெற்ற மழலைச் செல்வங்கள் ஏதேனும் தவறு செய்தாலும் தண்டிக்க மாட்டார்கள்.

### 60. மெய்யுணர்வு பெற

***பாலினும் சொல் இனியாய்! பனி மாமலர்ப்பாதம் வைக்க***
***மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்***
***மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு***
***நாலினும் சாலநன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?***

பொருள்: பாலை விட மேலான இனிய சொல்லையுடைய தேவி! குளிர்ச்சி பொருந்திய தாமரை போன்ற உன் திருவடிகளைப் பதிக்க, திருமாலும் மற்ற தேவர்களும் வணங்குமாறு நின்ற, கொன்றை மலர்களைச் சூடிய சடாமகுடத்தின் மேலிடத்தையும் விட, கீழே நின்று பாடும் வேதங்கள் நான்கையும் விட, எளியவனான என்னுடைய - நாற்றமுடைய நாய்த் தலையைப் போன்ற - தலையைத் தேர்ந்தெடுத்த உன் செயல் மிக நன்றோ?

### 61. மாயையை வெல்ல

***நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து***
***நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்***
***பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?***
***தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.***

பொருள்: உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் தாயானவளே! கயிலாய மலையில் உறையும் பார்வதி தேவியே! திருமாலின் தங்கையே! இவனை ஆட்கொள்ளலாமா, வேண்டாமா என்றும் கூட ஆராயாமல், நாயைப் போன்ற என்னையும் உன் கருணைக்குரியவனாக எண்ணித் திருவுள்ளங் கொண்டு, நீயே வலிய வந்து எளியவனான என்னை ஆட்கொண்டாய். உன்னை அறியும் ஞானத்தையும் எனக்கு நல்கினாய். எத்தகைய பெரும்பேற்றை நான் பெற்றிருக்கிறேன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 62. எத்தகைய அச்சமும் அகல

***தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத***
***வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்***
***கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்***
***செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.***

பொருள்: மேரு மலையாகிய பொன் வில்லைக் கொண்டு அசுரர்களின் முப்புரங்களையும் அழித்து, மதங்கொண்ட யானையின் தோலைப் போர்த்த உத்தம வீரராகிய சிவபிரானின் திருமேனி முழுவதிலும் மணமிக்க கலவை பூசிய குரும்பையொத்த கொங்கைகளால் குறிப்பிட்ட நாயகியாம் அபிராமித் தாயின் தாமரை மலரைப் போன்ற சிவந்த கரத்திலுள்ள கரும்பு வில்லும், மலரம்புகளும் என் சிந்தையை விட்டு எப்போதும் நீங்காதிருப்பனவாகும்.

### 63. அறிவு தெளிவோடு இருக்க

***தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்***
***கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும்; சமயம்***
***ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்***
***வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.***

பொருள்: ஷண்மதம் எனப்படும் ஆறு சமயங்களுக்கும் தலைமையாகிய தெய்வமாக அபிராமியன்னையே இருப்பதை அறிந்திருந்தும், இவளைத் தவிர வேறு தெய்வத்தைக் கூறும் பிற சமயங்களும் உண்டென்று கூறிப்பிதற்றும் வீணர்களுக்கெல்லாம் உண்மையை உணர்த்தும் பொருட்டு சில சான்றுகளை எடுத்துக் கூறுவதென்பது, வலிய மலைப்பாறை ஒன்றினை மரத்தடி கொண்டு தகர்க்க முனைவது போன்ற முயற்சியாகும்.

### 64. பக்தி பெருக

***வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு***
***பூணேன்; உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்***
***பேணேன்; ஒருபொழுதும் திருமேனி பிரகாசமின்றிக்***
***காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.***

பொருள்: தாயே அபிராமி! வீணாகப் பல உயிர்களைப் பலியாக ஏற்றுக் கொள்ளும் பிற தெய்வங்களின் பாற்சென்று நான் அன்பு பூண்டு திரியமாட்டேன். உன்னையே தெய்வமாக ஏற்று அன்பு பூண்டொழுகுவேன். உன் புகழையன்றி வேறு சொற்களை நான் பேச மாட்டேன். இந்தப் பரந்த பூவுலகிலும் நான்கு திசைகளிலும் ஆகாயத்திலும் எங்கெங்கும் உன் திருமேனியின் ஒளிவெள்ளத்தைத் தவிர வேறொன்றையும் நான் காண்கிலேன்.

### 65. ஆண்மகப்பேறு அடைய

***ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்***
***தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்***
***முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்***
***மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே!***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: அபிராமவல்லியாகிய அன்புத் தாயே! மேலுள்ள உலகங்களும் தேவலோகமும் இந்தப் பூவுலகும் அறிய அன்றொரு மன்மதனை எரித்த யோகியாம் சிவபெருமானுக்கு, அழகிய திருமுகங்கள் ஆறும், திருக்கரங்கள் பன்னிரண்டும் கொண்ட ஞானக் குழந்தையாகிய திருமுருகப் பெருமானை அவதரிக்கச் செய்யும் சக்தியைக் கொடுத்தாயே! என்னே உன் வல்லமை!

### 66. கவிஞராக

***வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன் நின் மலரடிச்செம்***
***பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு***
***வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய்; வினையேன்தொடுத்த***
***சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.***

பொருள்: பசும்பொன் மலையாகிய மேருவை வில்லாகக் கொண்ட ஈசனுடன் எழுந்தருளி யுள்ள தாயே! நான் அறிவாற்றல் மிக்கவனல்லேன். சிற்றறிவு படைத்த எங்கும் நிறைந்து விளங்கும் உன் திருவடியாகிய சிவந்த தளிரையன்றி வேறொரு துணையையும் பற்றாகக் கொள்ள மாட்டேன். தீவினையின் பாற்பட்டு உழலும் நான் தொடுத்த இந்தப் பாடல்களெல் லாம் பொருளற்ற வெற்றுச் சொற்களேயாயினும் இடையிடையே உன்னுடைய திருநாமங்களைச் சொல்லியிருப்பதால், நீ ஏற்றுக் கொள்ளத்தக்க சிறந்த பாடல்களேயாகும்.

### 67. பகைவர்கள் அழிய

***தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு***
***மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்***
***கோத்திரம், கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்***
***பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.***

பொருள்: அபிராமவல்லியே! உன்னை வாயாரப்பாடி மனமாரத்தொழுது மின்னலைப் போலச் சுடர் விட்டுத் திகழும் உன் திருமேனியின் தோற்றத்தை ஒரு கணப்பொழுதேனும் உள்ளத்தில் இருத்தித் தியானம் செய்யாதவர்கள் வாழ்வில் ஈகைக்குணம், குடிப்பிறப்பு, கோத்திரம், கல்வி, நற்குணம் ஆகியவையெல்லாம் குன்றி, பிச்சைப் பாத்திரத்தைக் கையிலேந்தி வீடு வீடாகச் சென்று நின்று, பிச்சை எடுத்துத் திரிவர்.

### 68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

***பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்,***
***ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்***
***சேரும் தலைவி, சிவகாமசுந்தரி சீரடிக்கே***
***சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.***

பொருள்: அபிராமி அன்னையே! நீயே நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களிலும் சுவை, ஒளி, ஊறு, நாற்றம் என்னும் ஐந்துவகைத் தன்மைகளாய்ப் பரவி நிற்கக்கூடிய சிவகாமசுந்தரியாவாய். உன் சிறிய திருவடிகளைச் சார்ந்து நிற்கும் பேறு பெற்ற அடியவர்கள், தமக்குரிய செல்வமாய் இந்த உலகில் பெறாதவை எதுவுமே இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 69. சகல சௌபாக்கியங்களும் அடைய

***தனந்தரும்; கல்வி தரும்; ஒருநாளும் தளர்வறியா***
***மனந்தரும்; தெய்வ வடிவுந்தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா***
***இனந்தரும்; நல்லன எல்லாம் தரும்; அன்பர் என்பவர்க்கே***
***கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.***

பொருள்: நறுமண மலர் சூடிய, மேகத்தைப் போன்ற கூந்தலையுடைய அபிராமி அன்னையின் கடைக்கண்கள், அவளை வழிபடும் அடியவர்களுக்கு எல்லா வகையான ஐசுவர்யங்களையும் அள்ளித் தரும். நல்ல கல்வியைத் தரும். ஒருநாளும் ஒரு பொழுதும் தளர்வறியாத உள்ளத்தைத் தரும். தெய்வீகமான அழகைத் தரும். உள்ளத்தில் கள்ளமில்லாத உறவினர்களின் நட்பைத் தரும். இவை தவிர நல்லவை என்று இன்னும் என்னென்ன உண்டோ அவை அத்தனையையும் தரும்.

### 70. நுண் கலைகளில் சித்தி பெற

***கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்***
***பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்***
***மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்***
***பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.***

பொருள்: அபிராமியாம் அம்பிகை எழுந்தருளியுள்ள சிந்தாமணிக் கிருகம் உள்ள வனமாகிய கடம்பவனத்தில் பண்களால் களிக்கும் குரலோடிசைந்த வீணையும், அதை ஏந்தியுள்ள திருக்கரமும், திருத்தன பாரமும், இந்த மண்ணுலகிலுள்ளோரெல்லாரும் தரிசித்துக் களிப்புறும் பச்சை வண்ணமும் கொண்டு இத்தகைய திருக்கோலத்துடன் மதங்கமா முனிவரின் குலத்தில் தோன்றிய பெருமாட்டியின் எல்லையற்ற பேரழகை அடியேனின் கண்கள் கண்டு மகிழும்படி தரிசனம் செய்தேன்.

### 71. மனக்குறைகள் தீர

***அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி; அருமறைகள்***
***பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்; பனி மாமதியின்***
***குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க***
***இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே!***

பொருள்: இழந்ததை எண்ணி ஏங்கி நிற்கும் என் நெஞ்சமே! அஞ்சாதே, அழகில் வேறெவரும் ஈடாகாத அளவில் ஒப்பற்ற திருமேனியைக் கொண்ட கொடி போன்றவளும், வேதங்களின் அடி, இடை, முடி என எங்கும் திருநடம் புரிந்ததால் சிவந்த தாமரை போன்ற திருவடி மலர்களைப் பெற்றுள்ளவளும், குளிர்ச்சி பொருந்திய இளம்பிறையைத் தன் திருமுடியிலே சூடிக்கொண்டிருப்பவளுமான யாமளை என்னும் அழகிய கற்பகப் பூங்கொம்பாம் அபிராமி இருக்கும்போது உனக்கென்ன குறை?

### 72. பிறவிப் பிணி தீர

***என்குறை தீரநின்று ஏத்துகின்றேன்; இனி யான் பிறக்கின்***
***நின்குறையே அன்றி யார் குறை காண்; இரு நீள்விசும்பின்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?***
***தன்குறை தீர எங்கோன் சடைமேல்வைத்த தாமரையே.***

பொருள்: தேவி! மின்னலையும் பழிக்கும்படியான நுண்ணிய இடையை உடையவளே! மெல்லிய இயல்பினளே! எம்பெருமானாகிய சிவபிரான் உன்னுடன் கொண்ட ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, தன் குறையை நீக்கி, தன் சடா மகுடத்தின் மேல் வைத்த உன் திருவடித் தாமரைகளையே, நானும் என் குறைகளைத் தீர்க்குமாறு வேண்டித் தொழுது நிற்கிறேன். இனி நான் மீண்டும் பிறவியைப் பெற்றேனாயின் அது உன் குற்றமேயன்றி வேறு யார் குற்றம்?

### 73. குழந்தைப் பேறு உண்டாக

***தாமம் கடம்பு; படைபஞ்சபாணம்; தனுக்கரும்பு;***
***யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கென்று வைத்த***
***சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளி செம்மை; அம்மை***
***நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே.***

பொருள்: அம்பிகையாகிய அபிராமிக்குரியதான மாலை கடம்பு; ஆயுதம் ஐந்து மலரம்புகள்; வில், கரும்பு, அவளது மந்திர சாதகர்களாகிய வயிரவர்கள் துதிக்கும் நள்ளிரவு நேரமே துதிக்கும் நேரம். எனக்கு உய்வு தருவதற்கென்றே வைத்த பாதுகாப்பு அவள் திருவடிகளாகும். அவளுக்குச் சிவந்த திருக்கரங்கள் நான்கும், திருவிழிகள் மூன்றும் ஆகும். சிவந்த திருமேனியையுடைய அன்னைக்குத் திரிபுரை என்ற ஒரு பெயருமுண்டு.

### 74. தொழிலில் மேன்மை அடைய

***நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்***
***அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்***
***பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும், பாடவும்பொன்***
***சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.***

பொருள்: முக்கண்ணாகிய சிவபிரானும், வேதங்களும், திருமாலும், பிரமதேவனும் புகழ்ந்து துதித்துப் பாராட்டும் அபிராமித் தாயின் திருவடிகளையே எப்போதும் சிந்தித்துத் தியானிப்பவர்கள், அரம்பையர் நடனமாடவும், பாடவும் கூடிய பொன் மஞ்சம் இடப்பெற்ற கற்பகச் சோலையைப் பெரிதென எண்ணி இருப்பார்களா?

### 75. விதியை வெல்ல

***தங்குவர் கற்பகத் தருவின் நீழலில்; தாயரின்றி***
***மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்***
***பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்***
***கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.***

பொருள்: பெரும் பெரும் மலைகளையும், உவர்ப்புக் கடல் ஆகிய ஏழு கடல்களையும் உள்ளடக்கிய திருவயிற்றையும், மணம் மிகுந்த மலரையணிந்த அழகிய கருங் கூந்தலையயும் பெற்றவளான தேவியின் திருவுருவைத் தியானம் செய்யும் அடியவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரபதவி பெற்று கற்பக விருட்சத்தின் நிழலில் அமர்ந்து மகிழ்வர். இப்பூமியில் பிறந்திறந்து இடையறாமல் ஏற்படும் பிறவிகளினின்று விடுபட்டு தம்மைப் பெறுகிற தாய்மார்களையும் இல்லாமல் ஆவர்.

### 76. தனக்கு உரிமையானதைப் பெற

***குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம்; நின் குறிப்பறிந்து***
***மறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி; வண்டுகிண்டி***
***வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்***
***பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.***

பொருள்: தாயே! அபிராமி! வண்டுகள் துளைப்பதால் தேன் சொரியும் கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபிரானின் திருமேனியிலிருந்து அவரது இடப்பாகத்தை வலியக் கவர்ந்து, அங்கே குடிபுகுந்தவளும், ஐந்து மலரம்புகளைக் கரத்தில் தரித்தவளுமான பைரவியே! உன் திருமேனிக் கோலத்தையெண்ணி என் மனத்தில் தியானம் செய்தேன். அதன் விளைவாக உன்னுடைய திருவுள்ளக் குறிப்புணர்த்தியபடி, என் உயிரைக் கவர்ந்து செல்ல யமன் வரப்போகும் வழியை அடைத்துவிட்டேன்.

### 77. பகை அச்சம் நீங்க

***பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்***
***உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா***
***வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே***
***செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.***

பொருள்: பைரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்களின் உயிர்களைப் பலியாய் ஏற்கும் சண்டிகா தேவி, காளி, ஒளிரும் கலைகளாகிய வயிரங்களையுடைய (மண்டலங்களையுடைய) வட்டமான மேகலையையுடையவள், மாலினி, சூலி, வராகி என்றெல்லாம் குற்றம் தீர்ந்த நான்கு வேதங்களிலும் தேர்ந்த தேவியின் திருநாமங்களை அறிந்தோர் அவற்றை வரிசைப்படுத்திக் கூறுவதுண்டு.

### 78. சகல செல்வங்களையும் அடைய

***செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்***
***அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்***
***கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்***
***துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே.***

பொருள்: தந்தத்தால் கடைந்த செப்பையும், அழகிய பொற்கலசத்தையொத்த திருத்தன பாரத்தின் மேல் சந்தனக் குழம்பைப் பூசப்பெற்றவளான அபிராம வல்லியாம் என் அன்னையின் காதில் அணியப்பெற்ற முத்துக் கொப்பு, வயிரக்குழை, கருணைத் திருவிழியின் கடைப்பார்வை, பவளத்தையொத்த சிவந்த வாய், அதில் மலர்ந்து நெளியும் கருணைப் புன்னகையாகிய நிலவு ஆகியவற்றையெல்லாம் என் இரு கண்களிலும் ஓவியம் போல எழுதி மனத்தில் இருத்தி வைத்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 79. கட்டுகளில் இருந்து விடுபட

***விழிக்கே அருளுண்டு; அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன***
***வழிக்கே வழிபட நெஞ்சுண்டு; எமக்கு அவ்வழி கிடக்கப்***
***பழிக்கே சுழன்று எம் பாவங்களே செய்து பாழ்நரகக்***
***குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.***

பொருள்: அபிராமி அன்னையின் திருவிழிகளில் எமக்கெல்லாம் திருவருள் புரியும் கருணை நோக்கம் இருக்கிறது. அந்தப் பேரருளைப் பெறுவதற்காக, வேதங்கள் வகுத்துத் தந்த நன்னெறிகளின்படியே அவளை வழிபட்டுத் தியானம் செய்யும் பக்குவமுள்ள நெஞ்சம் எமக்கிருக்கிறது. இவ்வாறிருக்க, பழிச்செயல்களிலும், கொடிய பாபங்களிலும் ஈடுபட்டுத் திரிந்து பாழான நரகக் குழியில் அழுந்தும் கயவர்களுடன் எனக்கேன் இனித் தொடர்பு?

### 80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

***கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை***
***ஓட்டியவா! எண்கண் ஓடியவா! தன்னை உள்ளவண்ணம்***
***காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!***
***ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.***

பொருள்: பொற்றாமரையில் வீற்றிருந்தருளும் அழகே வடிவான தேவி! எளியவனான என்னை உன் அடியவர்களின் கூட்டத்துள் ஒருவனாய்ச் சேர்த்துக் கொண்டதும், என் கொடிய வினைகளையெல்லாம் போக்கியருளியதும், என்பால் அருள் புரிவதற்காக ஓடிவந்ததும் உன் பேரழகுத் திருக்கோலத்தை உள்ளபடியே எனக்குக் காட்டியருளியதும், அந்த அழகிய திருக்கோல தரிசனத்தைக் கண்டு என் கண்களும், மனமும் ஆனந்தப் பெருக்கால் துள்ளி மகிழ்வதும் இந்தத் திருவருள் நாடகத்தையெல்லாம் என்னிடம் ஆடிக்காட்டிய ரகசியம் என்ன?

### 81. நன்னடத்தை உண்டாக

***அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்***
***வணங்கேன்; ஒருவரை வாழ்த்துகிலேன்; நெஞ்சில் வஞ்சகரோடு***
***இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்***
***பிணங்கேன்; அறிவொன்றிலேன் எண்கண் நீவைத்த பேரளியே.***

பொருள்: அபிராமவல்லித் தாயே! தேவமாதர் உன் பரிவார தேவதைகளாக உள்ளதால் உன்னையல்லாமல் வேறொருவரை நான் வணங்கவோ, வாழ்த்தவோ இணங்கேன். நெஞ்சில் வஞ்சகம் கொண்டுள்ள கயவர்களுடன் தொடர்பு கொள்ள மாட்டேன். தன்னுடையதென எதையும் கொள்ளாமல், எல்லாவற்றையும் உன்னுடையதாகவே எண்ணும் யோகியர் சிலருடன் பிணங்காமல், நட்பு கொள்வேன். அறிவிற் குறைந்தவனாக நான் இருப்பினும், என்பால் நீ பொழியும் கருணையை நான் மறவேன்.

### 82. மன ஒருமைப்பாடு அடைய

***அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்***
***ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு,**
**வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.**

பொருள்: வண்டுகள் மொய்த்துத் திரியும் தாமரை மலரில் எழுந்தருளிய தேவி! சகல உலகங்களும் உன் ஒளியாய்ப் பரவி நிற்பதற்குக் காரணமான, ஒளிபொருந்திய அழகிய உன் திருமேனியைத் தரிசித்துத் தியானிக்கும் போதெல்லாம் என் உள்ளமும் உடலும் ஆனந்த வயப்பட்டுப் பூரிப்படைந்து தத்துவ எல்லைகளையெல்லாம் கடந்து கரைபுரண்டு பரவெளியில் ஒன்றி விடுகின்றன. நீ உபதேசித்த இந்த அதிசயமான உபாயத்தை நான் எப்படி மறப்பேன்?

### 83. ஏவலர் பலர் உண்டாக

**விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்**
**இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்**
**பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்**
**உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.**

பொருள்: அபிராமி அன்னையே! உன் திருவடியான தாமரையின் மீது அன்றலர்ந்த பல்வகை மலர்களைத் தூவி அர்ச்சனை செய்து இரவும் பகலும் வழிபடும் பெரியோர், தேவர்கள் எல்லாரும் இந்திரபதவியையும், ஐராவதம் என்ற யானையையும், ஆகாய கங்கையையும், வலிமை மிகுந்ததான வச்சிராயுதத்தையும் கற்பகச் சோலையையும் பெற்று பெருமகிழ்ச்சி கொள்கின்றனர்.

### 84. சங்கடங்கள் தீர

**உடையாளை, ஒல்கு செம்பட்டு உடையாளை; ஒளிர்மதிசெஞ்**
**சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநுண்ணூல்**
**இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்**
**படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.**

பொருள்: அடியவர்களே! எல்லாவற்றையுமே தன்னிடம் உடையவளான அன்னை அபிராமி, துவளும் இடையிலே செம்பட்டுடை தரித்தவள், ஒளிவீசித் திகழும் பிறைச்சந்திரனைச் சிரசில் அணிந்தவள். வஞ்சகரின் நெஞ்சங்களிலே ஒருபோதும் சென்றடைந்து தங்கியிராதவள். நுண்ணிய நூலைப் போன்ற சிற்றிடையை உடையவள். எங்கள் பெருமானாகிய சிவபிரானின் இடப்பாகத்தில் வீற்றிருப்பவள் என்னை இப்பூவுலகில் இனிப் பிறக்க வைக்க மாட்டாள். மீண்டும் பிறவா வரம் பெற நீங்களும் அவளையே தொழுது வேண்டுங்கள்.

### 85. துன்பங்கள் நீங்க

**பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு**
**ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்**
**தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,**
**வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.**

பொருள்: அபிராமி அன்னையே! நான் எந்தத் திசையில் பார்த்தாலும் உன்னுடைய படைகளான பாசமும், அங்குசமும், குளிர்ச்சியான சிறகுகளையுடைய வண்டுகள் அமர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீங்காரமிடும் புதுமலர்களான அம்புகள் ஐந்தும், கரும்பு வில்லும், என் துன்பங்களையெல்லாம் தீர்க்கும் உன் திருமேனியும், சிற்றிடையும், குங்குமக் குழம்பு பூசிய கொங்கைகளும் அவற்றின் மேல் தவழ்ந்தாடும் முத்து மாலைகளுமே என் விழிகளுக்குக் காட்சி தருகின்றன.

### 86. ஆயுத பயம் நீங்க

***மாலயன் தேட, மறைதேட, வானவர் தேட, நின்ற***
***காலையும், சூடகக் கையையும், கொண்டு, கதித்தகப்பு***
***வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்;***
***பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.***

பொருள்: பாலையும், தேனையும், வெல்லப்பாகையும் போன்ற இனிமையான அன்பு மொழிகளைப் பேசும் அபிராமி அன்னையே! திருமால், வேதம், அயன், தேவர்கள் ஆகியோரெல்லாம் உன்னைத் தேட, அவர்களுக்குத் தரிசனம் தராத நீ, உன் திருவடிகளையும், வளையணிந்த அழகிய திருக்கரங்களையும் கொண்டு, மும்முனைகளையுடைய சூலத்தை யமன் என்மேல் விட வரும் காலத்தில், வந்து, என் முன்னே காட்சி தந்து என்னைக் காத்தருள்வாயாக!

### 87. செயற்கரிய செய்து புகழ் பெற

***மொழிக்கும், நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்***
***விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை***
***அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்***
***பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.***

பொருள்: தம்முடைய நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்தழித்த எம்பிரான் சிவபிரானின் தவ விரதத்தைக் குலைத்து, அவரது திருமேனியின் இடப்பாகத்தைக் கைக்கொண்டு அங்கு வீற்றிருந்து ஆட்சி புரியும் அபிராமித் தாயே! சொல்லுக்கும் எண்ணத்துக்கும் எட்டாத திருவுருவம், என் கண்ணுக்கும், நான் புரியும் பூசை முதலியவற்றிற்கும் மட்டும் வெளிப்பட்டுத் தரிசனம் தருவது என்ன விந்தை!

### 88. எப்போதும் அம்பிகை அருள் பெற

***பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும்; உன் பக்தருக்குள்***
***தரம் அன்று இவன்என்று தள்ளத்தகாது; தரியலர் தம்***
***புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்***
***சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!***

பொருள்: அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தழிக்க மேருமலையை வில்லாய் வளைத்த திருக்கரத்தையுடையவனும், பிரம்மதேவனின் தலைகளில் ஒன்றைக் கொய்த திருக்கரத்தினனுமான சிவபிரானின் இடப்பாகத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் தேவி அபிராமியே! வேறொரு துணையுமில்லாத நான் நீயே காப்பாயாக என்று கூறி உன்னைச் சரணடைந்தேன். உன் அடியவர் கூட்டத்தில் சேர்க்கத் தக்கவனல்லன் எனக் கருதி என்னை நீ தள்ளிவிடுதல் உனக்குத் தக்க செயலன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 89. யோக சித்தி பெற

***சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்***
***துறக்கம் தரும், நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற***
***உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு***
***மறக்கும் பொழுது, என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.***

பொருள்: சிறந்த தாமரை மலரில் அமர்ந்திருந்தருளும் தேவி, அபிராமியே! உன் சிவந்த திருவடிகளைத் தன் தலையில் ஒருவன் வைத்தால் அவனுக்கு மோட்சத்தை அருளும் உன் துணைவராகிய ஈசனும் நீயும், எனக்கு மரணம் நேரும் காலத்தில் அறிவு மயங்கி நினைவழியும் நேரத்தில் எனக்குச் சிவானந்த அனுபவமாகிய அறிதுயில் நிலையைத் தந்தருள வருவது, உனக்கு வருத்தந்தரும் செயலாயினும்கூட, ஓடிவந்து அடியேனின் முன் காட்சி தந்து காத்தருள்வாயாக!

### 90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

***வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுதுந்து***
***இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்***
***பொருந்தாது ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு***
***விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.***

பொருள்: விண்ணுலகில் வாழும் தேவர்களுக்கு, பாற்கடலில் கடைந்தெடுத்த அமுதத்தை விருந்தாக வழங்கிய தேவி, அபிராமியே! மென்மையான மனம் படைத்தவளே! பிறப்பு, இறப்புகளால் நான் துன்பமடையாதவாறு, என் உள்ளம் என்னும் தாமரையில் வலியவந்து புகுந்து, அதையே தன் பழைய இடம்போல ஆகும்படி எண்ணி இருந்தாய். இனி என்னால் ஆகாத ஒன்றென எதுவுமே இல்லை.

### 91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற

***மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்***
***புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை***
***சொல்லிய வண்ணம் தொழும்அடியாரைத் தொழுமவர்க்குப்***
***பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.***

பொருள்: மின்னலையொத்த மெல்லிய நுண்ணிய இடையைப் பெற்றவளை, விரிந்த சடை முடியையுடைய சிவபெருமான் தழுவிய பொன்னையொத்த பிரகாசமுடைய மெல்லிய தனபாரத்தைப் பெற்றவளை, வேதங்கள் புகழந்து கூறியவாறு வழிபடும் அடியவர்களுக்கு, பல்வகை இசைக்கருவிகள் முழங்க வெள்ளை யானையின் மேல் ஏறிச் செல்லக் கூடிய இந்திர பதவியை அருள்பவள் அபிராமியன்னையாவாள்.

### 92. மனநிலை பக்குவமடைய

***பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம் பற்றி, உன்தன்***
***இதத்தே ஒழுக அடிமைகொண்டாய்; இனியான் ஒருவர்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதத்தே மதிமயங்கேன்; அவர் போன வழியும் செல்லேன்;**
**முதல்தேவர் மூவரும், யாவரும் போற்றும் முகிழ்நகையே.**

பொருள்: மும்மூர்த்திகளும் முதன்மையான தேவர்களும் வணங்கித் துதிக்கக் கூடிய வண்ணம் மெல்லிய புன்னகை அரும்பி நிற்கும் திருவாயையுடைய அபிராம வல்லியே! நல்ல பக்குவத்தை எனக்கருளி, அதன் காரணமாக என்னுள்ளம் உருகி உன் திருவடிகளைத் தொழவும், உன் திருவுள்ளத்துக்கு மகிழ்வூட்டும் நன்னெறியிலே நான் நடக்கவும் எளியவனான என்னை ஆட்கொண்டாய். எனவே, இனி நான் மற்றொருவர் கூறும் பிற சமயக் கொள்கையைப் பெரிதாக எண்ணி மதிமயங்கவும் மாட்டேன். அவர்கள் காட்டும் வழியில் செல்லவும் மாட்டேன்.

## 93. உள்ளத்தில் ஒளி உண்டாக

**நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு**
**முகையே முகிழ்முலை; மானே முதுகண்; முடிவில் அந்த**
**வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது; நாம்**
**மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.**

பொருள்: இந்த உலகங்களையெல்லாம் ஈன்றெடுத்த அன்னை ஈஸ்வரியும் அபிராமித் தாய்க்கு தாமரை மொட்டையொத்த தனபாரங்கள், அருள் நிரம்பித் ததும்பும் அழகிய விழிகள், மருண்டோடும் மானின் விழிகள். அவளுக்கு முடிவும் இல்லை; மீண்டும் பிறப்பும் இல்லை என்றெல்லாம் பலரும் வருணிக்கிறார்கள். இவற்றை எண்ணும்போது நகைப்பிற்குத்தான் இடமுண்டாகிறது. எனவே இனி நாம் இந்தக் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, அவளின் உண்மையான நிலையை உணர்ந்து கொள்ளுதலே சிறப்பாகும்.

## 94. மனநிலை தூய்மையாக

**விரும்பித் தொழும் அடியார், விழிநீர்மல்கி மெய்புளகம்**
**அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி; அறிவிழந்து,**
**சுரும்பிற் களித்து மொழி தடுமாறி, முன் சொன்னஎல்லாம்**
**தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.**

பொருள்: அபிராமி அன்னையைப் பக்தியுடன் விரும்பித் தொழும் அடியவர்கள் விழிகளிலே நீர் பெருகி, உடலெல்லாம் புளகாங்கிதமடைய, மகிழ்ச்சி பொங்கித் ததும்ப, மதி மயங்கி, தேனுண்டு மயங்கிய வண்டைப் போல, பேசும் வாய்ச் சொற்கள் கூடத் தடுமாறக் கூடிய நிலையில் பித்தர்களாகி விடுகிறார்களென்றால், அவர்கள் கடைப்பிடிக்கும் அபிராமியின் வழிபாடே மிகச் சிறந்த நன்மையான மார்க்கம் ஆகுமன்றோ?

## 95. மன உறுதி பெற

**நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது**
**ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்**
**அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாத குணக்**
**குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: என்றுமே அழிவற்ற குணக்குன்றே! அருட்கடலே! இமவானின் திருமகளாகப் பிறந்த கோமளை என்னும் அபிராமித் தாயே! நன்மையே விளைந்தாலும் தீமையே விளைந்தாலும் நான் அதைப்பற்றி நினைப்பதற்கேதுமில்லை. எனக்கென்ன நேர்ந்தாலும் அதுவனைத்தும் உனக்குத்தான் உரியவை. ஏனெனில் எனக்கரிய உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் என்னை நீ ஆட்கொண்ட அன்றே உன்னிடம் ஒப்படைத்து விட்டேனே!

## 96. எங்கும் பெருமை பெற

***கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்***
***யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய***
***சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்***
***ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.***

பொருள்: அன்னையாகிய அபிராமவல்லியை, இளமையும் அழகும் பொருந்தியவளும் கொடி போன்றவளுமான கோமளவல்லியை, அழகிய மென்மையான தாமரையைக் கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கும், குற்றமற்ற யாமளவல்லையை, ஓவியத்திலே எழுதவொண்ணாத எழில்மிக்க திருமேனியுடைய சாமளவல்லியை, சகல கலைகளுக்கும் தலைவியாய் விளங்கும் மயில் போன்றவளை, தம்மால் இயன்ற அளவு தொழும் அடியவர்கள் ஏழுலகங்களையும் ஆட்சி புரியக் கூடிய அதிபர்கள் எனத்தக்க அளவில் வளமான வாழ்வைப் பெறுவர்.

## 97. புகழும் அறமும் வளர

***ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்***
***போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,***
***காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்***
***சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.***

பொருள்: சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், பிரமன், முப்புரங்களை எரித்த சிவன், முரன் என்ற அசுரனை அழித்த திருமால், அகத்திய முனிவர், தாருகன் என்ற அசுரனுடன் மோதிப் போர் செய்து அவனை இருகூறாக்கி ஆட்கொண்ட கந்தன், கணபதி, மன்மதன் முதலாகப் புண்ணியச் செயல்கள் பலவற்றைப் புரிந்து சாதனை படைத்தவர்களாகிய எண்ணற்றோர் அபிராமியைப் போற்றி வழிபட்டு வருபவர்களாவர்.

## 98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

***தைவந்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்***
***கைவந்த தீயும், தலைவந்த ஆறும் கரந்தது எங்கே?***
***மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்***
***பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே.***

பொருள்: உண்மையான அடியவர்களின் உள்ளங்களிலன்றி, பொய் நிரம்பிய வஞ்சகர் தம் உள்ளங்களில் ஒரு போதும் புகுந்தறியாத, இளமைப் பொலிவுடன் திகழும் குயில்போன்ற தேவி! உன்னுடன் கொண்ட ஊடலின் விளைவாக, உன் திருவடித் தாமரையைப் பற்றியும் கூட ஊடல் தீராததால், பின் அதனைத் தம் திருவடியின்மேல் தரித்துக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானுக்கு, அப்போது அவர் கரத்திலிருந்த அக்கினியும், சடைமுடியிலிருந்த கங்கையாறும் எங்கே போய் மறைந்தனவோ?

### 99. அருள் உணர்வு வளர

***குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை; கோல இயல்***
***மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை; வந்துதித்த***
***வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின் மீது அன்னமாம்***
***கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.***

பொருள்: கயிலாய மலையில் உறையும் தலைவராகிய சிவபிரானின் துணைவியும் இமவானின் புதல்வியுமாகிய, கனத்த பொற்குழைகளைக் காதிலணிந்த தேவி, கடம்பமலர் வனத்தில் (மதுரை) குயிலாக விளங்குபவள். இமாசலத்தில் (கயிலை) அழகும், பெருமையும் பெற்ற மயிலாக இருப்பவள், வானத்தின் (விண் - சிதம்பரம்) மேல் வந்து உதித்த சூரியனாக இருப்பாள். தாமரையின் மேல் (மூலாதாரம்-திருவாரூர்) அன்னமாக வீற்றிருப்பாள்.

### 100. அம்பிகையை மனத்தில் காண

***குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி***
***கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்***
***விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும்; வெண்ணகையும்,***
***உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.***

பொருள்: குழையும்படி இறுகத் தழுவியபோது எம்பெருமான் சிவபிரானின் திருமார்பினின்றும் பரவிய கொன்றை மலரின் நறுமணம் கமழும் மார்பகத்தையுடைய கொடி போன்ற அபிராமியன்னையின் மூங்கிலையொத்த அழகிய நீண்ட திருத்தோள்களும், கரும்பு வில்லும், ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பக் காரணமாக உள்ள மணம் மிகுந்த அழகிய ஐந்து மலரம்புகளும், வெண் முத்தனைய புன்முறுவலும் மானின் கண்ணையொத்த திருவிழிகளும் எளியவனாகிய அடியேனின் நெஞ்சில் எப்போதும் குடிகொண்டிருக்கின்றன.

### 101. நூற்பயன்

***ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்***
***பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிஅடங்காக்***
***காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும், அங்கை***
***சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.***

பொருள்: எங்கள் தாயை, அபிராமவல்லியை, அனைத்துலகங்களையும் ஈன்றருளியவளை, மாதுளம் பூவையொத்த சிவந்த நிறத்தினளை, உலகங்களையெல்லாம் காத்து ரட்சிப்பவளை, அழகிய நான்கு திருக்கரங்களில் அங்குசம், பாசம், மலர்ப்பாணம், கரும்பு வில் ஆகியனவற்றை ஏந்தியிருப்பவளைத் தொழுபவர்களுக்கு எப்போதும் எந்த ஒரு துன்பமும் நேராது.

- அபிராமி பட்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கந்த சஷ்டி கவசம்!

(தேவராய சுவாமிகள் அருளிய கவசம் இது. அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் முருகப்பெருமான் மீது பாடப்பெற்ற கவசம். இதனை ஆறுமுகக் கடவுள் முன்பு அல்லது அறுகோணச் சக்கரத்தின் முன் பாராயணம் செய்வது நற்பலன் தரும். பிரம்மா, விஷ்ணு, சிவன், சரஸ்வதி, லெட்சுமி ஆகிய ஆறு சக்திகளும் இணைந்து ஒரே சக்தியாக-சண்முகனாக விளங்குகின்றார். சஷ்டி அன்றும் செவ்வாய்க் கிழமையிலும் இக்கவசம் படிக்க பலன் அதிகமாகும். வம்ச விருத்தி, காரிய வெற்றிக்கு, சஷ்டியன்று காலையிலும், நோய் நிவர்த்தி, கிரகதோஷ நிவர்த்திக்கு செவ்வாய்க்கிழமை மாலையிலும் படிக்க விரைவில் பலன் கிடைக்கும். இது சமஷ்டிக் கோலப் பாராயணமானதால் அறிவு, செல்வம், வம்ச விருத்தி, வெற்றித் திறன் ஆகியவை படிப்பவர் விரும்பிக் கேட்டாலும் கேளாது இருந்தாலும் தானே அருளும் அரிய கவசம் ஆகும்.

இந்த சஷ்டி கவசம் பாலன் தேவராய சுவாமிகளால் ஈரோடு மாவட்டம் சென்னிமலையிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பாடப்பட்டதாகும்.

இதே போல் ஒவ்வொரு படைவீட்டிற்கும் தனித்தனி சஷ்டிக் கவசம் உள்ளது. இந்த ஆறுபடை வீட்டிற்குரிய சஷ்டிக் கவசத்தை கந்தசஷ்டி விரத நாட்களில் ஒருநாளைக்கு 36 தடவை வீதம் ஆறு நாட்களில் 216 தடவை கூறினால் குழந்தை பாக்கியம் நிச்சயம் கிடைக்கும் என்பதும், நினைத்த காரியம் நடக்கும் என்பதும் ஐதீகம்.

இதைத் தான் சட்(ஷ்)டியில் இருந்தால் அகப்பை(கருப்பை)யில் தானே வரும் என்று பழமொழியாக கூறுகிறார்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள்
கந்தர் சஷ்டிகவசந் தனை.

### குறள் வெண்பா

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணபக வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனிய வேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காரக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொலவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாக

உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழிப் பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றதுநீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோ ரடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

★★★★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்நன்றி அறிதல்

குறள் பால் : அறத்துப்பால். குறள் இயல்: இல்லறவியல்.
அதிகாரம் : செய்நன்றி அறிதல்.

குறள் வரிசை : 101 102 103 104 105 106 107 108 109 110

**குறள் 101**

*செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது.*

**கலைஞர் உரை:**

வாராது வந்த மாமணி (என்பதுபோல், செய்யாமற் செய்த உதவி) என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப்பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா.

**மு.வ உரை:**

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

**குறள் 102**

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது.*

**கலைஞர் உரை:**

தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அது உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கப்படும்.

**மு.வ உரை:**

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை அறிந்தால் உலகைவிட மிகப் பெரிதாகும்.

**குறள் 103**

*பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது.*

**கலைஞர் உரை:**

என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது.

**மு.வ உரை:**

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிட பெரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குறள் 104

*தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்.*

**கலைஞர் உரை:**

ஒருவர் செய்யும் தினையளவு நன்மையைக்கூட அதனால் பயன்பெறும் நன்றியுள்ளவர் பல்வேறு வகையில் பயன்படக்கூடிய பனையின் அளவாகக் கருதுவார்.

**மு.வ உரை:**

ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

### குறள் 105

*உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து.*

**கலைஞர் உரை:**

உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொருத்துச் சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

**மு.வ உரை:**

கைமாறாகச் செய்யும் உதவி முன் செய்த உதவியின் அளவை உடையது அன்று, உதவி செய்யப்பட்டவற்றின் பண்புக்கு ஏற்ற அளவை உடையதாகும்.

### குறள் 106

*மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு.*

**கலைஞர் உரை:**

மாசற்றவர்களின் உறவை மறக்கவும் கூடாது; துன்பத்தில் துணை நின்றவர் நட்பைத் துறக்கவும் கூடாது.

**மு.வ உரை:**

குற்றமற்றவரின் உறவை எப்போதும் மறக்கலாகாது: துன்பம் வந்த காலத்தில் உறுதுணையாய் உதவியவர்களின் நட்பை எப்போதும் விடலாகாது.

### குறள் 107

*எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்*
*விழுமந் துடைத்தவர் நட்பு.*

**கலைஞர் உரை:**

ஏழேழு தலைமுறைக்கு என்றும் ஏழேழு பிறவிக்கு என்றும் மிகைப் படுத்திச் சொல்வதுபோல, ஒருவருடைய துன்பத்தைப் போக்கியவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான நட்பை நினைத்துப் போற்றுவதற்குக் கால எல்லையே கிடையாது.

மு.வ உரை:

தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.

குறள் 108

*நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று.*

கலைஞர் உரை:

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல; அவர் தீமை செய்திருந்தால் அதை மட்டும் அக்கணமே மறந்து விடுவது நல்லது.

மு.வ உரை:

ஒருவர் முன்செய்த நன்மையை மறப்பது அறம் அன்று; அவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும்.

குறள் 109

*கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
*ஒன்றுநன்று உள்ளக் கெடும்.*

கலைஞர் உரை:

ஒருவர் செய்யும் மிகக் கொடுமையான தீமைகூட நமது உள்ளத்தைப் புண்படுத்தாமல் அகன்றுவிட வேண்டுமானால், அந்த ஒருவர் முன்னர் நமக்குச் செய்த நன்மையை மட்டும் நினைத்துப் பார்த்தாலே போதுமானது.

மு.வ உரை:

முன் உதவி செய்தவர் பின்பு கொன்றார் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.

குறள் 110

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு.*

கலைஞர் உரை:

எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை.

மு.வ உரை:

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்முகர்

நல்லூர், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org